# நேச முகம் மறக்கலாமோ

ரமணிசந்திரன்



# நேச முகம் மறக்கலாமோ?



## 1

அன்றைய வேலை கிட்டதட்டத் திட்டமிட்டபடியே நடந்தேறி விட்டதில், குணசேகரனுக்கு மிகுந்த திருப்தி. சில சமயம் வேலை செய்ய விடாமல் யாராவது கழுத்தறுப்புக் கேஸ் வந்து, உட்கார்ந்து விடுவார்கள். பேச்சும் பயனற்றதாக இருக்கும். அவனது வேலையும் கெட்டுப் போகும்!

அவரவர் நேரம், அவரவர் சொந்தம். உருப்படியாக ஏதேனும் செய்வதோ, அன்றி வீணாக்குவதோ, அவரவர்

விருப்பம். ஆனால் மற்றவரின் நேரத்தை வீணாக்க, யாருக்கும் உரிமை கிடையாது என்று இவர்களுக்கு யார் எடுத்துச் சொல்வது?

அடி மட்டத்தில் இருந்து தொடங்கி, அதி வேகமாக வளர்ந்து கொண்டிருக்கும் குணசேகரனுக்கு, அது சற்றுக் கடினமே!

வேடிக்கை என்னவென்றால், சுமார் மூன்று ஆண்டு களுக்கு முன்னதாக... ரொம்பவும் சரியாகச் சொல்வ தானால், இந்தக் கடைசி இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பு வரை இந்த மாதிரிப் பிரச்சினை அவனுக்கு நேர்ந்ததே கிடையாது!

திரும்பிப் பார்த்தால், ஒட்டிக் கொள்வானோ என்று ஒதுங்கி ஓடியவர்கள்தான் அதிகம்! ஆனால்...

பூ மலர்ந்தால் வண்டுகளுக்கு சொல்லிவிட வேண் டியது இல்லை! மரம் பழுத்தால் வெளவால்களை வா என்று அழைக்க வேண்டியது இல்லை! ஒருவனிடம் பணம் சேர்ந்தால், அதுவும் தானாகத் தெரியும் போலும்!

தானாக என்ன? தேவையிருந்து சொகுசுக்கு மாறும் வாகனம், இருப்பிடம், உடை, அணிமணிகள்... எல்லாமே சொல்லும்தானே?

அன்று அப்படி ஓடியவர்களே, இப்போது வந்து, ஒட்டி உறவாடுவதைப் பார்த்து, குணா இன்னொரு பாடம் படித்தான்.

எந்த நிலையிலும், யாரையும் அலட்சியப்படுத்தக் கூடாது என்று ஓர் அருமையான பாடம்! தாழ் நிலையில் காயப்படுத்தும். உயர்நிலையில் வன்மம் வளர்க்கும். இரண்டுமே நல்லுறவைக் கெடுப்பனதானே?



எந்த நேரம், யார் உதவி தேவைப்படும் என்று யார் சொல்ல முடியும்?

இதை நினைத்தே, அவன் யாரிடமும் முகம் திருப்புவ தில்லை!

அத்தோடு வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால், என்ன பாடு பட்டேனும், நட்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்கிறார்களே!

ஆனால், அதுவும் பிரச்சினையாகி, அவனது வேலை நேரத்தைக் குறுக்கத் தொடங்கியபோதுதான் அவன் எரிச்சலை அடக்கி சமாளிக்க நேர்ந்தது.

ஆனால் கொஞ்ச காலமாக - சாதனாவைச் செயலாளர் பதவிக்கு உயர்த்திய பிறகு, இந்தப் பிரச்சினை, அவ னுக்கு அதிகம் இருந்தது இல்லை! தவிர்க்க வேண்டியவர் களை, அவளே பெருமளவு வடிகட்டித்தான், அவனிடம் அனுப்புவாள்.

அப்படி அனுப்புகிறவர்களிடமும் அவர்கள் வந்த விஷயம் பற்றி ஓரளவு பேசி வைத்திருப்பாள். அப்படிப் பேசும்போதே இங்கே இவனுக்கும் விவரம் வந்து விடும் என்பதால், குணசேகரின் பொன்னான நேரம் வீணாவது, இப்போது, கிட்டத்தட்ட நின்றே போயிற்று எனலாம்.

இப்படியே போனால், சீக்கிரமே தொழிலை இன்னும் வேகமாக வளர்க்கலாம்...

கண்ணாடித் தடுப்புக்கு அந்தப் பக்கமாக சாதனா கம்ப்யூட்டரை உறையிட்டு மூடுவது தெரிந்தது. இனி அவள் கிளம்பி விடுவாள்.

இதிலும் சாதனாவிடம் நீக்குப் போக்கு இருந்தது. எப்போது மணி ஐந்தடிக்கும், கம்ப்யூட்டரை இழுத்து

மூடிவிட்டு ஓடலாம் என்று கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே வேலை செய்ய மாட்டாள். வேலை அதிகம் இருந்தால், இருந்து முடித்துக் கொடுத்து விட்டுத்தான் போவாள்.

எனவே, வேலை முடிந்து விட்டாலோ, அல்லது அவளுக்குச் சொந்தவேலை என்று கேட்டாலோ, மணியைப் பாராமல், குணாவே அவளை அனுப்பி விடுவதும் உண்டு!

பிரச்சினையற்றுப் பணி செய்கிறவள்!

ஆனால், சாதனாவுக்குப் பதவி உயர்வு கொடுக்கும் போது, குணசேகர் இப்படி எண்ணவில்லை.

சொல்லப் போனால், ஒரு சின்ன வயதுப் பெண்ணுக்கு அலுவலகத்தில் வேலை கொடுக்கவே, முதலில் அவனுக்குப் பிடிக்காமல்தான் இருந்தது!

ஆனால், குணாவின் விற்பனைப் பொருட்களை, அதற்கு உரிய வாடிக்கையாளர்களின் மனதைக் கவருமாறு வடிவமைத்துத் தருவதோடு, ஓரளவு அவனுடைய நண்பனாகவும் ஆகிவிட்ட முகுந்தனின் வேண்டுகோள்!

அவனுடைய தங்கை படித்து முடித்து விட்டாளாம். கண்ட இடத்துக்கு வேலைக்கு அனுப்புவதைவிட, இங்கே தெரிந்த இடத்தில் அவள் பணி புரிந்தால், வீட்டில் எல்லோருக்கும் நிம்மதியாக இருக்கும் என்று கேட்ட போது, ஒரேயடியாகத் தட்ட முடியாமல் போயிற்று!

ஆனால், அப்போது அவன் கேட்டது, சாதாரணமாய்க் கிட்டத்தட்ட ஒரு கிளார்க் வேலைதான். கணக்குப் பார்க்கிற அளவு தான். தப்பு வர வாய்ப்பில்லை என்று, குணசேகரனும் ஒத்துக் கொண்டு வேலை கொடுத்தான்.



கொடுத்த வேலையை, அவளும் குறைவின்றிச் செய்தாள்.

குணசேகரனுடைய பழைய செயலாளர் தன் மகனுடைய பிள்ளையைப் பார்த்துக் கொள்ள என்று வெளிநாடு சென்றுவிட, காலியான இடத்துக்கு, மறுபடியும் தங்கையைப் பரிந்துரை செய்தான் முகுந்தன்.

இது முகுந்தனது வேலை மட்டும் அல்ல, சாதனாவின் முயற்சியும் என்று குணசேகரன் உணர்ந்தே இருந்தான்.

மற்றபடி, இந்த வேலை காலியானதே, முகுந்தனுக்குத் தெரிய வாய்ப்பில்லையே!

சாதனா இந்த முயற்சி எடுத்ததையும் குறை கூறுவதற்கில்லை. ஓர் உயர்வைப் பெற முயற்சி செய்வதைப் பிழையாக எப்படி எண்ணுவது?

அப்புறம், பிடித்து வைத்த களிமண் பொம்மை மாதிரி, இருந்த இடத்திலேயே இருக்க வேண்டியதுதான்.

அதைவிட, அவள் இந்த முயற்சி செய்தது, குணசேகரனுக்கு சந்தோஷம்தான்.

இரண்டு ஆண்டுகளாக, அவளது வேலையிலும் குறைப்பட ஒன்றுமில்லை!

ஆனால், இந்த வேலையில் மூளைக்குக் கூடுதலாக வேலை உண்டே என்றுதான், குணா தயங்கியது. ஆனால் அவனே எதிர்பார்த்திராத அளவுக்கு, சாதனா சிறப்பாகப் பணி புரிந்தாள்.

ஒரு சமயத்தில், முகுந்தன் தங்கைக்காக முதலில் வேலை கேட்டபோது, இவளெல்லாம் திருமணம் செய்து கொண்டு, குழந்தை குட்டி என்று குடும்பத்தைப் பார்த்தால் என்ன, என்று குணசேகர் எண்ணியிருக்கிறான்.

ஆனால் இப்போதோ, எப்போது திருமணம் என்று அழைப்பை நீட்டி விடுவாளோ என்று, அவ்வப்போது அவனுக்கு உள்ளூரக் கவலைதான் ஏற்பட்டுக் கொண் டிருந்தது.

பலதையும் யோசித்தவாறே வேலை செய்து கொண் டிருந்தவனுக்குத் திடுமென மறுபடியும் சாதனாவின் நினைவு வந்தது.

கம்ப்யூட்டரை மூடி வைத்தவள், இன்னும் ஏன் சொல்லிக் கொண்டு செல்ல வரவில்லை?

'லாப்டாப்'பில் மணியைப் பார்த்தால், அவள் கம்ப் யூட்டரை மூடிப் பத்து நிமிடங்களுக்கு மேல் ஆகி யிருந்தது!

சொல்லாமலேயே போயிருப்பாளோ என்றால், அப்படிப் பழக்கம் இல்லை!

முன்பு 'கிளார்க்' வேலை செய்து கொண்டிருந்தபோது, அவனிடம் வந்து சொல்லிச் செல்வதில்லைதான். அதற்கு அவசியமும் கிடையாது. ஆனால், செயலாளர் என்று ஆன பிறகு, அவனிடம் வந்து மறுநாளைக்குரிய வேலை பற்றிக் கேளாமல் சாதனா போனதே இல்லை!

என்னவாக இருக்கும் குணசேகரன் யோசித்தபோது, அவனது தடுப்புக் கதவின் முன் நிழலாடியது.

கூடவே, கதவைத் தட்டி ''உள்ளே வரலாமா, சார்?'' என்று கேட்டதும் சாதனாவேதான்.

அனுமதி கேட்டு உள்ளே வந்தவளைச் சிறு வியப் புடன் நோக்கி, ''இன்னும் நீ கிளம்பவில்லையா என்று இப்போதுதான் யோசித்தேன்! வேலை முடிந்து விட்டது தானே?'' என்று முறுவலோடு வினவினான் குணசேகரன்.



பதிலுக்குச் செய்த புன்னகையில் லேசான பதட்டம் தெரிந்தது அவனுக்கு.

என்னவாக இருக்கும் என்று குணா யோசிக்கும் போதே, ''உங்களைப் பார்க்க, என் தந்தை வந்து காத்திருக் கிறார், சார்!'' என்றாள் அவள் மெதுவாக.

"இங்கே வந்து காத்திருக்கிறாரா? ஏன்? என்ன விஷயம்?'' என்று கேட்கும்போதே, குணசேகரனுக்கு விஷயம் புரிந்துவிட்டது.

அவன் அவ்வப்போது எதிர்பார்த்ததுதான்! ஆனால் இப்படி உடனே இருக்கும் என்று எதிர்பார்க்கவில்லை!

மகளுக்குத் திருமணம் எனப் போகிறார்! செயலாளர் பதவிக்கு வேறோர் ஆள் பார்க்க வேண்டும்! தொல்லை!

ஆனால், இதில் அவன் செய்வதற்கு எதுவும் இல்லை! சரிதான் என்று தலையாட்டிவிட்டு, வேறாள் பார்ப்பது தவிர! அதுதான் நாகரீகமும் கூட!

நடக்கப் போவது, நல்ல விஷயம் என்பதால், அவனும் அதை நல்ல விதமாகவே ஏற்றுக் கொண்டாக வேண்டும். நண்பனுடைய தங்கை வேறு அல்லவா?

''அவரைக் காத்திருக்க வைப்பானேன், சாதனா?'' என்று கேட்டான் குணா. ''அவர் வந்ததுமே, கூட்டி வந் திருக்க வேண்டியதுதானே? போ. போய்க் கூட்டி வா! அப்படியே பக்கத்து ஹோட்டலுக்கு மூன்று காபிக்கு சொல்லிவிட்டு, அவரை அழைத்து வா'' என்றான் தொடர்ந்து.

''இ... இல்லை, சார். காபி... காபி எல்லாம் வேண்டாம். நான்... வந்து அவர் உங்களிடம் தனியே பேச வேண்டு மாம். நான் அங்கே வெளியே காத்திருக்கிறேன்'' என்று

சிறு தடுமாற்றத்துடன் பேசியவளை வியந்து நோக்கி னான் அவன்.

இந்த தடுமாற்றம், சாதனாவிடம் அவன் அறியாதது!

ஏன் என்று புரியாவிட்டாலும், ஓர் ஊகம்... யாரும் அவனுக்குத் தெரிந்த வரன் பற்றிப் பேச வந்திருப்பாரோ என்று தோன்றியது. தெரிந்த நல்லதைச் சொல்ல வேண்டியதுதான்! சொல்ல வேண்டியதும் நல்லதாக இருக்கட்டும்!

சாதனாவைப் பார்த்து, ''காரணம் எதுவானாலும், பெரியவரைக் காக்க வைக்க வேண்டாம், சாதனா. போய், அவரை உடனே வரச்சொல்'' என்றான்.

அவளது நடை லேசாகப் பின்னித் தளர்ந்தது கூட, அவனுக்கு அதிசயமே!

பிரச்சினை எதுவானாலும், சற்றுப் பொறுத்தால், தெரிந்து விட்டுப் போகிறது!

சாதனா, முகுந்தனுடைய தந்தையிடம் குணசேகரன் அதிகம் பேசியது இல்லை என்றாலும், அடையாளம் தெரிகிற அளவு பரிச்சயம் ஆனவரே!

வயதில் பெரியவருக்கு உரிய மரியாதையைக் கொடுத்து, எழுந்து வரவேற்று, அவனது மேஜைக்கு எதிர்ப்புறம் இருந்த நாற்காலியில் உட்காரச் சொன்னான் குணா.

அவர் அமர்ந்ததும், தானும் தன் இடத்தில் அமர்ந்து ''சொல்லுங்கள் சார்! உங்களுக்கு நான் எந்த விதத்தில் உதவக்கூடும்?'' என்று இன்குரலில் வினவினான்.

சில கணங்கள், குணசேகரனை ஆராய்வது போலப் பார்த்தார் அவர்.



பிறகு, ஏதோ புரிந்தது போலத் தலையை ஆட்டி, ''இப்போது புரிகிறது!'' என்று புன்னகை செய்தார், அவர்.

''என்ன சார் புரிகிறது?''

''நான் வந்த வேலையைச் சொல்லும்போது, உங்களுக்கே புரியும்!'' என்றார் அவர்.

''அப்படியானால், அதையேனும் சொல்லுங்கள்!'' என்று அவரை ஊக்கினான் குணசேகரன்.

சிரித்து விட்டு, ''இப்போது இன்னமும் நன்றாகத் தெரிகிறது!'' என்றார் அவர்.

குணாவுக்குப் போரடிக்கத் தொடங்கியது.

வந்த வேலையை விட்டுவிட்டு, இப்படிச் சுற்றி வளைத்துப் பேசுவதால் யாருக்கு என்ன லாபம்? நேரடியாக விஷயத்தை சொன்னால், அதற்கு என்னென்ன செய்வது என்றே யோசிக்கவேனும் செய்யலாம்!

இதையெல்லாம் வாய்விட்டுச் சொன்னால், மரியாதைக் குறைவாகப் படும் என்பதால் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

நிமிர்ந்து அமர்ந்து, தொண்டையைச் செருமி, அவர் மீண்டும் பேச ஆயத்தங்கள் செய்யவும், இது சாதனாவின் திருமண விஷயம்தான் என்று, குணசேகரனுக்கு கிட்டத்தட்ட நிச்சயமே ஆயிற்று!

சந்தோஷம், வாழ்த்துக்கள், என்று விவரத்தை கேட்டதும் சொல்ல வேண்டிய வார்த்தைகளை, அவன் மனதுள் தயார் பண்ணிய வேளையில், அவர் பெயர் தண்டபாணி, ஒருவாறு பேசத் தொடங்கினார்.

''நான் சொல்லப் போவது, உங்களுக்குக் கொஞ்சம் அதிர்ச்சியாக இருக்கும்...'' என்று பெரியவர் தொடங்கவும், குணாவுக்கு தெள்ளத் தெளிவாகத் தெரிந்து போயிற்று...!

இவ்வளவு இழுப்பதைப் பார்த்தால், திருமணம் விரைவிலே இருக்கும் என்று தெரிகிறது! அவள் இடத் துக்கு ஆள் இல்லாமல் முடியாது 'கம்பாட்' ஏஜென்சியில், தேவைக்குப் பொருத்தமாக ஆள் பார்த்துத் தருகிறார்கள் என்று கேள்வி... அல்லது 'மேக் ஷ்யூரா?' எது மேல்?

உள்ளூர யோசனை ஓட, பார்வையைத் தண்டபாணி மீது பதித்து, முழுக் கவனம் போலக் காட்டிக் கேட் டிருந்தவன் எதிர்பார்த்த விதமாகவே அவரது வார்த்தைகள் விழுந்தன.

''.... ஆனால் சாதனாவுக்கு வயதாகிறது. உங்கள் நிறுவன பைலில் நீங்களே பார்த்திருப்பீர்கள். இருபத்து நாலு தொடங்கி விட்டது! ஒரு நல்ல மாப்பிள்ளையைப் பார்த்து, அவளுக்குத் திருமணம் செய்து வைப்பது, பெற்ற தகப்பன் என்கிற முறையில் என் கடமை இல்லையா?''

தவிர்க்க முடியாது என்று உணர்ந்து, மனதில் ஏற்று, அடுத்துச் செய்ய வேண்டியதையும் திட்டமிட்டு விட்ட படியால், மறுபடியும் அவரது பேச்சில் முழுக் கவனத்தை வைத்து ''நிச்சயம் சார்!'' என்றான் குணசேகரன்.

''அந்த மாப்பிள்ளை, நல்லவராக, சாதுவுக்குப் பொருத்தமானவராக, அவளுக்கும் பிடித்தவராக இருக்க வேண்டும்...''

''ஆமாமாம். நீங்கள் சொல்வது ரொம்ப சரி...'' என்று ஒத்துப் பேசினான் அவன்.

இதையெல்லாம், அவனிடம் வந்து சொல்கிறாரே, அவனா மாப்பிள்ளை பார்க்கப் போகிறான் என்று அவ னுக்கு உள்ளூரச் சிரிப்பாக இருந்தது!



வேடிக்கையை ரசித்த வண்ணம் ஒத்துப் பேசியவ னுக்கு, அவனிடம் வந்து தண்டபாணி இந்த விவரம் சொன்னதன் காரணம், அவரது அடுத்த வார்த்தைகளில் புரிந்தது.

''சொன்னால், நீங்கள் உடனே புரிந்து கொள்வீர்கள் என்று சாது நிச்சயமாகச் சொன்னாள் சார்!'' என்று மகிழ்ந் தவர். அந்தப் புன்னகையுடனேயே, ''பாருங்கள் மிஸ்டர் குணசேகரன், இந்தப் பெயருக்கு ஏற்றபடியான, உங்கள் குணம், தோற்றம், தொழில் திறமை எல்லாமே எங்கள் குடும்பத்தில் எல்லோருக்கும் பிடித்திருக்கிறது! அதிலும் சாதுக்குட்டிக்கு ரொம்பவே. அதனால் உங்களையே, எங்கள் வீட்டு மாப்பிள்ளையாக்கிக் கொள்ள விரும்பு கிறோம். உங்கள் சம்மதத்தையும் சொல்லி விட்டீர்களா னால், மேற்கொண்டு ஏற்பாடுகளைச் செய்ய வசதியாக இருக்கும்!'' என்று தொடர்ந்து கூறி முடித்தார்.

அவனுக்கு ரொம்பவே திகைப்புதான்!

ஆனால், முகத்தில் எதையும் காட்டாமல் அவரை ஒரு தரம் நோக்கிவிட்டு, வெளிப்புறம் பார்வையைத் திருப்பி னான்.

அண்ணனும் தங்கையும் அங்கேதான் அமர்ந்திருந் தனர்.

எழுந்து சென்று, அவர்கள் இருவரையும் உள்ளே அழைத்து வந்தான்.

இருவரையும் அமரச் சொல்லிவிட்டு, சாதனாவை நேரே பார்த்தான்.

''அப்பா என்னிடம் பேசிய விவரம், உனக்கும் தெரி யும்தானே?'' என்று அவளிடம் நேரடியாகவே கேட்டான்.

பார்வை தாழ "தெரியும்..." என்றாள் அவள்.

"சொல்லு. அந்த மாதிரி எண்ணம் தோன்றும் வித மாக, ஒரு தரமேனும்... ஒரு பார்வையேனும் நான் பார்த்திருப்பேனா?"

'இல்லை' என்பது போலத் தலையசைத்து விட்டு சாதனா பேசாதிருக்க, அவள் அண்ணன் பொறுப்பேற்று பதில் சொன்னான்.

"நிச்சயமாக இல்லை என்று எல்லோருக்கும் தெரியும், குணசேகர்! சரியாகச் சொல்வதானால், அந்தக் குணமே எங்கள் எல்லோரையும் ஈர்த்தது எனலாம்! இந்தக் காலத்தில், இப்படியொ..."

கை உயர்த்தி, அவனது பேச்சைத் தடுத்து நிறுத்தி னான் குணசேகரன்.

"இதை நான் வெளியே சொன்னது இல்லை! ஆனால், எனக்கு ஏற்கனவே, நான் ஏற்கனவே திருமணம் ஆனவன்!" என்றான் தெளிவாக.



## 2

சற்று நேரம் அங்கே ஒரு பேரமைதி, ஒரு சிறு ஊசி விழுந்தால்கூட, அது பேரோசையாகக் கேட்கும் என்பது போலப் பயங்கர நிசப்தம் நிலவியது!

ஏதோ எண்ணங்களில் ஆழ்ந்தவனாகக் குணசேகரன் மேஜை மீதிருந்த பென் ஸ்டாண்டை வெறித்திருக்க,



மற்ற மூவருமே, கற்சிலைகளாகி மாறி விட்டவர்கள் போல அமர்ந்திருந்தனர்.

திருமணத்தை அவன் உடனே ஒத்துக் கொள்வான் என்று நூறு சதவீதமாய், அவர்கள் எண்ணவில்லை என்றாலும், பெரும்பாலும் அவர்களுக்கு நிச்சயமே!

தொழில், தொழில் என்று பணம் பெருக்குவதில் ஆழ்ந் திருப்பவன் தான். ஆனால் அந்தத் தொழிலிலும் கை கொடுக்கும் மனைவி வந்தால், வேண்டாம் என்று ஏன் சொல்லப் போகிறான்?

சாதனா அழகியல்ல என்று வக்ரம் பிடித்தவன் கூடச் சொல்ல மாட்டான்!

அழகி, கெட்டிக்காரி, அவனது வேலையிலேயே பாதி செய்கிறவள்! அப்படி ஒன்றும், அவள் இல்லாத வீட்டுப் பெண்ணும் அல்ல!

இதைவிட வேறு என்ன வேண்டும், குணசேகர னுக்கு?

அப்போதைக்குத் திருமணம் பற்றிய எண்ணம், குண சேகரனுக்கு இல்லை என்பதுதான் சாதனா, முகுந்தனுக் கும், ஆனால், தேவையான இந்த பல விஷயங்களை எடுத்துச் சொன்னால், புரிந்து கொண்டு ஒத்துக் கொள் வான் என்பதில், அண்ணன், தங்கை இருவருக்குமே ஐயம் இருக்கவில்லை.

அதனாலேயே, தந்தையிடமும் விவரத்தைச் சொல்லி, மணம் பேச அழைத்து வந்திருந்தனர்.

ஆனால், இப்படி ஓர் அணுகுண்டைத் தூக்கிப் போட்டு விட்டானே! ஏதோ தோன்ற, சாதனா, குணசேகரனை நிமிர்ந்து பார்த்தாள்.

தலை குனிந்து அமர்ந்திருந்த தந்தை, அண்ணனையும்!

மீண்டும், குணசேகரனிடம் பார்வையைத் திருப்பியவள் ''நீங்கள் பொய் சொல்கிறீர்கள்!'' என்றாள் ஆத்திரத்துடன்.

சிறு வியப்புடன் நோக்கி ''இல்லை சாதனா...'' என்றவன் பேச்சில் குறுக்கிட்டு ''ஆமாம் பொய்தான்... உங்களுக்கு என்னைப் பிடிக்கவில்லை என்றால், அதை நேரடியாகச் சொல்லியிருக்கலாமே! எல்லோருக்கும், எல்லோரையும் பிடித்திருக்க வேண்டிய கட்டாயமா என்று, திரும்பிப் போயிருப்போமே! அவ்வளவு நாகரீகம் இல்லாதவர்களா, நாங்கள்? அதை விட்டு எதற்கு இந்தப் பொய்யான கதையெல்லாம்?'' என்று குமுறினாள் அவள்.

''இது கதை இல்லை, சாதனா...!'' என்றான் அவன்.

''கதைதான்! கதையேதான் என்று எனக்கு நிச்சயம்!'' என்றாள் அவள் அழுத்தமாக திருத்தமாக. ''எப்படி என்கிறீர்களா? உங்களை எனக்கு மூன்று ஆண்டுகளாகத் தெரியும். இந்த மூன்று ஆண்டுகளாக, வேறு யாரோடும், நீங்கள் அப்படிப் பழகியது இல்லை! இது எனக்கு நிச்சயம்!''

உதடுகளில் மட்டுமாய் லேசான முறுவல் ஒன்று வந்து போக ''இதில் ஒரு திருத்தம், இருக்கிறது, சாதனா... ஆண்டுகள் மூன்றல்ல... ஐந்து... கடந்த ஐந்து ஆண்டுகளாக, என் மனைவியையோ, அவளுடைய உறவினரையோ, நானாகச் சென்று பார்த்ததே கிடையாது. அங்கிருந்தும், அப்படி எந்த முயற்சியும் நடந்தது இல்லை. அதனால், நான் மணமானவன் என்பது, யாருக்கும் தெரியாமலே போயிருக்கக் கூடும். சாத்தியமே!'' என்றான் அவன் அமைதியாகவே!



மறுக்க முடியாத விவரம், அவன் சொன்னது போலத் தான் நடந்திருக்க வேண்டும்!

ஏதோ தோன்ற ''குழந்தை இருக்கிறதா?'' என்று கேட்டார் தண்டபாணி.

அவன் மறுப்பாகத் தலையசைத்தான். ''மணமாகி, சீக்கிரமே பிரிந்தும் விட்டீர்கள் போல?''

இந்த விவரம் பேச அவனுக்கு விருப்பம் இல்லைதான்.

ஆனால், அவர் பேச வந்த விஷயத்தின் தன்மையால், அவனால் மறுக்கவும் முடியவில்லை! அத்தோடு அவனுக்கே அதிசயமாக, பழைய வலி இப்போது தெரியவில்லை. சிறு வெறுப்பு மட்டுமே! பிடிக்காததைப் பார்த்தால், தலை திருப்பிச் செல்வதில்லையா? அது போல!

காலம் மனப் புண்ணை ஆற்றும் என்பது உண்மைதான் போலும்!

எனவே, தண்டபாணிக்குச் சாதாரணமாகவே பதில் சொன்னான், குணசேகரன் ''ஆமாம் சார். மணமாகி மூன்றே மாதங்கள் ஒன்றாக இருந்தோம். அதற்குள்ளாகவே, இது சரி வராது என்று புரிந்து போயிற்று. பிரிந்து விட்டோம். அதிலிருந்து, உழைப்பு மட்டும்தான், என் உயிர் வாழும் மந்திரம்! வேறு நினைத்ததே இல்லை!''

மகளையும் மகனையும் ஒரு தரம் பார்த்து விட்டு ''நினையுங்கள் சார்!'' என்றார் தண்டபாணி. ''இனியேனும் நினையுங்கள். விவாகரத்து ஆகி விட்டதா?''

அந்த வார்த்தையே புதிது போலச் சற்று திகைத்தான், அவன்.

பெரியவர் சொல்வது போல, நினைத்துப் பார்க்க வேண்டியது என்பதோடு, இன்றைக்கு இது சாதாரணம் தானே?

''அங்கே செய்திருக்கலாம். ஆனால், எனக்குத் தெரியாது'' என்றான்.

''அங்கேயும் நடந்திருக்காது 'எக்ஸ் பார்ட்டி'யாகத் தீர்ப்பு சொல்வதானாலும், பல ஆண்டுகள் ஆகும் என்று கேள்வி!'' என்றவரின் பார்வை, மீண்டும் மகளிடம் பாய்ந்து மீண்டது. ''என்ன சார் இந்த வயதில் இவ்வளவு பணத்தை வைத்துக் கொண்டு, துறவி போல... ஊகூம். சரியே இல்லை! முதலில் இந்த 'டைவர்ஸ்' விஷயம் போய்ப் பாருங்கள்! ஐந்து ஆண்டுகளாகப் பிரிந்து இருக்கிறீர்கள் என்பதால், இரு தரப்பும் ஒத்துப் போனால், உடனே ரத்து கிடைத்து விடும். திரும்பவும் சொல்கிறேன். எங்கள் எல்லோரையும் பொறுத்த வரையில் நீங்களே என் மருமகன். வில்லங்கம் இல்லாமல், நல்லபடியாக வேலையை முடித்துக் கொண்டு நீங்கள் வரும் நாளை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்போம்! நீ என்னம்மா சொல்லுகிறாய்?'' என்று மகளிடம் கேட்டார் அவர்.

''என்னிடம் கேட்க வேண்டுமாப்பா? என் மனதைத் தான் அப்படியே படித்துச் சொல்லி விட்டீர்களே! ஆனால், எனக்கும் ஒரு திருத்தம்! இவரிடம், இவ்வளவு பணம் இல்லாவிட்டாலும், என் முடிவு இதுவாகத்தான் இருக்கும்'' என்றாள் சாதனா, உறுதி தொனித்த குரலில்.

தொடர்ந்த சிறு அமைதியை முகுந்தன் கலைத்தான்.

''எல்லாம் நல்லபடியாக நடக்கும் என்று நம்புவோம். குணசேகர் எப்படியும் ஒரு நல்ல விஷயமாகப் பேச்சைத் தொடங்கி விட்டோம். நல்ல முடிவையும் எதிர்பார்த்து...'' என்று கைப்பெட்டியைத் திறந்தான்.



உள்ளிருந்து உயர் ரக இனிப்புகளோடு கூடிய டப்பாவை எடுத்து திறந்து, குணசேகரனிடம் நீட்டினான்.

சாதனாவின் யோசனை என்று தெரிந்தது. ஏனெனில், ஏதாவது விழா என்றால், அலுவலகத்தில் எல்லோருக்கும், குணசேகரன் இதே இனிப்பைத்தான் வாங்கிக் கொடுப்பது. கெட்டிக்காரி என்று, அவன் மனம் தட்டிக் கொடுத்தது!

ஆனாலும் ''முதலில் பெரியவர்களிடம் கொடுங்கள், முகுந்தன்'' என்றான்.

தண்டபாணியைத் தொடர்ந்து, அவனும் எடுத்துக் கொள்ள அண்ணன் தங்கை இருவர் முகங்களும் மலர்ந்தன.

இனிப்பை உண்டபடி, நால்வருமாகச் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு, சாதனாவுடைய குடும்பம் கிளம்பியது.

விடைபெறும்போது மட்டும், ''திரும்பத் திரும்ப வற்புறுத்துவதாக எண்ண வேண்டாம் சார், ஆனால், உங்களைப் போல ஒருவர் அமோகமாக வாழ வேண்டும். சீக்கிரமாக முயற்சி எடுங்கள். வரட்டுமா?'' என்று நினைவுறுத்தி விட்டே தண்டபாணி கிளம்பினார்.

அவன் மட்டுமாக வாழவேண்டும் என்பதற்காகவா சொல்கிறார் என்று கிண்டலாக எண்ணியபோதும், அந்த அக்கறை குணசேகரனுக்கும் இதமாகவே இருந்தது.

பல ஆண்டுகளாக, அவனிடம் யாருமே அக்கறை காட்டி அவனுக்குப் பழக்கமே கிடையாது. பழக்கம் இல்லாததால் அவன் அதற்காக ஏங்கியதும் இல்லை!

இப்போது அவனது சொந்த வாழ்வு பற்றிய இந்த அக்கறையும் அறிவுரையும்..

ஆனால் அவன் வாழ்க்கையை வீணாக்கவா செய்கிறான்?

முதல் ஓர் ஆண்டு மிகவும் கஷ்டப்பட்டான். உடல், மனம், இரண்டுக்குமே பல வருத்தங்கள்! மன வருத்தத்தை சகித்து, உடல் வருத்தத்தைப் பொருட்படுத்தாமல் உழைத்த உழைப்பு! அதன் சன்மானமே, இன்றைய உயர்நிலை!

இன்று அவனது பேருக்குப் பின்னால் இருக்கும் பல கோடிப் பெறுமானம்! இருப்புக்குத் தக்கபடியும், முதலீடாகவும் வாங்கிப் போட்ட வீடுகள், இடங்கள்! வரி கழிப்பிற்காக மாற்றும் கார்கள்.

ஆனால் இன்றும் அவன் உழைப்பை அலட்சியப் படுத்தவில்லை.

பழைய பிரம்பு நாற்காலி, இதமாக அமுங்கிக் கொடுக்கும் நூல் மெத்தை சோபாவாக, மூன்று பேரோடு பகிர்ந்து கொண்ட ஒற்றை அறை, நகரின் முக்கியமான பகுதியில் உல்லாச வசதிகளோடு கூடி பெரிய ப்ளாட்டாக, வாடகை சைக்கிள் ஏசி காராக மாறிய போதும், உன்னிப்பும் கவனமுமாக அவனது உழைப்பை மட்டும் அவன் சற்றும் குறைத்தானில்லை. உழைப்பின் தரத்தையும்.

குறைக்கும் எண்ணமும் இல்லை!

குறைத்தால், இஞ்சினைக் கழற்றி விட்ட ரயில் வேகம் குறைந்து நிற்பது போலத் தன் முன்னேற்றமும் குறைந்து போகும் என்பது அவன் எண்ணம்!



ஆனால், சிறு வயதிலிருந்து உடலைக் கட்டுக்கோப்பாக வைத்திருந்த பழக்கம் என்பதால், உடல் பயிற்சி, தியானம், எதையும் அவன் விட்டு விடவில்லை.

இடையில் தோந்த அந்தக் கரும்புள்ளி மட்டும் இல்லை என்றால்...

கிட்டத்தட்ட மறந்திருந்த புள்ளி! நீக்கி விடத்தான் வேண்டும்!

தண்டபாணி... சாதனாவுடைய தந்தை சொன்னது போல, வில்லங்கத்தை விலக்கித்தான் ஆக வேண்டும்! அது ஒரு குறைபாடு எதற்கு இருப்பது?

வில்லங்கம் நீங்கும் வரை காத்திருப்பார்களாமே! அது, நீக்க முடியாதது ஆகிவிட்டால்? சாதனா காலம் முழுதும் காத்திருப்பாளாமா? என்ன அசட்டுத்தனம்?

அவனது சம்மதம் தெரியுமுன்பாகவே, இனிப்பு வாங்கி வந்தது அதிகப்படி என்று எண்ணும்போதே, ஏன் கூடாது என்றும் தோன்றியது.

சொந்த பந்தம் எதுவும் இல்லாது தனித்திருக்கும் ஓர் இளைஞன்! தவறான நடவடிக்கைகள் எதுவும் கிடையாது என்று... கவனித்திருப்பார்கள். எடுத்துச் செய்ய ஆள் இல்லாமல் தனித்துக் கிடப்பதாக நினைத்திருப்பார்கள்!

தொழில் நிலவரம், கூடுதலாக உந்தியிருக்கக்கூடும். அது இல்லை என்றால் நம்புவதற்கில்லை.

ஆனால், மணமானவன் என்று தெரிந்த பிறகும், மருமகன் நீயே... ஆனால் வில்லங்கத்தை விலக்கி விட்டு வா என்றதுதான், அவனை இளக்கியது.

அதுதான், ஐந்து ஆண்டுகளாகத் தொடர்பில்லையே. இனி எங்கே வரப் போகிறார்கள்? கோயிலில் வைத்துத்

தாலியை கட்டி, வாழ்க்கையைத் தொடங்குங்கள் என்கிற மாதிரி ஒரு குறிப்புக் கூடக் கொடுக்கவில்லை!

கௌரவமான வாழ்க்கைதான் குறிக்கோள் என்றதுதான். ஏன் கூடாது என்ற கேள்வியை அவனுள் எழுப்பியது எனலாம்.

மெய்யாகவே, சற்று தீவிரமாகவே யோசித்தான். ஏன் கூடாது?

எப்போதும், சாதனா சென்ற பிறகும், குறைந்தது ஒரு மணி நேரம் இருந்து, மறுநாள் வேலை முழுவதுமாகத் திட்டமிட்டு வைத்து விட்டே, தன் இருக்கையில் இருந்து அவன் எழுவது வழக்கம்!

ஆனால், இன்று வேலை ஓட மறுத்தது!

ஒரே பிடியாக முயற்சி செய்ய இவனுக்கு மனம் வர வில்லை!

எங்கெங்கோ ஓடுகிற மனதை, எத்தனை முறை இழுத்துப் பிடிப்பது? அரை குறை கவனத்துடன் செய்யும் வேலையில் முக்கியமான குறிப்புகள் ஏதும் விட்டுப் போய்விடக் கூடும்! வாடிக்கையாளர்கள, அவனை நம்பி, அவன் மூலம் நடத்தும் வியாபாரம். சிறு தவறும் நேர விடாது காப்பதே, அவனது பெரும் மூலதனம்! அதை கெடுத்துக் கொள்ளக் கூடாது!

இந்த எண்ணம் தோன்றியதுமே, குணசேகரன் எழுந்து விட்டான்.

இரவு எந்நேரமானாலும், வேலை பற்றி யோசித்து, வேண்டிய முடிவை எடுத்துக் கொள்ளலாம். வீட்டிலே குறித்து வைத்து, அதைக் கொணர்ந்து செயல்படுத்திக் கொள்ளலாம்.



அதனால், வேலை ஒரு பிரச்சினையில்லை! ஆனால் வாழ்க்கை பற்றி, நன்றாக யோசிக்க வேண்டும்!

சூடு பட்ட பூனை என்று ஓர் உதாரணம் இருக்கிறது! ஆனால் அதற்காகப் பாலையே அடியோடு ஒதுக்குவது புத்திசாலித்தனம் அல்ல! இன்னொரு குடும்ப வாழ்வை மிகவும் யோசித்து முடிவு செய்ய வேண்டும், தேவையா என்பது உட்பட.

ஆனால், அதற்கு முன் தண்டபாணி சொன்னது போல் வில்லங்கம் அற்ற மனிதனாகி விட வேண்டும்.

சிந்தித்தபடியே வீடு சென்றால் அங்கேயும் யோசனை தொடர்ந்தது.

காரைத் திறந்துவிட்டு லிப்டில் ஏறிவந்து, அவனே கதவைத் திறந்து, உள்ளே சென்று இருட்டு வீட்டில் விளக்கைப் போட்டு... ஏசியைப் போட்டு... அவனே டெலிபோனை எடுத்து, சாப்பாடு அனுப்பும்படி பக்கத்துத் தெரு பெரிய ஹோட்டலுக்குச் சொல்லி...

சுற்றிலும் இருந்த வெறுமையும், நிசப்தமும், ஐந்து ஆண்டுகளுக்கு பிறகு, முதல் முறையாக அவனைத் தாக்கின.

டெலிபோனில் உணவுக்குச் சொன்னதும், அனுப்பும் வரை காத்திருக்க வேண்டும். அல்லது முதலிலேயே திட்டமிட்டு வெளியே போய் சாப்பிட வேண்டும்!

இத்தனை ஆண்டுகள் இது பெரியதாகத் தோன்றியது இல்லை. ஆனால், இன்று அலுத்தது. மற்ற வீடுகளில் இப்படியா நடக்கிறது?

முப்பத்தியிரண்டு என்பது, உலக ஆசைகளைத் துறக்கிற வயது அல்ல!

தண்டபாணி சொல்வது போல, இந்த வயதில் இப்படி இருப்பது சரியில்லைதான்.

இன்னொரு திருமணம் உடனே செய்தாக வேண்டும் என்று, இப்போது பெரிய உந்துதல் இருப்பதாகச் சொல்ல முடியாதுதான். என்றாலும் ஒருவேளை, மனம் விரும்பி னால்... அதற்கு இருக்கும் தடையகற்றித் தயாராக இருப்பது நல்லதுதானே?

இதை டெலிபோனில் பேசி முடிக்க முடியாது. நேரில் தான் பேச வேண்டும்.

மறுநாள் அவன் மதுரைக்குக் கிளம்பியது இப்படித் தான்.

மதியம் கிளம்புவதாக குணசேகரன் சொன்னதும், சாதனாவின் முகத்தில் விளக்குப் போட்ட மாதிரிப் பிர காசம் தோன்றியது. அவனுக்கும் இதமாகத்தான் இருந்தது!

ஆனால், முதலில் வில்லங்கம் தீரட்டும்!

மதுரையின் சுற்று வட்டாரம் நெருங்க நெருங்க நெஞ் சுக்குள் ஒரு சுகமற்ற, சங்கடமான உணர்ச்சி பரவியது.

வந்த வேலையைச் சீக்கிரமே முடித்து, இது போன்ற உணர்ச்சிகளுக்கு முடிவு கட்ட வேண்டும். ஏற்கனவே நிறையப் பட்டாயிற்று!

ஹோட்டல் அறையில் இருந்து பார்க்கையில் தெரிந்த அம்மன் கோயில் கோபுரங்கள். மனதை அமைதிப் படுத்தின.

காலையிலேயே எழுந்து மடமடவென்று குளித்து, உணவை முடித்துக் கொண்டு, மாமனார் வீட்டுக்குச் சென்று, வந்த வேலையை முடித்து விடத்தான் குண சேகரனுக்கு விருப்பம்!

ஆனால் காலை வேளையில் அந்த வீட்டில் யார் எழுந்திருப்பார்கள்?



வீட்டு மனிதர்கள் ஒன்பது மணிக்கு விழித்துக் காபி கேட்டால், வேலையாட்கள் எட்டு மணிக்கு எழுந்து கோலம் போடுவார்கள்.

அதற்கு முன் போனால், பணிபுரிவோரைக் கூட எழுப்ப முடியாது!

பொழுதை நெட்டித் தள்ளிவிட்டுக் கிட்டத்தட்ட பத்து மணியளவில் கிளம்பிச் சென்றான்.

புறநகர்ப் பகுதியில் எட்டுப் பத்து மனையளவு நிலப் பரப்பை வாங்கிப் பெருமைக்குக் கட்டப்பட்ட பெரிய மாளிகை, அவனுடைய மாமனார் வீடு. நகரின் பெருஞ் சாலையிலிருந்து பிரிந்து செல்லும் காரோடும் பாதையே தனி. அள்ளி வீசியது போல, ஒரு பத்துப் பணக்காரர்கள். அங்கே இடம் வாங்கி, ஒன்றை ஒன்று மிஞ்சும் விதமாக வீட்டைக் கட்டியிருந்த பகுதி.

பாதையில் திரும்பிச் செல்லும்போதே, பின்னிருந்து ஆம்புலன்சின் தனிப்பட்ட ஒலி கேட்டுப் பக்கவாட்டுக் கண்ணாடியில் பார்த்து, அதற்கு வழி விட்டான் குண சேகரன்.

இங்கே யார் வீட்டுக்காக இருக்கும் என்று யோசித்த படியே, வேறு வழியின்றிப் பின்னேயே சென்றால், மாமனார் வீட்டு முன்னேயே ஆம்புலன்ஸ் நின்றது.

யாருக்கு என்ன? ஏன் உள்ளே போகாமல், இங்கேயே நிறுத்தினார்கள்? என்று சில பல கேள்விகளுடன், காரை ஓரமாக ஒதுக்கி நிறுத்திவிட்டு, இறங்கிப் பார்த்தவ னுக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை!

முதல் அதிர்ச்சியாக "இந்தக் காட்டுச் செடிக்குள்ளே வண்டி போகாதுப்பா. போனால் திரும்ப முடியாது.

உள்ளாரப் போய், ரெடியான்னு கேட்டுவிட்டு வா!'' என்று சொல்லி ஓர் ஆளை அனுப்பினான், ஆம்புலன்ஸ் ஓட்டி!

அவனது சொல்லை ஏற்று, சற்று கச்சலான ஒரு மனிதன் வீட்டை நோக்கி விரைந்தான்.

அவன் பின்னே பார்வையைச் செலுத்திய குணசேகர னுக்கு, அவனது கண்களால் கண்ட எதையும் நம்ப முடியவில்லை.

எப்போதும் உரிய அளவில் செதுக்கப்பட்டு அழகாக இருக்கும் புல்வெளி! இப்போது கண்டபடி, காடாய் கிடந்தது. காய்ந்த இலை, விழுந்தால் கூட, எடுத்துப் போட்டு சுத்தம் செய்தபடி சுற்றி வரும் வேலையாட் களைக் காணோம்! வெளி வாயிலில் நின்று, அரை குறைத் தமிழில் விவரம் கேட்கும் கூர்க்கா! அவன் எங்கே போனான்?

ஆறு மாதங்களுக்கு ஒரு தரம் வண்ணம் மாற்றி, பெயிண்ட் பண்ணுகிற வீட்டுச் சுவர், கறுப்புப் பிடித்து இருந்தது!

வீட்டின் முன்னே நிற்கும் கார்களையும் காணவில்லை!

என்ன இது என்று குணசேகரன் தயங்கி நிற்கும்போதே, உள்ளே சென்ற கச்சல் மனிதன் திரும்பி வந்து 'ஸ்ட்ரெச்சரோடு' ஆட்களை கூட்டிப் போனான்.

யார்... என்ற திகைப்போடு அவன் நிற்கும்போதே, அவர்கள் 'ஸ்ட்ரெச்சரில்' தூக்கி வந்தது, திலோத்தமா வுடைய தாயாரை... அதாவது அவனுடைய மாமியாரை!

அவன் வந்த காரியத்தை இப்போது எப்படிச் சொல் வது?





# 3

யோசனையோடு குணசேகரன் நிற்கும்போதே, கைக்கெடிகாரத்தை மாட்டியபடியே திலோத்தமா... அவனுடைய மனைவி வந்தாள்.

'ஸ்ட்ரெச்சரை'த் தொடர்ந்து வேகமாக வந்தவள். குணசேகரனைப் பார்த்ததும், அப்படியே தடை கட்டினாற் போலத் திகைப்புற்று அசையாது நின்று விட்டாள்.

அவளிடமும் ஏகப்பட்ட மாற்றங்கள்!

இப்போது உள்ளே போய், அவளிடம் என்ன ஏது என்று விசாரிக்க வேண்டுமா?

குணசேகரன் யோசிக்கும்போதே, ஆம்புலன்ஸ் ஆள் அவளிடம் ஏதோ சொல்ல, அவளும் அவனிடம் ஏதோ கூறிவிட்டுத் திரும்பி வீட்டினுள் ஓடிச் சென்றாள்.

ஆனால் வெகு விரைவிலேயே, மின்னல் விரைவுடன் திரும்பியும் வந்து விட்டாள்.

வந்தவள் செய்தது, குணசேகரனுக்கு இன்னமும் வியப்பூட்டியது!

ஆம்புலன்சைக் கிளம்பும்படி சைகை செய்தவள். பக்கவாட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு ஸ்கூட்டி யில் ஏறி, அதைக் கிளப்பினாள்!

ஸ்கூட்டியில் அவள்!

'டூ வீலர் எல்லாம் வக்கில்லாதவர்கள் வண்டி... இந்த வீட்டுக்குள் அதைக் கொண்டு வந்து, நிறுத்திக் கேவலப் படுத்தக் கூடாது!'

வசனம் காதில் ஒலித்துக் கொண்டிருக்கும்போதே, வாகனத்தைக் கிளப்பிக் கொண்டு, வெகு வேகமாக ஆம்புலன்சுக்கு முன்னே சென்று விட்டாள். திலோ... திலோத்தமா.

வழிகாட்டிச் சென்றாள் போல!

பார்வை, இப்புறம் அப்புறம் சற்றும் திரும்பவில்லை!

அதாவது அவனை மறுபடியும் பார்க்க நேரவில்லை. பார்க்கக் கூடாது என்பதுதான் நோக்கமா?

ரத்தத்திலேயே ஊறி விட்ட திமிரா என்று தோன்றிய போதும், அவள் மட்டுமாக ஆம்புலன்சோடு போகிறாளே என்றிருந்தது அவனுக்கு!

ஊர், உலகம் சரியாகத் தெரியாதவள் திலோத்தமா... அவளுடைய தந்தையும், அண்ணனும் இந்த நிலைமையில் வீட்டை அவள் பொறுப்பில் விட்டு விட்டு எங்கே போனார்கள்?

வெளி உலகம் தெரியாமல், பொத்திப் பொத்தி வளர்க்கப்பட்டவள். தபால் அலுவலகத்தில் போய், பணம் அனுப்பத் தெரியாது. பாங்கில் பணம் எடுக்கத் தெரியாது! மருத்துவமனையில்... எதுவுமே தெரியாமல் மருத்துவ மனையில் போய், என்ன செய்வாள்? அதை யோசியாமல், அந்த வீட்டு ஆண்கள் எங்கே போய்த் தொலைந்தார்கள்?

அவர்களைப் போல, திலோத்தமா என்ன வேண்டு மானாலும் செய்து கொள்ளட்டும் என்று, விட்டுப் போக, அவனுக்கு மனம் வரவில்லை.



காரை எடுத்துக் கொண்டு, ஆம்புலன்சைப் பின் தொடர்ந்து சென்றான் குணசேகரன்.

உரிய இடம் விசாரித்து, மருத்துவமனையின் பின்புறம் சென்று, காரைப் பார்க் பண்ணிவிட்டு, வந்து பார்த்தால், திலோத்தமா காணாமல் போயிருந்தாள்.

திருமதி ஆனந்தி கண்ணபிரான் என்று, மாமியாரின் பெயரைச் சொல்லி, வரவேற்பில் விசாரித்தான்.

ஐசியுவுக்குக் கொண்டு போயிருப்பதாக தகவல் கிடைத்தது.

விசாரித்து, ஐசியு பகுதிக்குப் போய்ப் பார்த்தால், அங்கே திலோத்தமா இருக்கவில்லை!

எட்டிப் பார்த்தால், மாமியாருக்குச் சிகிச்சை எதுவும் நடப்பதாகவும் தெரியவில்லை!

என்ன இது என்று குழம்பிய வண்ணம், திலோவைத் தேடிப் போனான் குணசேகரன்.

மருத்துவரின் அறையில் இருந்து அவள் குரல் கேட்டது. கெஞ்சும் குரல்!

கெஞ்சுவதா? திலோத்தமாவா? யோசனையோடு நின்று கேட்டான் அவன்.

''டாக்டர், ப்ளீஸ் டாக்டர். எப்படியும் பணத்தைக் கொண்டு வந்து, உடனே கட்டி விடுகிறேன் டாக்டர், இப்போது உடனே சிகிச்சையைத் தயவு பண்ணித் தொடங்குங்கள், டாக்டர்...'' என்று திலோத்தமையின் கெஞ்சல், ஓர் ஆச்சரியம் என்றால், மருத்துவரின் பதில், அவனை இன்னும் அதிகமாக வியப்படைய வைத்தது.

போன தடவையும், திலோத்தமா இதே போலத்தான் சொன்னதாகவும், பிறகு பணத்தை மிகவும் தாமதமாகக்

கட்டியதாகவும், அதனால் இந்த முறை அந்தப் பேச்சே கூடாது, பணத்தைக் கட்டினால்தான் சிகிச்சை... மற்றபடி ஒன்றும் முடியாது என்று பிடிவாதமாக மறுத்துக் கொண் டிருந்தார் மருத்துவர்!

எப்படியாவது பணத்தைச் சீக்கிரமே கட்டி விடுவதாகச் சொல்லி, சிகிச்சையைத் தாமதமின்றித் தொடங்குமாறு திலோத்தமா மீண்டும் மன்றாட, குணசேகரனுக்கு சில வினாடிகள் ஒன்றுமே புரியாத நிலை!

நினைத்தால் போம் மெத்தைக்குப் பதிலாகப் பணத்தி லேயே படுத்துப் புரளுவோம் என்பார்களே, அந்தப் பணம் எல்லாம் எங்கே போயிற்று?

''பாரம்மா, என்னிடம் பயனற்று வாதாடி, பொன்னான நேரத்தை வீணாக்குவதை விடுத்து, பணத்துக்கு ஏற்பாடு பண்ணுகிற வழியைப் பார்த்தால், உன் அம்மா நல்ல படியாகப் பிழைக்க, நிறைய வாய்ப்பு உண்டு. இப்படி நேரத்தை வீணாக்கி விட்டு, அப்புறம் என்னைக் குற்றம் சொல்லக்கூடாது!'' என்று வைத்தியரின் கண்டிப்பான குரல், குணசேகரின் யோசனையை நிறுத்திச் செயல்பட வைத்தது!

விரைவிலேயே வைத்தியரின் செல்போன் குரல் கொடுத்தது.

எடுத்துப் பேசிவிட்டு உடனேயே செல்லிலேயே ஐசியுவில் பணியில் இருப்போரிடம் பேசினார்.

எதிரே ஏக்கத்துடன் அமர்ந்திருந்தவளை பார்த்து ''என்னம்மா பணத்துக்கு வேறு ஏற்பாடு செய்திருந்தால் அதைக் கட்டி விட்டார்களா இல்லையா என்று அதைப் பாராமல், சும்மா என்னிடம் வாதாடி, என் வேலையையும்



கெடுத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாயே! போ. போய் ஐசியு வெளியே உட்கார். உன் அம்மாவுக்கு சிகிச்சை தொடங்கச் சொல்லிவிட்டேன். அங்கங்கே குழாய்கள் செருகி இருப்பதைப் பார்த்து பயந்து விடாதே! எல்லாம் தேவையான பிராணவாயு, மருந்துகள், சத்துக்கள் ஏற்றுவ தற்காகத்தான்...ஆனால், நீ ஏன் பயப்படப் போகிறாய்? எல்லாம்தான் அடிக்கடி பார்த்துப் பழகி விட்டிருப்பாயே! வா கிளம்பு! என்று திலோத்தமாவிடம் கூறியவாறே, அவரும் ஸ்டெத்தை எடுத்துக் கொண்டு கிளம்ப, அறை வாங்கிய சிறுமி போல, அவளும் எழுந்து, மருத்துவரைப் பின் தொடர்ந்தாள்.

பணத்தை யார் கட்டியிருப்பார்கள் என்று யூகிக்க, அதிக மூளை தேவையில்லை!

ஆனால் ஏன்? உன் பணம் ஒன்றும் தேவையில்லை என்று நிமிர்வோடு செல்ல வழியின்றி, அந்தப் பணம், அப்போது மிகவும் தேவைப்பட்டது என்பதே அவளை ரொம்பவும் குன்ற வைத்தது!

அவனை மீண்டும் பாராமல் எங்கேயும் ஓடிவிட முடியுமானால்... ஓட முடியாது! ஒளியவும் முடியாது! அது போன்ற சிறு பிள்ளைத் தனங்கள், அவள் வாழ்வில் முற்றுப் பெற்றுவிட்ட அத்தியாயங்கள்!

எதிர்பார்த்தது போல, குணசேகரன் ஐசியு பகுதியில் தான் இருந்தான்.

வேறு வழியின்றி, அவன் அருகில் சென்று, பணம் கட்டியதற்கு நன்றி சொன்னாள் அவள்.

ஆனால் அடக்க மாட்டாமல், ''ஏன் கட்டினீர்கள்? உறவே இல்லை என்று போனவர், எதற்காகப் பணம்

கட்ட வேண்டும்? உலக மகா நல்லவர் என்று காட்டு வதற்கா?'' என்று எரிச்சலைக் காட்டி விட்டாள்.

லேசாகத் தலையசைத்து ''என்ன ஆயிற்று?'' என்று விசாரித்தான் குணசேகரன்.

அவன் கேட்பது புரிய ''இது உங்களுக்குச் சம்பந்தம் இல்லாதது. ஏறத்தாழ, ஐந்து ஆண்டுகளாக!'' என்றாள் அவள் வெடுக்கென.

பொருட்படுத்தாமல், ''உன் அண்ணன் எங்கே?'' என்று மேலும் துருவினான் குணசேகரன்.

''அவனைப் பற்றிப் பேச வேண்டாம்'' என்று கறார்க் குரலில் பதில் வந்தது.

''காலையில் சாப்பிடவில்லையா?''

பெற்றவள் உடல்நலமின்றித் தவிக்கையில், உணவு பற்றிய நினைவு வரும்?

ஒரு தலையசைப்புடன் அவள் பேசாதிருக்க, ''உனக்கு நல்ல பசி என்று நினைக்கிறேன். அதனால்தான் உத விக்கு வந்த கையையே, கடித்துத் தின்னப் பார்க்கிறாய்?'' என்று அவன் சீரியசாகக் கூறிக் கையைப் பின்னை மறைக்கவும், தன்னை மீறித் திலோத்தமைக்குச் சிரிப்பு வந்தது!

உடன் சிரிப்பை அடக்கியவளுக்கு யோசனையை நிறுத்த முடியவில்லை.

இவன் எப்போதும் இப்படித்தான், சட்டென எதிர் பாராது. இப்படி எதையாவது சொல்கிறவனே, நக்கல், குத்தல் என்று ஏன் எண்ணினோம் என்று இப்போது யோசனையாக இருந்தது!



கூடவே, இன்னும் சிலது நினைவு வந்து, இவன் இப்போது இங்கே ஏன் வந்தான் என்று திலோத்தமையின் மனம் தவிக்கத் தொடங்கியது.

ஆனால் அவளது தவிப்புப் புரியாமல், ''இங்கே கேண்டீன் இருக்கிறதாமே, வந்து ஏதாவது சாப்பிடு'' என்று குணசேகரன் கூப்பிட்டான்.

உள்ளே இருப்பது அவனுடைய தாயாக இருந்தால், இப்போது உணவைப் பற்றி நினைக்கவேனும் செய் வானா என்று எண்ணியபோதும், வாயை அழுந்த மூடிக் கொண்டு பேசாதிருந்தாள் அவள்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக என்றால், எண்ணி யதை அப்படியே கொட்டியிருப்பாள். அவன் பதிலுக்கு ஏதாவது சொல்ல, பெரிய தகராறாகிப் போயிருக்கும். இந்த ஐந்தாண்டு கால அனுபவ முதிர்ச்சி அவளுக்கு நாவடக்கத்தை கற்றுத் தந்து விட்டது போலும்.

ஆனால், அவன் எப்படி? எப்படி இருந்தாலும், இந்தப் பணத்தைக் கட்டி, அவளைக் கடனாளியாக்கி விட் டானே..!

இந்தக் கடனை எப்படித் தீர்ப்பது?

அவளது யோசனை புரியாமல், மீண்டும் மனைவியை உணவருந்த அழைத்தான் குணசேகரன்.

''வா, திலோ, வெறும் வயிற்றோடு இருந்தால் உன் உடம்பும் தாங்காது...''

இந்தக் கடன் வேறு கொசுறா?

''ஒருவேளைப் பட்டினியில், அப்படி ஒன்றும் செத்து விட மாட்டேன்! எனக்கு ஒன்றும் வேண்டாம்'' என்றாள் பிடிவாதமாக.

அவனுக்கும் எரிச்சல் வந்தது.

அவன் வந்த காரியம் என்ன? அதைப் பற்றி வாய் திறக்கக் கூட முடியாத நிலை. அதுதான் போகட்டும் என்று பார்த்தால், சாப்பிடச் சொல்லி, இவள் காலில் விழுந்து வேறு கெஞ்ச வேண்டுமா?

எப்படியோ போய்த் தொலை என்று போனால், பட்டினி கிடப்பாள். அப்படி விடவும் மனம் வராமல் ''அசட்டுத் தனம் வேண்டாம், திலோத்தமா. சற்று யோசித்துப்பார். உன் அம்மா குணமாகி வரும்போது, அவர்களைப் பார்த்துக் கொள்ள, உனக்கு சக்தி இருக்க வேண்டாமா? அல்லது ஒரு வேளை நீயும் இங்கே இன்னொரு படுக் கையில் படுத்துக் கொள்ளும் ஐடியா ஏதும் வைத்திருக் கிறாயா?'' என்று சற்று சுருக்கென்றே, அவனும் கேட்டு விட, அவள் முகம் வாடியது.

தாய் இருந்த அறைப் பக்கம் ஒரு தரம் பார்த்துவிட்டு, ''இப்போது இங்கிருந்து எப்படி வருவேன்? டாக்டர் எதற் காகவேனும் கூப்பிட்டாலும் கூப்பிடலாம். இங்கேயே, நான் வரவழைத்துச் சாப்பிட்டுக் கொள்கிறேன்'' என்றாள் மெல்லிய குரலில்.

அவனுக்கும் கொஞ்சம் ஒரு மாதிரியாகி விட்டது.

தணிந்துவிட்ட குரலில், ''நீ இங்கேயே இரு. நான் போய் ஏதாவது வாங்கி வருகிறேன். அதுவும் வேண்டாம் என்று சொல்லாதே'' என்றவன், அவள் மறுப்பாக வேறு எதுவும் சொல்லுமுன் திரும்பி நடந்து விட்டான்.

செல்லும்போதே, என்னென்ன வாங்கலாம் என்று யோசித்தவன், தயங்கி நின்றான்.

ஒரு காலத்தில், அவனுடைய மனைவி, அப்போது புதிதாக எடுத்த பழச்சாறு மட்டும்தான் குடிப்பாள். இங்கே



அப்படிக் கிடைக்காவிட்டால், காபி, டீ ஏதேனும் வாங்க லாமா என்று கேட்டுக் கொண்டு போனால் நல்லதல் லவா?

வேகமாகத் திரும்பி வந்தால், இரு கைகளாலும் தலையைத் தாங்கியவாறு சோர்ந்து அமர்ந்திருந்தாள் அவள். மாலைத் தாமரை போல வாடிக் குனிந்திருந்த முகம்!

சோகத்துக்கு வடிவம் கொடுத்தது போன்ற தோற்றம் தான்!

ஆனால்... ஆனால், மனதுக்குள் மிகவும் சுகமான, இனிய என்றே சொல்லலாம். அப்படி ஓர் உணர்வு பரவவும், அவனே திகைத்துப் போனான்!

இந்த நிலையில் சுகமா? இனிமையா?

கண நேரத்துத் திகைப்பின் பிறகே, திலோவிடம் என்ன கேட்க வந்தோம் என்பதே, அவனுக்கு நினைவு வந்தது! ஆனால், அவள் சோர்ந்து, ஓய்ந்து கிடக்கும்போது, எழுப்பிப் பேச மனமின்றி, வந்த வழியே சத்தமின்றித் திரும்பிப் போனான்.

சற்று இலகுவாகக் கரண்டியால் எடுத்து உண்ணக் கூடியதாகப் பார்த்து திலோத்தமைக்காக குணசேகரன் உணவை வாங்கிக் கொண்டு வந்து பார்த்தால், இரும்பால் அடித்த சிலை போல, திலோத்தமா நிமிர்ந்து அமர்ந்திருந் தாள்.

என்ன விறைப்பு!

சற்று முன் வந்து, ஓய்ந்து கிடப்பதைப் பார்த்துவிட்டுப் போனதாகச் சொன்னால், இவள் என்ன செய்வாள் என்று அவனுக்குத் தோன்றத்தான் செய்தது!

ஆனால் எதுவும் கூறாமல் பேச்சின்றியே, அவள் அருகில் உணவை வைத்தான்.

அவன் உணவுப் பொட்டலங்களை வைத்ததும் ''இனி நான் சாப்பிட்டுக் கொள்கிறேன். நீங்கள்... நீங்கள் வந்த வேலை என்னால், இனியும் தடைப்பட வேண்டாம்'' என்றாள் திலோத்தமா.

போயேன் என்று. அவளால் இயன்றவரை நாகரீகமாகச் சொன்னாள் எனலாம்.

இப்போதும் கூட, எந்த வினாடி பொறுமை மறைந்து, அவள் கத்தப் போகிறாளோ என்று தோன்றவும், குண சேகரன் அதற்கு மேல், அங்கே நிற்கவில்லை.

அத்தோடு, அவன் வந்த வேலையைத்தான், இப் போது அவளிடம் சொல்ல முடியுமா, என்ன?

நல்லவேளையாக, வைத்தியரும், ஐசியுவில் இருந்து வெளியே வந்து ''திருமதி கண்ணபிரான் பிழைத்துக் கொள்வார்கள். ஆனால், இனிமேல் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். இப்படியே அடிக்கடி செய்தால், இனி உடம்பு தாங்காது'' என்று சொல்லிச் சென்றார்.

தாயார் பிழைத்து விட்டாள் என்ற செய்தியில், அப் பாடா என்று ஆறுதல் பெருமூச்சுடன், திலோத்தமா தொய்ந்தாள்.

சில வினாடி நேரம், அப்படியே சோர்ந்து கிடந்து விட்டுக் கண்ணைத் திறந்து பார்த்தால், குணசேகரன் யோசனையோடு, இன்னும் நின்றான்.

இவன் முன் சோர்வைக் காட்டி விட்டோமே என்ற குன்றலுடன் ''நீங்கள் இன்னமும் போகவில்லையா...'' என்று கேட்கும்போதே, அவன் அங்கே நிற்பதன் காரணம்



புரிந்து, குபீரென்று அவள் முகம் கன்றிச் சிவந்து போயிற்று.

தடுமாற்றத்துடன், ''சாரி பணம் இப்போதே... இப்போது திருப்பித் தர வழி... இயலாது. நீங்கள் உங்கள் முக வரியைக் கொடுத்து விட்டுப் போனால்... அங்கே, எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு...'' என்றவளின் பேச்சில், ''போதும் திலோ!'' என்று குணசேகரன் குறுக் கிட்டான்.

''இந்த நேரத்தில் உன்னிடம் பணத்தைத் திருப்பிக் கேட்பதற்கு, நான் என்ன, கந்து வட்டிக்காரனா?'' என்றான் பொறுமையிழந்த குரலில்.

''பி... பின்னே எதற்காக... உங்கள் வேலையைப் பார்க்கப் போகாமல்..''

அவனது வேலையைப் பார்ப்பதா? அது என்ன வேலை என்று தெரிந்தால், இப்படிச் சொல்வாளா? ஆனால்... சொன்னாலும் சொல்லுவாள். இந்தக் குடும்பத்தில் யார், எப்போது, எப்படிப் பேசுவார்கள் என்று சொல்லவே முடியாது!

''என் வேலையை எப்போது, எப்படிப் பார்ப்பது என்று, எனக்குத் தெரியும். இப்போது, அதற்கு ஒருவித அவ சரமும் இல்லை! இங்கே உடனடியாக ஏதேனும் தேவைப் படுமா என்று பார்த்துவிட்டுப் போகவே நின்றேன். ஏதேனும் தேவைப்பட்டால்...''

இப்போது அவள் குறுக்கிட்டு ''இல்லை, இல்லை! இதற்கு மேல் ஒன்றும் தேவைப்படாது! தேவைப்பட் டாலும், நானே பார்த்துக் கொள்வேன்... இ... இப்போது, நீங்கள் ஏற்கனவே செய்திருப்பதே, மிகவும் அதிகம்!

அதை, நான் எப்படியாவது சீக்கிரமாகத் தந்து விடுவேன். நீங்கள், உங்களது முகவரியைத் தந்து விட்டுப் போனால் போதும்'' என்று அவசரமாகப் பேசினாள்.

உடனேயே மீண்டும் முகம் கன்றி ''பணத்தை அனுப்புவதற்காகத்தான்'' என்றும் சேர்த்துச் சொன்னாள்.

பின் என்ன? அவன் இருக்கும் இடம் தெரிந்தால், உடனே வந்து குடும்பம் நடத்த விலாசம் கேட்பதாகவா எண்ணி விடுவான்?

அதுதான், பரம்பரைப் பணக்காரர்களோடு பழகத் தெரியாத, வக்கில்லாதவனோடு வாழ முடியாது என்று என்றைக்கோ வெட்டி விட்ட உறவாயிற்றே! தெள்ளத் தெளிவாக, முகத்துக்கு நேராகச் சொல்லியே!

''ஓ.கே. அப்படியானால், சரி'' என்று மறு பேச்சின்றித் திரும்பி நடந்து விட்டான் குணசேகரன்.

திரும்பிப் பார்த்து தன்னைக் குறைத்துக் கொள்ள தன்மானம் இடம் தராவிட்டாலும், திலோத்தமா சோர்ந்து கிடந்தது. திரும்பத் திரும்ப நினைவு வந்தது!

தனியே அவளை எங்குமே அனுப்பமாட்டார்கள்.

ஒருதரம், வீட்டுக்காரில், சினிமாத் தியேட்டருக்கு வந்து, தன்னோடு சேர்ந்து கொள் என்று, அவன் சொன்ன தற்காக, அந்த ஆட்டம் ஆடினார்கள்!

தியேட்டருக்கு வரும் வழியில், அவனுக்கு ஏதேனும் விபத்து நேர்ந்து விழுந்து கிடந்தால், எங்கள் பெண் தியேட்டரில் தனியாகவா நிற்பாள் என்று கேட்டார்கள்!

இன்றைக்கு, இவ்வளவு பெரிய மருத்துவமனையில், தன்னந்தனியே எல்லா வேலைகளையும் பார்க்க விட்டு விட்டு, எல்லோரும் எங்கே போனார்கள்?



பணப்பிரச்சினை வரை, அவளே பார்க்கட்டும் என்று விட்டுவிட்டு!

என்னவோ நடந்திருக்கிறது! ஏதோ ஒரு வகையில் நிலை தாழ்ந்திருக்கிறது!

ஆனால், ஒரேடியாகத் தாழ்ந்து போவது சாத்தியம் இல்லாத அளவு சொத்து, பத்து, அங்கே நிறையவே உண்டு என்பது, அவனுக்குத் தெரியும்.

அதாவது திருப்பித் திருப்பிச் சொல்லி, அவனுக்குத் தெரிய வைத்த புராணம்!

பின்னே இதென்ன?

என்னவென்று திலோத்தமாவிடம் கேட்டால், ஒழுங் கான பதில் வராது என்பது, இப்போது அவனுக்கு நிச்சயம். உடல் சோர்வைக்கூட அவனுக்குக் காட்டி விடக்கூடாது என்று நிமிர்ந்து, விறைத்துக் கொண்டு உட்காருகிறாளே!

பின்னே... தோல்வியை ஒத்துக் கொள்ளக் கூடாது என்பது, ஐந்தாண்டுகளாக, அவனது தாரக மந்திரம்!

ஒரு கணம் யோசித்துவிட்டு இன்னொரு திசையில் காரை திருப்பினான் அவன்.

அவன் சென்ற இடத்தில் கிடைத்த ஆவலான வர வேற்பு அவனுக்கு ஆச்சரியத்தை அளித்தது. ஆனால்...

குணசேகரன் தேடிச் சென்ற மனிதர், அவனுடைய மாமனாரான கண்ணபிரான் குடும்பத்துக்கான பொது வைத்தியர்.

இரண்டு தலைமுறையாகக் குடும்ப நண்பர்களும் கூட.

காய்ச்சல், தலைவலி என்றால் வீட்டில் முதலில் அழைப்பது, அவரைத்தான்.

ஆனால், நோய் உடனே குணமாவதற்கான அதிரடி மருந்து கொடுக்க மாட்டேன் என்கிறார் என்று வீட்டில் புகார் உண்டு!

ஆனால், சிதம்பரத்தின் வைத்திய முறையே வேறு!

'நோய் நாடி, நோய் முதல் நாடி...' என்கிற வள்ளுவரின் கருத்துப்படி, எதனால் வந்த நோய் என்று கேட்டறிந்து, ஓரளவு தானாகக் குணமாக வாய்ப்பளித்து, அதன் பிறகே, அதுவும் தேவைப்பட்டால் மருந்து கொடுப்பார்.

இது அந்த வீட்டில் எல்லோருக்கும் பிடிக்காமல் போய், மெல்ல மெல்ல வெறும் குடும்ப நண்பராக மட்டுமே மாறிப் போனவர் அவர்.

வீரியம் பார்த்துக் கொண்டு விலகிப் போய் விடாமல், நட்பு தொடரும்படி பார்த்துக் கொண்டார். நட்பைப் பாராட்டிக் கண்ணபிரானும் ஒத்துழைக்கவே, இரு குடும்பங்களும் நல்ல உறவுடனேயே வாழ்ந்தனர்.

அந்த வீட்டினர், வீட்டினரோடு இணக்கமாக இருந்தோரில் அவனிடம் அலட்சியம் காட்டாதவர்களில் அவர் ஒருவர்.

அந்தச் சிதம்பரத்தைத்தான், குணசேகரன் பார்க்கப் போனான்.

இந்தக் குடும்பத்தில் அப்படி என்ன நேர்ந்திருக்கக் கூடும் என்பது பற்றி மிகச் சரியான விவரம் சொல்ல அவரால்தான் முடியும் என்பதோடு, அவனை மதித்து, அதைத் தெரிவிக்கக் கூடியவரும் கூட.

ஆனால், அவன் சென்ற நேரம், அதற்கு ஒத்து வராத தாகிப் போயிற்று!





# 4

குணசேகரன் தேடிச் சென்ற மருத்துவர் சிதம்பரத்தின் வீட்டில் ஏதோ விசேஷம் நடந்து கொண்டிருந்தது.

காருக்குறிச்சியாரின் நாதஸ்வர ஒலி, அவரது வீடு இருக்கும் தெருவுக்குத் திரும்பும்போதே, இனிமையாகக் காதில் கேட்டது.

ரசித்தபடியே வந்தால், சிதம்பரத்தின் வீட்டின் முன் பல கார்கள் நின்றதோடும், வீடும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

அவருக்கும் இரண்டு மகன்களும், ஒரு மகளும் உண்டு. யாருக்கோ, ஏதோ விழா!

இந்த நேரத்தில் அவரைத் தனியே கூப்பிட்டுப் பேசுவது தொந்திரவு ஆகாதா?

தோற்கக் கூடாதுதான்! ஆனால் நியாயமற்றுத் தொல்லை செய்வதும் சரியல்ல.

ஒருவேளை விழா முடிந்து விருந்தினர் விடை பெற்றுக் கொண்டிருக்கும் நேரமாக இருந்தால்... என்று யோசித்தவாறு, காரை மெதுவாகச் செலுத்தியவாறு வீட்டின் முன் ஒருகணம் நிறுத்திக் கார் கண்ணாடியை இறக்கிப் பார்த்தான் குணசேகரன்.

ஆனால், விழா உச்ச கட்டத்தில் இருப்பது, உள்ளிருந்து கேட்ட குரல்களில் தெரிந்தது.

இப்போது முடியாது என்று புரிந்துவிடக் காரை செலுத்திக் கொண்டு போய், முட்டுச் சந்து என்பதால் காரைத் திருப்பி அதே வழியில், திரும்பி வந்தால், கிட்டத்தட்ட நடுப்பாதையில் நின்று, காரை நிறுத்தும்படி சைகை செய்து கொண்டிருந்தார் சிதம்பரம்!

வியப்புற்று காரை நிறுத்திவிட்டு இறங்கி, வணக்கம் தெரிவித்தான் குணசேகரன்.

தலையாட்டிவிட்டு, "உங்களைப் போல இருக்கிறதே என்று ஓடி வந்தேன். அதற்குள் கிளம்பி விட்டீர்கள். முட்டுச்சந்து! எப்படியும், வெளியே போகத் திரும்பி வந்துதானே ஆக வேண்டும் என்றுதான் ஓடி வந்தேன்" என்றவர் தொடர்ந்து வேகமாகப் பேசினார். "பாருங்கள் குணசேகரன், உங்களிடம் நான் நிறையப் பேச வேண்டும். ஆனால் மருமகளுக்கு வளைகாப்பு! சம்பந்திகள், மற்ற உறவினர்கள் என்று வீடு நிறைய விருந்தினரை விட்டு விட்டு, நான் வந்து உங்களிடம் பேசிக் கொண்டிருக்க முடியாது! இன்று மாலையில், மருமகளை அழைத்துப் போகும் வரையிலும் கூட, அது சாத்தியம் இல்லை! உங்கள் திட்டம் என்ன? இங்கே மதுரையில் இன்னும் எத்தனை நாள்..."

"இப்போதே கிளம்ப வேண்டிய நேரம்தான், டாக்டர். ஆனால்... சீக்கிரமே, அடுத்த வாரமே மறுபடியும் வருவேன். அப்போது நானே, உங்களை வந்து பார்க்கிறேன்" என்றான் குணசேகரன்.

அதற்குள் உள்ளிருந்து "அப்பா எங்கேம்மா இங்கே தானே இருந்தார்..." என்று குரல்கள் கேட்கவும், அவனிடம் திரும்பி, "செய்யுங்கள். குணசேகரன், இப்போது நிற்க நேரம் இல்லை. மருமகளை ஆசீர்வாதம் செய்யப் போக வேண்டும். ஆனால் அடுத்த வாரம் கட்டாயமாக வாருங்கள்! ரொம்பவும் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருப்பேன்" என்று வேகமாகக் கூறியவர், வீட்டுப் பக்கம் திரும்பி, "இதோ வந்து கொண்டிருக்கிறேன்! வந்துவிட்டேன்" உரக்க மொழிந்தவாறு உள்ளே சென்றார்.



நிறையப் பேச வேண்டுமாம்!

என்னவாக இருக்கும்?

என்னவானாலும், அடுத்த வாரம்தான் பார்க்க வேண்டும், மற்றபடி, எதற்காகவும் தொழிலை அலட்சியம் செய்துவிட்டு, அங்கே தங்கியிருப்பது முடியாது!

திலோவுடைய தாயாரின் சுகவீனம் பற்றி, அவரிடம் சொல்லியிருக்க வேண்டுமோ என்று ஒரு சிறு கலக்கம் எட்டிப் பார்த்தது.

ஆனால், தேவை என்றால், திலோத்தமாவே, சிதம்பரத்திடம் சொல்லத்தான் செய்வாள். அவருக்கும் அவள் செல்லப் பெண்தான்! அப்படியின்றி, அவர்களுக்குள் தகராறு என்றால் அவன் சொல்லியும் பயனிராது.

ஆனால், பூ மாதிரி அழகும் மென்மையுமாகத் திலோத்தமையின் முகத்தைப் பார்க்கும்போது, எல்லோருக்குமே, மனம் உருகத்தான் செய்யும்.

ஏன், அவனே எவ்வளவு தழைந்து, பொறுத்துப் போயிருக்கிறான்..! கடைசி எல்லை வரை! அதுவரை வளைந்து கொடுத்தது, அப்புறம் ஒரேடியாகத் திருப்பி அடித்து விட்டது!

ஐந்தாண்டுகளாக, அவளைப் போய்ப் பார்க்க வேண்டும் என்றுகூட, அவனுக்குத் தோன்றவில்லையே!

இன்னமும் தோன்றாதிருப்பதுதான் அவனுக்கு நல்லது! ஏனெனில், எந்தவிதமான கோபம், தாபம், வருத்தம், வேதனை... ஏன் சலனம் கூட இல்லாமல் இருந்ததால்தானே, முழு மனதோடு முயற்சி செய்து, அவனால் இவ்வளவு முன்னேற முடிந்தது?

தேவையற்றதை மற மனமே, மற!

மறுநாளைய வேலையைப் பற்றிய சிந்தனையில் மனதைச் செலுத்துவது, அவனுக்கு அப்படி ஒன்றும் கடினமாக இருக்கவில்லை.

முதலில் ஒரு சிறு கவலை தோன்றத்தான் செய்தது! தன்னந்தனியே என்ன செய்கிறாளோ என்ற பரிதாபம்.

ஆனால், எங்கே சென்றிருந்தாலும், திலோவுடைய அப்பா, அண்ணன், ஒன்றுவிட்ட சித்தப்பா, இரண்டு உறவு தள்ளிய அத்தை, மாமா என்று அந்தக் கும்பல் அத்தனையும் இதற்குள் அங்கே வந்து சேர்ந்திருப்பார்கள். வந்து ''அய்யோ கண்ணே, எங்கள் செல்லப் பெண்ணே, நீ தன்னந் தனியாக இந்தப் பாரம் சுமந்தாயா?'' என்று உருகி வழிந்து, அவள் தலையில் கிலோக் கணக்கில் ஐசை ஏற்றியிருப்பார்கள்.

அவளும், ஐஸ் கட்டியாகவே இறுகிப் போயிருப்பாள்!

எப்படியோ? திலோத்தமாவைப் பற்றி அவன் கவலைப் படத் தேவையில்லை!

அவளுக்குச் செல்லம் கொடுத்துக் கெடுத்த கூட்டம், இன்னமும் அதிகமாக, அதையே செய்திருக்கும்! தாயார் கண் விழித்திருந்தால், அவளும் சேர்ந்து!

டாக்டர் சிதம்பரம் கூட, அதைத்தான் பேச எண்ணி யிருப்பார்.



எப்படியோ? அவளைப் பற்றி, அவன் கவலைப்படத் தேவையிராது!

இதற்குப் பிறகு, குணசேகரன் திலோத்தமாவைப் பற்றி யோசிக்கவில்லை!

சென்ற வாரம் கிடைத்திருந்த ஒரு புது வாடிக்கையை எப்படித் தக்க வைத்துக் கொள்வது என்று அதைப் பற்றிச் சிந்திக்கலானான்.

அவனுக்குக் கிடைத்த முதல் 'ஆர்டர்' இரண்டு கோடிக்கு. இதுவே, அந்த நிறுவனம் வெள்ளோட்டம் விட்டுப் பார்ப்பதுதான். அந்த நிறுவனத்தின் பின்புலம் முழுவதையும் குணசேகரன் நன்கு விசாரித்து அறிந்து விட்டான். ஒன்றோடொன்று தொடர்பாக, பல பெரிய நிறுவனங்கள், அவர்களிடம் இருந்தன! இந்த முதல் 'ஆர்டரை' சரியாக நிறைவேற்றிக் கொடுத்து விட்டால், அப்புறம், ஒரே தாவாகப் பத்து படி மேலேறியது போலத் தான். அத்தனையும் பிடித்து விடலாம்.

அப்புறம், கண்ணபிரான் குடும்பத்தினது போலப் பரம்பரைப் பணம் இல்லை என்றாலும், பணப் புழக்கத் தில், அவனை மட்டம் என்று யாராலும் சொல்ல முடியாது!

எனவே, மனதைத் தொழிலில் பதிய வைப்பது, அவனுக்குக் கடினமாக இருக்கவில்லை!

வீட்டுக்குப் போய், இந்த ஒப்பந்தம் தொடர்பாக, அடுத்துச் செய்ய வேண்டிய அத்தனை வேலைகளையும், பணக்கணக்கையும் வீட்டில் உள்ள 'லாட்டாப்'பில் பதிவு பண்ணிய பிறகே குணசேகரன் படுக்கப் போனான்.

எடுத்த வேலையைச் சிறப்பாகச் செய்து முடித்து விட்ட சந்தோஷம், இன்னொரு மகிழ்வை நினைவுபடுத்தியது.

திலோத்தமா தலையைக் கைகளால் தாங்கிச் சோர்ந்து அமர்ந்திருந்த தோற்றம்!

அப்போது போலவே, இப்போதும் அவன் மனம் அதிர்ந்தது!

இது என்ன சந்தோஷம்? வேண்டாத மனைவிதான்!

என்றாலும், அவளுடைய தாயார் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கும் நிலையில், அவளது துன்பம் கண்டு மகிழும் அற்ப புத்தி, அவனுக்கா?

சேச்சே! அப்படி இருக்கவே இருக்காது என்று, அவன் தன்னைத்தானே தாங்க வேண்டியிருந்தது!

பணமெல்லாம் கட்டினானே! திலோவுடைய தாயார் உயிர் பிழைத்துவிட வேண்டும் என்றுதானே! பிழைத்து மகளது துன்பம் தீர்க்கட்டும் என்று பணத்தைக் கட்டி விட்டு, வந்தவன்! அப்படிப்பட்டவன், அவளது துன்பம் கண்டு மகிழ்வானா?

உறவை முறித்து என்று பிரிந்த வந்தபோதும், அவர்கள் நிலைக்கு உயர வேண்டும் என்று எண்ணினானே தவிர, உயர்ந்து, திலோத்தமையிடம் போய்ப் பெருமை காட்ட வேண்டும். அவளை கூசிக் குறுகி நிற்க வைக்க வேண் டும் என்று அவன் எண்ணியதே கிடையாது!

பிரியும் முடிவை எடுக்கும்போதே, தன் வாழ்வில், மண வாழ்வு என்ற சகாப்தம் முடிந்தது என்று உறுதியாக நினைத்திருந்தான்.

பின்னர் உழைத்தது எல்லாம், தன்னாலும் முடியும் என்று, தனக்குத்தானே நிரூபித்துக் கொள்ளும் வெறி காரணமாகவே தவிர, வேறு யாருக்காகவும் அல்ல! அது, அவனுக்கு நிச்சயம்.



டயோட்டா கார் வாங்கியது கூட வரிக் குறைப்புக்காகத் தானே, அதைக் கொண்டு போய், யார் கண்ணிலும் படும்படியாக ஓட்டுவதற்காக, நிச்சயமாக இல்லவே இல்லை!

பின்னே அவள் ஓய்ந்து கிடந்தது, எப்படி அவன் மனதில் இனிக்கும்?

இல்லை! இதில் வேறு ஏதோ இருக்கிறது!

எப்படியோ போகட்டும் என்று விடுவது, அவனுக்குப் பழக்கம் இல்லை!

அந்த நேரத்தை அணு அணுவாக ஆராய்ந்தபோது, அவளது அந்தத் தோற்றம் தெளிவாக நினைவு வந்தது.

தன் தலையே சுமக்க மாட்டாத பாரம் போல, இரு கைகளாலும் தாங்கிப் பிடித்தவாறு.. மெல்லிய நீண்ட விரல்கள்.. முன்னாளின் நீளமான நகங்களைக் காணோம். ஆனாலும், கடுமையான வேலை செய்தறியாத மென்மை யான விரல்களே!

அப்புறம்... அப்புறம் அடக்கடவுளே! அவனது மகிழ்ச் சிக்கு இதுவா காரணம்?

என்ன ஆச்சரியம்!

விரல்களை அடுத்து, மணிக்கட்டில், திலோத்தமா கையில் அணிந்திருந்த பிரேஸ்லெட்!

நடுப்பகுதியில், மூன்று தங்க முத்துக்களுடன் ஒரு மெல்லிய, சிறு சங்கிலி! அவளது மெல்லிய கைக்கு சரியாக இருக்கும் என்று, அவளது பிறந்த நாளைக்கு என்று அவன் சேர்த்து வைத்த பணத்தில் வாங்கிப் பரி சளித்தது!

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக அவன் கொடுத்த பிறந்த நாள் பரிசை அன்றைக்குத் திலோத்தமா கையில் அணிந்திருந்தாள்!

அவனது மனதில் மகிழ்ச்சி உண்டாகக் காரணம் அதுவே!

ஆனால், இது என்ன பைத்தியக்காரத்தனம்! இதுபோல, அவன் சுகம் காண்பதே தப்பு அல்லவா? ஒரு தரம் அனுபவித்த அவமானமும், பட்ட துன்பமும், இந்தப் பிறவி முழுவதற்குமே போதுமானது ஆயிற்றே!

அந்த பிரேஸ்லெட் அவனது பரிசு என்பது சரிதான்... ஆனால், அதை வாங்கி வந்து, அவன் ஆசையாகத் திலோத்தமாவுக்குக் கொடுத்தபோது, அவளுடைய தந்தை வாங்கிக் கொடுத்த வைர பிரேஸ்லெட்டை அணிந்து கொண்டு, இதை எப்படி அலட்சியப்படுத் தினாள்! அதல்லவா, அவனுக்கு முதலில் நினைவு வந்திருக்க வேண்டும்?

இன்றைக்கும், இருந்திருந்து, இதை ஏன் அணிந்தாள் என்று யோசனை ஓடியது!

கணவன் கொடுத்ததே, திலோவுக்கு மறந்து போயி ருக்கக் கூடும்! ஏதோ ஒரு நகை, மருத்துவமனைக்கு ஏற்றதாக மெல்லியது என்று எண்ணி, எடுத்து அணிந் திருப்பாள் என்ற விளக்கமும் தோன்றிவிட, குணசேகர னின் மனம் மீண்டும் கடுத்தது!

மறுநாள் அலுவலகத்தில் சாதனாவின் பார்வையில் ஆவல் இருந்தபோதும், அவளுக்கும் முன்னதாக வந்து, குணசேகரன் வேலையில் ஈடுபட்டிருக்கவே, அவள் ஒன்றும் கேட்கவில்லை.



அடுத்து, செய்ய வேண்டிய வேலையின் மதிப்புத் தெரியவும், அவளும் மற்றதை ஒதுக்கி, பணியில் ஈடுபட் டாள்.

ஒன்று மாற்றி ஒன்று என்று அன்றாடப் பணியிலேயே பொழுது கழிந்துவிட, மாலையில் அலுவலக நேரம் முடிந்து, மற்ற அலுவலர்கள் எல்லோரும் கிளம்பிய பிறகே, சாதனாவால் இந்தப் பேச்சை எடுக்க முடிந்தது!

''அங்கே... என்ன ஆயிற்று?''

கதவைத் தட்டி உள்ளே வந்தவளை அமரச் சொல்லி விட்டுக் கையில் இருந்த வேலையை ஒரு நிலையில் நிறுத்திவிட்டு, அவளை நிமிர்ந்து பார்த்தான் குண சேகரன்.

''விவாகரத்து கேட்டு விட்டீர்களா?'' என்று நேரடி யாகவே விஷயத்துக்கு வந்தாள் அவள்.

குணசேகரன் உடனடியாகப் பதில் சொல்லவில்லை.

சொந்த விஷயங்களை யாரிடமும் பகிர்ந்து கொள்ளும் பழக்கம் இல்லாமல் தனியனாக வளர்ந்ததும், அந்தத் தயக்கத்தின் காரணமாக இருக்கலாம்.

ஆனால், இவள் காரணமாகத்தானே இப்படி ஒரு நடவடிக்கை எடுக்க எண்ணினோம் என்றும் தோன்றி விட, பதில் சொன்னான், ''இல்லை, அவர்கள் வீட்டில் ஒரு சுகக்கேடு...''

''அப்படி என்று அவள் சொன்னாளா?''

அவன் வாக்கியத்தை முடிக்குமுன், துள்ளிக் கொண்டு வந்து விழுந்து விட்டது, சாதனாவின் கேள்வி.

குணசேகரனின் பேச்சு நின்று போயிற்று.

முன்னே இருந்த மானிட்டரில் அவன் எதையோ பார்க்கவும் ''சாரி!'' என்று உடனே மன்னிப்புக் கேட்டாள் அவள்.

அவன் பேசாமலே இருக்க, ''அது... அது வந்து, அவள் உங்களை வருத்தியவள் என்று, மனதில் ஒரு வெறுப்பு வந்து விட்டது போல...! அதுதான் சட்டென்று வாயில் வந்து விட்டது. சாரி...'' என்று மறுபடியும் மன்னிப்புக் கேட்டாள்.

அவனுக்காகத்தான் ஆனாலும்...

அவன் யோசிக்கையிலேயே, ''அங்கே யாருக்கு உடம்பு சரியில்லை? உங்கள்... அவளு... அவர்களுக்கு இல்லையே?'' என்று சாதனா திருத்திக் கொண்டு கேட்கவும், குணசேகரன் பதில் சொன்னான்.

''அவளுடைய தாயாருக்கு, ஐசியுவில் சேர்த்திருக்கிறது! பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று வந்து விட்டேன்.''

''ஓ! அதனால்தானா? சரியான காரணம் இருக்கும் என்று நினைத்தேன். போகட்டும், இவ்வளவு நாள் பொறுத்தது. இன்னும் கொஞ்ச நாள் காத்திருப்பதில் என்ன ஆகிவிடப் போகிறது?'' என்று, சாதனாவும் அவனை ஒத்தே பேசினாலும், அவளது குரலில் ஏமாற்றம் இருப்பது நன்றாகவே தெரிந்தது.

அவன் வில்லங்கம் நீங்கித் தகுதி பெற்றவன் ஆவதற்காக ஒருத்தி ஏங்குகிறாள் என்றால், அதுவும் அழகு, படிப்பு எல்லாம் உடையவள் ஏங்குகிறாள் என்றால் உச்சி குளிரத்தான் செய்யும்.

பெரிய இடத்து மாப்பிள்ளையாக வாழ்ந்த ஆறு மாத காலம், அதற்கு நேர் மாறான ஒன்றை எதிர்பார்த்து பரபரப்புறத்தான் செய்தது!



அதை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாவிட்டாலும் கூட!

சாதனாவுடைய தந்தை தண்டபாணி சொன்னது போல, வில்லங்கம் அகற்றி, முழுத் தகுதி அடையும் வரை, அப்படி எதையும் காட்டிக் கொள்வதே தவறாகப் பட்டது குணசேகரனுக்கு.

அது மட்டுமல்ல.

மூன்றே மாதங்களே என்றாலும், அவனுடைய மனைவியாக இருந்த ஒருத்தி ஏதோ ஒரு விதத்தில் கஷ்டப்படுகிறாளே என்றால் அதுவும் அவனுக்குப் பிடிக்கவில்லை.

இதைச் சொன்னால், சாதனாவும், அவளுடைய குடும்பமும் சரியாகப் புரிந்து கொள்வார்களா என்ற சந்தேகம் அவனுக்கு.

அத்தோடு, திலோத்தமை பற்றிய எதையும் யாரிடமும் பகிர்ந்து கொள்ளவும் தோன்றாததால் எதையும் அவன் கூறவும் இல்லை!

'நிறைய பேச வேண்டும்' என்ற மருத்துவரைப் பற்றியும் அவனுக்குச் சொல்லத் தோன்றவில்லை!

அடுத்த வாரம், எங்கேனும் சேர்ந்து போய்ச் சாப்பிடலாமா என்ற அழைப்புடன் முகுந்தன் வந்தான்.

அவனுடன் தொழிலில் தொடர்பு ஏற்பட்டு, அது ஓரளவு நட்பும் ஆன பிறகு, அவ்வப்போது இருவருமாக அப்படிச் செல்வதுதான். தொழில் விஷயமாகவும் பேசுவார்கள். கூடவே, பொதுவான உரையாடலும் நடக்கும்.

ஆனால் பழைய முறை அவன் பழைய மாதிரி அழைக்கவில்லை என்று குணசேகரனுக்கு நிச்சயம்.

மணவிலக்கு பற்றி, அடுத்த முயற்சி எடுக்க, மதுரைக்குக் கிளம்புகிறானா, இல்லையா என்று அறிவதற்காகவே இந்த அழைப்பு என்று உணர்ந்தவன். அதைக் கண்டு கொள்ளாதவன் போன்று, அடுத்த வாரம் மதுரைக்குப் போவதால், பின்னொரு சமயம் வைத்துக் கொள்ளலாம் என்று இயல்பு போலவே பதில் சொன்னான்.

அண்ணன், தங்கை இருவர் முகங்களும் மலர்வதைக் காணாதது போலக் கண்டவன், அதற்காக அவர்களைத் தவறாக எண்ணவுமில்லை.

எப்படியும் 'போ' என்று அவனிடம் நேரடியாக அவர்கள் தொடர்ந்து வற்புறுத்த முடியாதுதானே?

அதே சமயம், கல்யாணப் பேச்சை எடுக்கும் அளவு போனவர்களுக்கு அறியும் ஆவலும் இருக்கத்தான் செய்யும்! அறிவதற்காக முயற்சி எடுக்கத்தானே செய்வார்கள்.

அந்த முறை, அவன் ஹோட்டலில் இருந்து, நேராகச் சிதம்பரத்தின் வீட்டுக்குத்தான் சென்றான்.

மாமியாரின் உடல்நிலை பற்றிச் சென்னையில் இருந்து விசாரித்து அறிந்ததே போதுமானதாகத் தோன்றிவிட, மருத்துவமனைப் பக்கமும் குணசேகரன் போகவில்லை!

கிரெடிட் கார்டு மூலம் பணம் கட்டியிருந்ததால், அவன் பெயரைச் சொன்னதுமே, நோயாளி பற்றி அவன் கேட்ட விவரங்களைத் தடையின்றி, மருத்துவமனையில் சொன்னார்கள்.

அடுத்து பில் ஏதும் கட்ட வேண்டியிருந்தால், தனக்கே அனுப்புமாறு அவன் சொன்னதும், அதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

திருமதி கண்ணபிரான் குணமடைந்து வருவதை அறிந்த பிறகு அங்கே எதற்குப் போவது?



எப்போதும் வைரங்கள் ஜொலி ஜொலிக்கப் பளிச்சிடுகிறவள் இப்போது ஏன் இப்படி இருக்கிறாள்?

கையில் மட்டுமில்லாமல், 'கழுத்தில்... காதில்... எங்குமே பழைய 'பளிச்'கள் இருக்கவில்லையே!

கையில் போலவே, மருத்துவமனைக்காக எல்லா நகைகளையும் மாற்றினாளா? அல்லது.. அவனுக்குத் தெரிய வேண்டியிருந்தது.

புத்தம் புது நகைகள் இல்லாதது மட்டுமின்றி, திலோத்தமாவின் தோற்றத்திலேயே ஒரு மாற்றம் இருந்தது! ஒரு மாதிரி மங்கல்.. துலக்கப்படாத பாத்திரம் போல, ஒளி குறைந்த தோற்றம்!

தாயாருக்கு உடம்பு இவ்வளவு மோசமாக இருக்கும் போது முன்னிருந்தது போல மின்னலாய்ப் பளீரிட முடியாதுதான். ஆனால் அந்தச் சோர்வும், தளர்வும் ஒரு நாளில் வந்திருக்க முடியாது!

மேலும் அவளுடைய அண்ணன்! தந்தை! எல்லோரும் என்ன ஆனார்கள்?

மருத்துவமனைக்குப் பணம் கட்ட முடியாத நிலை ஏன் வந்தது. அந்த ஒரு தரம் மட்டுமின்றி, முன்னரும், மருத்துவமனைக்குப் பணம் புரட்ட முடியாமல் சிரமப் பட்டிருக்கிறார்களே! அது ஏன்?

இப்படி எத்தனையோ பதிலறியாத கேள்விகள்! வழி தெரியாத பறவைகள் போல, குணசேகரனின் மனதுள் முட்டி மோதிக் கொண்டிருந்தன!

அறிந்தே ஆக வேண்டும்!

அவன் வருகிறான் என்று அறிந்ததுமே, தன் வேலைகளை ஒதுக்கிக் கொண்டு அவனோடு கிளம்ப, சிதம்பரம் தயாராக இருந்தார்.

காரில் ஏறி அமர்ந்து, ''இங்கேயே பேசலாம். ஆனால் ஒரு காரணத்துக்காக உங்களை உள்ளே கூப்பிட்டு உப சாரம் செய்ய முடியாமல் இருக்கிறது! நான் விவரம் சொல் லும்போது, நீங்களே புரிந்து கொள்வீர்கள். நீங்கள் ஒன்றும் புத்தியில் குறைந்தவர் அல்லவே!'' என்றார் அவர்.

''பரவாயில்லை டாக்டர்! பாராட்டுவது போலப் பாராட்டி, புத்திசாலி என்கிற பெயரைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவேனும், உங்கள் வீட்டுக்கு வருகிறேன் என்று சொல்ல முடியாமல் பண்ணி விட்டீர்கள்! அருமை யான உத்தி!'' என்று சிரித்தான் குணசேகரன்.

கூடச் சேர்ந்து சிரித்தாலும், ''ஐயோ, அப்படியில்லை, மாப்பிள்ளை சார். உங்களை வீட்டுக்கு அழைத்து விருந்தே படைக்க எனக்கு ஆசைதான். ஆனால், என் மகளுக்காகப் பார்க்க வேண்டியிருக்கிறது!.. என்ன திகைப்பாக இருக் கிறதா? எல்லாம் சொல்லுகிறேன்! ஏதோ இப்போதுதான் அவள் கொஞ்சம் தெளிந்து கொண்டு இருக்கிறாள். ஒன்றிலிருந்து ஒன்று போல, உங்களை இப்போது பார்த்தால், அவள் அடியோடு மறக்க வேண்டியதைத் திரும்பவும் நினைத்து ஏங்கத் தொடங்கி விடக் கூடும்! அதனால்தான்!'' என்றார் அவர்.

''கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட மாதிரி ஒன்றும் புலப்படா விட்டாலும் நீங்கள் விவரம் சொல்லி முடிக் கும்போது, எல்லாமே தெளிவாகத் தெரிந்துவிடும் என்று மட்டும் புரிகிறது. அதனால், அனாவசியக் கேள்விகள் கேட்காமல் விட்டு விடுகிறேன். இப்போது உங்கள் வீடு முடியாது என்று ஆகிவிட்டதால், வேறு எங்கே போகலாம், சொல்லுங்கள்? என் ஹோட்டல் அறைக்கே போய் விடலாமா? குறுக்கீடு இல்லாமல் பேச முடியும்.''



''அருமையான யோசனை மாப்பிள்ளை!'' என்றார் சிதம்பரம்.

இந்த 'மாப்பிள்ளை' என்கிற வார்த்தை அவர் தேவை யற்று, அதிகமாகப் பயன்படுத்துகிறாரோ என்று தோன்றிய போதும், அப்போதைக்கு அவன் ஒன்றும் சொல்ல வில்லை.

அவன் விவரம் சொல்லும்போது, அவராக நிறுத்திக் கொள்ளப் போகிறார் அவ்வளவுதானே என்பது அவனுக்கு.



# 5

ஹோட்டல் அறையில், பழச்சாறு கொஞ்சம் வாங்கி ப்ரிஜ்ஜில் வைத்திருந்தான். சிறு சிறு பாட்டில்கள், ஒன்றைத் திறந்து, அவரிடம் கொடுத்து விட்டுத் தனக்கும் ஒன்றை எடுத்துத் திறந்தான் குணசேகரன்.

அறையைப் பார்வையால் சுற்றிவிட்டு ''பார்க்க மகிழ்ச்சியாக இருக்கிறது. நல்ல நிலையில் இருக்கிறீர்கள் என்று தெரிகிறது!'' என்றார் மருத்துவர்.

லேசாகத் தோளைக் குலுக்கினான் அவன். ''முயற்சி திருவினை ஆக்கும் என்பார்கள். கடவுள் அருளும் இருந்தது.''

''அந்த முயற்சிதான், இங்கே இல்லாமல் போனதும்! தகப்பனுக்குத் தான் இல்லை என்றாலும், இளைய

தலைமுறை, முன்னதை விடவும் மோசமாகப் போனது தான் ரொம்பப் பரிதாபம்!'' என்று வருத்தப்பட்டார், மருத்துவர்.

''பயங்கரமாகப் பந்தாக் காட்டுவார்களே! பணத்தி லேயே படுத்துப் புரளலாம் என்றெல்லாம் சொல்வார் களே!'' என்று புருவம் சுளித்துக் கேட்டான் சின்னவன்.

''முடிந்திருக்கும், முடிந்திருக்கும்! ஆனால், குத்தித் தின்றால், குன்றும் மாளும் என்று ஒரு பழமொழி உண்டே! அதை மறந்ததுதான் பெரிய பிழை! தானாக ஒரு பைசா சம்பாதித்தது இல்லை! முன்னோர் சேர்த்து வைத் ததை விற்று விற்றே, இருக்கிற வரை, கண்ணபிரான் ஊதித் தள்ளினான்...''

திடுக்கிட்டு அவரைப் பார்த்தான் குணசேகரன்.

இருக்கும் வரை என்றால், சொத்து இருக்கும் வரையா? அல்லது...

''திலோத்தமா அப்பா... இப்போது...''

திகைப்புற்று, அவனைப் பார்த்தார் டாக்டர், ''கட வுளே...!'' என்று நெற்றியில் அறைந்து கொண்டார். ''அப்படியானால், கண்ணபிரான் இறந்தது. உங்களுக்குத் தெரியவே தெரியாதா? நானே நீங்கள் கருமாதிக்குக்கூட வராமல் அநியாயம் பண்ணி விட்டீர்கள் என்றல்லவா எண்ணினேன்'' என்றார் சிதம்பரம். ''உங்களுக்கு... வீட்டு மருமகனுக்குச் சொல்லவே இல்லை போல!'' என்றார் கசந்த குரலில்.

உண்மையான எத்தனையோ பிழைகள் இருந்தன தான். ஆனால் உண்மையை மறைத்து, இன்னோர் பிழையேற்ற மனமின்றி'' அவர்களை குற்றம் சொல்லவும்



வழியில்லை, டாக்டர் சார். வீட்டை விட்டுப் போன பிறகு, நான் எங்கே இருக்கிறேன். என்ன செய்கிறேன் என்று இவர்களுக்குத் தெரிவித்ததே இல்லை! முதலில், நல்ல நிலைமைக்கு வருமுன் சொல்லக்கூடாது என்று நினைத் தேன். பிறகு அந்த நிலை: அதாவது, பிரிந்திருப்பதே பழகிப் போய்விட, இவர்களிடம் சொல்லத் தோன்றவே இல்லை... ஆனால், திலோ வீட்டு விவரம் சொல்லுங்கள். என்னவோ, சும்மா இருந்து சாப்பிட்டாலும், பத்துத் தலை முறைக்கும் தாங்கும் என்றெல்லாம் பேசிக் கொள்வார் களே! என்னதான் ஆயிற்று?'' என்று மாமனார் குடும்பம் பற்றியே மீண்டும் பேச்சைத் திருப்பி விட்டான் குண சேகரன்.

''பத்துத் தலைமுறை என்பதெல்லாம் பெரும் மிகைப் படுத்தல்! ஆனால் இன்னும் கொஞ்ச காலம் தாங்கும் தான்... கண்ணபிரான் இறந்த பிறகு, அதே ஊதாரித் தனத்தோடு மகன்! அவனுக்குப் போட்டியாகப் பெற்ற வள்! விட்டால், அம்மாக்காரி எல்லாவற்றையும் விற்று விற்றுத் தின்றே தீர்த்திருப்பாள்! மார்க்கெட் நிலவரம் ஒன்றும் தெரியாமல், சும்மா அடி மாட்டு விலைக்கு கையெழுத்தைப் போட்டுப் பணம் வாங்கிச் சும்மா ஊதி விட்டிருந்தாள். பையன் சொல்லிப் பார்த்துவிட்டு, கேஸ் போட்டு, இப்போது யாரும் விற்க, விலை செய்ய முடியாத நிலை..!

''இவனும் என்ன உயர்வு? கார்களை எல்லாம் விற்று விட்டான். இந்த அழகில் கல்யாண ஆசை வேறு! இந்தக் குட்டைக்குள் சுய உணர்வு உள்ள எவன் பெண்ணைக் கொடுப்பான்? உடனே, மன்னன் தேவதாசாகி விட்டான். எந்நேரமும் போதையில்தான் இருப்பது! சே! சகிக்க

வில்லை!'' என்று வெறுப்புடன் கூறி முடித்தார் டாக்டர் சிதம்பரம்!

அவர் சொல்லாதது ஏதோ பாக்கி இருப்பது போன்ற உணர்வு குணசேகரனுக்கு.

ஆனால், அவராகச் சொல்லாததை வற்புறுத்தி அறிய அவனுக்கு மனமில்லை!

எதையும் மறையாது பேசுகிறவர், சொல்லாதிருக்க வேண்டும் என்றால், சரியான காரணம் இருக்கும்தானே?

அத்தோடு, அவனுக்கு ஓர் ஊகமும் இருக்கவே, தனக்குத் தேவையான விவரம் மட்டும் விசாரித்தான். ''இந்த அம்மாவுக்கு என்ன?''

''என்ன கேடு? பெரிதாக ஒன்றுமில்லை! சர்க்கரை, ரத்த அழுத்தம் எல்லாவற்றுடன், நெருங்கிய உறவு! அதிகப்படியான நெருக்கமே! ஆனாலும், கேக் கோக் இல்லாமல் சாப்பிட முடியாது! எந்நேரமும் ப்ரிஜ்ஜுக் குள் எதையாவது வைத்துத் தின்று கொண்டே இருப் பார்கள்...''

''அதெப்படி? வேண்டாத நோய்கள் அத்தனையும் வைத்திருப்பதாகச் சொல்லுகிறீர்கள்! இப்படியெல்லாம் சாப்பிடுவது, எப்படி ஒத்து வரும்?'' என்று கேட்டான் குணசேகரன்.

''எப்படி ஒத்து வர முடியும்? ஒத்து வராததின் விளைவு தான். அவர்களது இந்த மருத்துவமனை விஜயம்! அவ் வப்போது, இப்படிப் படுத்து எழுவது! தடவைக்கு முப்பது நாற்பது செலவாகும்! பாவம்! திலோத்தமாப் பெண்தான், மெழுகுவர்த்தியாகக் கரைகிறாள்.



''உங்களுக்கு திலோ பற்றித் தெரியுமா? அவளுக்கு ரொம்பவும் பொறுப்பு வந்து விட்டது! சின்னப் பிள்ளை களுக்கு மாண்டிசோரிப் பள்ளி வைத்துச் சம்பாதிக்கிறாள்! ஆனால், பெற்றுப் போட்ட இந்தம்மா பண்ணுகிற வேலை, அவள் சம்பாதிப்பதோடு ஏற்கனவே அழித்தது போக மிச்சம் இருக்கும் ஒன்றிரண்டு நகைகளும் ஒவ் வொன்றாகக் காலியாகிக் கொண்டிருக்கின்றன!

''மாப்பிள்ளை ஒன்று செய்யுங்கள்! உங்கள் மனை வியை இங்கிருந்து அழைத்துப் போய்விடுங்களேன்'' என்று திடுமென அவனிடம் கேட்டு விட்டார் அவர்.

திகைத்துப் போனான் குணசேகரன்.

அவன் வந்த வேலை என்ன? நேர் மாறாக, இவர் என்ன கேட்கிறார்!

அடிக்கொரு 'மாப்பிள்ளை' போட்டதன் அர்த்தமும் இதுதான் போலும்.

ஆனாலும், மரியாதைக்குரிய பெரியவர். வாய்விட்டுக் கேட்டு விட்டார்! பதிலும் சொல்லியே ஆக வேண்டும்.

ஓர் இக்கட்டில் மனைவிக்குக் குணசேகரன் உதவி செய்தான்தான். அவனது பரிசை அணிந்திருப்பதைப் பார்த்ததிலேயே, ஆனந்தம் அடையவும் செய்தான்!

ஆனால், அவன் சூடு பட்டவன். பூனையைக் காட் டிலும் மோசம்! ஒன்றல்ல பலமுறை தீச்சூட்டை அனு பவித்திருக்கிறான்! இல்லையில்லை, செல்லமாக வளர்ந்ததன் விளைவு என்று பலமுறை பொறுத்துப் போயிருக்கிறான்.

ஒரு மரியாதை தெரியாத பணக்காரக் குடும்பத்தில், வீட்டு மாப்பிள்ளையாக வாழ நேர்ந்த மானமுள்ளவன்

அனுபவிக்கக் கூடிய பல வேதனைகளை அவனும் அனுபவித்திருக்கிறான்.

பொறுத்துப் பொறுத்துப் போனவன், கடைசியாகப் பொறுக்க முடியாமல் தான் வெளியேறினான்.

மனிதர்கள் மாறுவதில், அவனுக்கு அவ்வளவு நம்பிக்கை கிடையாது.

'சிறுத்தை தன் புள்ளிகளை மாற்றிக் கொள்வது இல்லை' என்று நமக்கு ஒரு பழமொழியே இருக்கிறதே!

திலோத்தமா மாறியிருப்பதாக இவர் நினைக்கிறார்.

தேவைப்படும் பணத்தைச் சம்பாதிப்பதிலேயே, ஒருவர் நல்லவராகி விட முடியுமா? அப்படியானால், அவனுக்கு இப்போது, உலக மகா நல்லவன் பட்டமல்லவா கொடுக்க வேண்டும்!

பண விஷயம் இருக்கட்டும். மருத்துவமனையிலேயே, அவனிடம் திலோத்தமா கடுமையாகத்தானே பேசினாள்? மறுபடியும் அவனை விரட்டுவதிலேயே தானே, முனைப்பாக இருந்தாள்.

மனம் மாறி, அவனோடு வாழ விரும்புகிறவளின் தன்மையா அது?

இந்த வாழ்வு எனக்கு நன்றாகவே இருக்கிறது. தொல்லை செய்யாமல் போய் விடு என்பதுதானே?

ஒதுங்கி விடுவதே அவனது விருப்பமும் என் கையில், உளைக்குள் இறக்குவது போல, எதற்கு இன்னொரு முயற்சி?

இதெல்லாம் சொன்னால் இவருக்குப் புரியுமா? மருத்துவம் படித்தவரே என்றாலும், மூத்த தலைமுறை! திருமணம் ஆயிரம் காலத்துப் பயிர் என்று வாதிடலாம்.



அதற்காக மனதை மாற்றிக் கொள்ளப் போவதில்லை என்றாலும், சிதம்பரத்திடம் முகம் கடுத்துப் பேச மனமின்றிப் பேசாதிருந்தான் அவன்.

மௌனமே ஒரு பலமான ஆயுதம் அல்லவா?

சற்று நேர அமைதியின் பின் ''ஏன்? என்ன விஷயம்?'' என்று சிதம்பரமே கேட்டார்.

மணவிலக்கு பற்றி முயற்சி எடுக்கவே வந்ததாகக் குணசேகரன் கூறவும், அவர் சற்று நேரம் ஒன்றுமே பேசவில்லை! திகைப்பில் பேச்சிழந்தவர் போல அசைவற்று அவர் அமர்ந்திருந்த தோற்றம், அவனுக்கே ஒரு மாதிரி இருந்தது!

ஆனால், திலோத்தமாவிடம் அவருக்கு பிரியம் அதிகம். செல்வத்தில் வளர்ந்த அவள். இப்போது தானே உழைத்து சம்பாதிப்பதே அவருக்கு வருத்தமாகத்தான் இருக்கும். தாலி கட்டியவன் வளம் பெற்று விட்டான் என்றதும், செல்லப் பெண்ணுக்கு பழைய வாழ்வு கிட்டி விட்டதாக எண்ணி விட்டார் போலும்!

ஆனால், பட்டறிவு பெற்றவன் அவனல்லவா?

மீண்டும் நிலவிய மௌனத்தின் பின் ''போன வாரம் திலோவோடு பேசியிருப்பீர்கள்...'' என்று இழுத்தார் பெரியவர்.

பேச்சா? அவள் போ போ என்று விரட்டியதற்குப் பெயர் பேச்சு என்றால் அவர்கள் பேசினார்கள்தான்.

''ம். பேசினோம்'' என்றான் சுருக்கமாக.

''ஓ! அப்படியானால் நான் சொல்வதற்கு ஒன்றும் இல்லை!'' என்று எழுந்தார் சிதம்பரம்.

மறுபடியும் மௌனத்தையே துணை கொண்டு அவரோடு குலசேகரனும் எழுந்தான்.

''நீங்கள் சிரமப்பட வேண்டாம். ஹோட்டல் வளாகத்தி லேயே டாக்சி கிடைக்கும். நான் அதிலேயே...'' என்ற வரை இடைமறித்தான் குணசேகரன்.

''என்ன சார், நீங்கள்? திலோத்தமாவோடு திருமண உறவு முறிந்து போனால், உங்களோடு என் பழக்கமும் முடிந்து போகுமா? அவளுடனுமே, நான் தோழனாக வாழத்தான் விரும்புகிறேன். நீங்கள் எப்போதும் என் மதிப்புக்கு உரியவர். டாக்டர் சார்! வாருங்கள், உங்களை வீட்டில் கொண்டு போய் விட்டுட்டுப் போகிறேன்'' என்று புன்னகையோடு கூறியவாறு, டீ.வி. மீது வைத் திருந்த கார் சாவியை எடுத்தான்.

ஒரு பெருமூச்சு விட்டார் அவர். ''வாருங்கள் போவோம்! ஆனால் இப்படி ஒரு குணவானோடு வாழ, அந்தப் பெண்ணுக்குக் கொடுத்து வைக்கவில்லை பாருங்கள்!'' என்று வருந்தியவர். உடனே வேதாந்தத்தில் இறக்கித் தன்னைத் தானே சமாதானமும் படுத்திக் கொண்டார். ''எப்படியும், தலைவிதி என்று ஒன்று இருக்கிறதில் லையா? திலோ தலைவிதி, இப்படி!'' என்று அறையை விட்டு வெளியே சென்றார்.

அறையைப் பூட்டுகிற பாவனையில் அந்தப் பேச்சைத் தொடராமல் விடுத்தான் குணசேகரன்.

ஆனால், மாண்டிசோரி என்றால் சின்னப் பிள்ளை களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்! திலோத்தமா வுக்கு, அவ்வளவு பொறுமை உண்டா, என்ன?

டாக்டரின் வீடு இருந்த கிளைச் சாலையை நெருங் கும்போதே, அந்தத் தெருவில் திரும்ப வேண்டாம் என்று சிதம்பரம் தடுத்தார்.



''அது, முட்டுச் சந்து, குணசேகர், கடைசி வரை போய்த் திரும்பி வர வேண்டும்! நான் இங்கேயே இறங்கி நடந்து போய்விடுகிறேனே! எனக்கும் காலுக்குக் கொஞ்சம் வேலை கொடுத்த மாதிரி இருக்கும்!''

லேசாகச் சிரித்தான் குணசேகரன். ''நினைவிருக்கிறது டாக்டர் சார்! வீடு வரை வந்து, புத்திசாலி என்ற பெயரைக் கெடுத்துக் கொள்ள எனக்கு மனமில்லை! அதனால் நானும் இங்கேயே உங்களிடம் விடைபெற்றுக் கொள் கிறேன்!'' என்று காரிலிருந்து இறங்கி, அவர் புறம் சென்று அவரோடு கை குலுக்கிவிட்டுத் திரும்பும்போது, ஒரு ஸ்கூட்டர் வேகமாக வந்து, அவர்கள் அருகே நின்றது.

இளம் பெண் ஒருத்தி அதிலிருந்தவாறே ''என்னப்பா இங்கே இறங்கு...'' எனும்போதே, அவளது கவனம் குணசேகரிடம் பாய்ந்தது.

பார்வையில் வியப்பும், மகிழ்ச்சியும், இன்னும் ஏதோ ஒன்றுமாகக் கண்கள் விரிய, ''அடடே... நீங்கள் திலோக்கா கணவரில்லை? என்னை நினைவிருக்கிறதா? நான் அப்பாவுடைய செல்ல மகள், நளினி. நினை வில்லை என்றால் நான் ஒன்றும் தப்பாக எடுத்துக் கொள்ள மாட்டேன் சார்! அப்போதெல்லாம் உங்கள் கண் திலோக்கா தவிர, வேறு எங்கும் போகவே போகாதே! வீட்டுக்கு வாருங்கள். இவரை உள்ளே கூட்டி வாருங்கள் அப்பா! ஒரு காபி குடித்து விட்டுப் போகட்டும்'' என்று அழைத்து விட்டு மீண்டும் ஸ்கூட்டரைக் கிளப்பிக் கொண்டு முன்னே சென்றாள்.

குணசேகரன் கேள்வியாக நோக்க, மருத்துவர் லேசா கத் தோளைக் குலுக்கினார். ''பார்த்தது பார்த்தாகி விட்டது. குணசேகர்! வீட்டுக்கு வந்து காபியாவது குடிக்கலாம்,

வாருங்கள் என் மகள் போடும் காபி நன்றாக இருக்கும்'' என்று அழைத்தார்.

அவனும் மறுக்கவில்லை.

கார்க் கதவைத் திறந்துவிட்டு, அவரை ஏறிக்கொள்ளச் சொன்னவன், மெதுவாகக் காரை ஓட்டியபடி கேட்டான். ''செல்வத்தின்... திலோ அண்ணனின் காதல்... அது. உங்கள் மகளா, சார்?''

சில கணங்கள் பேசாதிருந்து விட்டு ''நீங்கள் சும்மா வளரவில்லை. குணசேகரன்'' என்றார் சிதம்பரம் பாராட்டு தலாக!

தொடர்ந்து ''ஆனால் பாருங்கள், தன் முயற்சியால், ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணமே இல்லாமல் இருப்பதை விற்றே டாம்பீகமாக வாழ்க்கை ஒருவனுக்கு. எப்படிப் பெண்ணைக் கொடுப்பது? இங்கே என் பெண்ணுக்கு கொஞ்சம் ஆசைதான். அந்த வீட்டில் எல்லோருமே பார்க்க நன்றாகத்தான் இருப்பார்கள்? அதில் மயக்கம்! ஆனால், வாழ்க்கைக்கு அழகு மட்டும் போதாதே! காரண காரியத்தோடு எடுத்துச் சொல்லவும், நளினி ஒத்துக் கொண்டு விட்டாள். உள்ளூர வருத்தம் இருந்தாலுமே! ஆனால், செல்வம் எப்போதும் கையில் பாட்டிலோடுதான் இருப்பது! குடி மயக்கத்தில் காதல் துக்கத்தை மறக்கிறாராம். துரை! அசட்டுத்தனம்! வடிகட்டிய முட்டாள்தனம்!'' என்று கோபத்துடன் பொரிந்து கொட்டியவர், ஒரு பெரிய மூச்சோடுத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டார்.

''தன்னைத் தானே ஒருத்தன் வீணாக்கிக் கொள்வதைப் பார்க்கும் போது, பொறுக்க முடியவில்லை



குணசேகர்! இப்படிப்பட்ட ஒருத்தனுக்காக, இங்கே ஒருத்தி! பார்த்தீர்கள் அல்லவா? நல்லபடியாகத்தானே பேசிப் பழகுகிறாள்? திருமணம் என்றால் அப்படியே கல் மாதிரி முகம் மாறிவிடும். இப்போதைக்கு அந்தப் பேச்சே எடுக்கக் கூடாதாம். அதற்கு அவள் மனம் தயாராக இல்லையாம். வேண்டும்போது அவளே சொல்வாளாம். இவள் என்றைக்குச் சொல்வது? அந்தத் தேவதாஸ் திருந்தி வருவதற்காக காத்திருக்கிறாள் என்பது என் அபிப்பிராயம்! அது நடக்கிற காரியம் இல்லை என்பது என் கணிப்பு! திருந்த வேண்டும் என்கிற எண்ணம், கொஞ்சமேனும் அவனுக்கு இருந்தால் அல்லவா, வேலை நடக்கும்? என் மனைவிக்கு ஒரே வருத்தம். இரண்டு பிள்ளைகள் வாழ்வு நன்றாக அமைந்தது என்று பார்த்தால், கடைக்குட்டி இப்படி வக்கரித்து நிற்கிறாளே என்று, கோயில் கோயிலாக அலைகிறாள். ஆனால், மனிதனின் மடத்தனத்துக்குக் கடவுள் என்ன செய்வார்? என்னவோ, கண் பாராதது. கருத்தில் இருந்து மறைந்து விடும் என்று ஒரு 'சைக்காலஜி' உண்டே, அதன்படி, இப்படியே ஒதுங்கியே இருந்தால், மறந்துவிட மாட்டாளா என்பது எனக்கு!''

எவ்வளவு மெதுவாக ஓட்டினாலும், செல்லுமிடம் வந்துதானே தீரும்?

காரைச் சிதம்பரத்தின் வீட்டுமுன் நிறுத்தியபடி, ''ஒன்றிலிருந்து ஒன்றாக நினைவுபடுத்த, இன்று நான் வந்தேன் போல! சாரி!'' என்றான் சிறு வருத்த முறுவலோடு, குணசேகரன்.

''ஒன்றில்லாவிட்டால், இன்னொன்று! ஏதாவது ஒன்று, என் மகளுக்கு எப்போதும் கிடைக்கும். அதை விடுங்கள்.

இப்போது உள்ளே வாருங்கள். நல்லபடியாகக் காபி யேனும் குடிக்கலாம்!'' என்று அழைத்தார் பெரியவர்.

நளினியின் காபி மெய்யாகவே நன்றாக இருந்தது!

ஐந்து ஆண்டுகளுக்கு முன் அவன் அறிந்த செல்வத்தை எண்ணிப் பார்க்கும்போதே, இந்த நளினி கிடைத்தால், அவன் அதிர்ஷ்டக்காரன் என்றே, குணசேகரனுக்குத் தோன்றியது!

ஆனால், அவளுக்கு?

சிதம்பரம் சொன்னது போலத் தோற்றப் பொருத்தம், பிரமாதமாகத்தான் இருக்கும்! அவனும் திலோத்தமாவும் இருக்கவில்லையா? அதுபோல!

ஆனால், பிறகான வாழ்வு என்று ஒன்று இருக்கிறதே! அதைப் பற்றி எண்ணிப் பார்த்துச் செயல்படும் பெற்றவர் இருப்பது, எவ்வளவு பெரிய பாக்கியம் என்று அவளுக்குப் புரிகிறதோ, என்னவோ?

'அத்திப் பழத்தைப் புட்டுப் பார்த்தால், அத்தனையும் சொத்தை' என்று ஒரு பழமொழி கேட்டிருக்கிறான். அதுபோல, நல்லதாக எண்ணி மகிழ ஒன்றுமே இல்லாத வாழ்வு, பாவம் பூ மாதிரி இருக்கும் இந்தப் பெண்ணுக்கு நேராமல், நல்ல வேளையாகத் தகப்பனார் காப்பாற்றுவார்!

கடவுள் அருளால், நளினிக்கு நல்ல வாழ்வே அமையட்டும் என்று எண்ணினான் குணசேகரன்.

காபியை அருந்தி முடித்து, உரிய விதமாகப் பாராட்டி விட்டுக் கிளம்பினால், அவனது கையைப் பற்றிக் கொண்டு, சிதம்பரம் கூடவே வந்தார்.

கார் அருகே வந்ததும், அவன் கையை விடாமல், ''உங்கள் சொந்த விஷயத்தில் நான் தலையிட முடியாது!



ஆனால்... வீட்டுக் கஷ்டங்கள் அனைத்தையும் திலோ தனியாக நின்று தாங்குகிறாள். இப்போது உங்களிடம் நல்ல வசதி என்று தெரிகிறது. கொஞ்சம் பணமாவது, கொடுங்களேன்!'' என்றார் குரலில் சிறு தடுமாற்றத்துடன்.

பாசத்தைக் கொட்டிப் பழகிய பாவம்!

ஆனால் இது விஷயத்தில் இளகுவது அவனுக்கு நல்லதல்ல.

''விவாகரத்து செய்யும் போது ஓரளவு நிறையவே பணம் வருமே! கூடுதலாகக் கிடைக்கும்படி ஏற்பாடு செய்கிறேன்!'' என்றான் குணசேகரன்.

முகம் வாட, ''கட்டாயம் செய்யுங்கள். வேறு யாருக்காவது இல்லை என்றாலும் அந்தக் குழந்தைக்காக வேனும் செய்யுங்கள்'' என்று வருத்தத்துடன் கூறினார் சிதம்பரம்.

''கட்டாயம்!'' என்றவாறு காரில் ஏறினான் அவன்.

எதற்கு இந்தப் பார்வை? என்னவோ புரியாத மாதிரி! எப்படியும், அவன் மனம் மாறிவிடுவான் என்று எதிர் பார்த்தாரா?

ஐந்து ஆண்டுகால இடைவெளியில், அவன் யோசித்து எடுத்த முடிவை, அவரோடு பேசிய இந்த ஒரு மணி நேரப் பேச்சில் மாற்றிக் கொள்வான் என்று எப்படி நினைத்தார்? அந்த அளவுக்கு அவர் ஒன்றும் உலகம் அறியாதவர் அல்லவே!

சொல்லப் போனால், அவர் பார்க்கும் தொழிலினால், மனித உணர்வுகளைச் சற்று அதிகமாகவே புரிந்து வைத்திருக்கக் கூடியவர்!

பாசம், அவ்வளவா, கண்களை மறைக்கும்? ஏற்க முடியவில்லை அவனால்!

முட்டுச் சந்தில் காரைத் திருப்பிக் கொண்டு வந்து, டாக்டரின் வீட்டருகே சற்றுத் தயங்கிக் கையாட்டிவிட்டு குணசேகரன் வேகம் எடுத்த அப்போதும், அதே புரியாத பார்வையுடன்தான் சிதம்பரம் நின்றார்.

என்ன யோசித்தும், அந்தப் பார்வையின் பொருள் அவனுக்குப் புரியவே இல்லை!

# 6



சிதம்பரத்தின் பார்வை புரியாதபோதும் அறைக்கு வந்து, நடந்ததை அலசிப் பார்த்தபோது, அவனது பல கேள்விகளுக்கான விடைகள் குணசேகருக்குக் கிடைத்தன.

மருத்துவமனைக்கு ஏன் பணம் கட்ட முடியவில்லை என்று புரிந்தது!

திலோவின் மங்கிய தோற்றம் எப்படி வந்தது என்றும் புரிந்தது!

காரணம், அவள் மேனியில் அதிக நகைகள் இல்லாதது இல்லை!

களைப்பு!

மாண்டிசோரிப் பள்ளி என்றால், சின்னப் பிள்ளைகளை வைத்துச் சமாளிக்கிற வேலை. மனம், உடல் இரண்டுமே களைத்துப் போகும்!



அது போக, வீட்டிலும் வேலைகள்... இருக்கும்! பழைய மாதிரி வேலையாட்களையே கண்ணில் காணவில்லையே!

இதற்கு மேலாக, தாயார் என்ற பெயரில் இருக்கும் அந்த அம்மாளுக்குப் பணிவிடைகள் வேறு செய்திருப் பாள்!

திலோத்தமா தானே யோசித்து, எல்லாம் செய்திருக் கிறாள். செய்கிறாள் என்பது, அவனுக்கு ஆச்சரியமாகவே இருந்தது!

பக்கத்திலேயே, அவளுடைய அண்ணன் இல்லை? தண்ணியிலே முழுகித் துக்கத்தைக் கரைத்துக் கொண்டு!

அல்லது துக்கம் கரைவதாகச் சொல்லுவதே, தண்ணி யடிப்பதற்கு ஒரு சாக்கா?

எது எப்படியோ?

இப்போது 'குருவி தலையில் பனங்காயை வைத்த மாதிரி' எல்லோரும் அந்த வீட்டுக்கே கடைக்குட்டியான திலோத்தமாவின் தலையில் ஏறி உட்கார்ந்திருக்கிறார்கள்!

பள்ளியில் அவள் சம்பாதிக்கிற பணம், மிச்ச மீதி நகைகள்... என்று சிதம்பரம் சொன்னது, அவனுக்கு நினைவு வந்தது!

இன்னும் மருத்துவமனைக்கு எவ்வளவு பணம் தேவையோ?

சுமார் ஒரு வாரம் மருத்துவமனையில் வைத்துப் பார்க்க நேரும் என்றுதான். முதலில் பணம் கட்டச் சொன்னார் கள். இப்போது, ஒரு வாரம் ஆகி விட்டதே!

இன்னும் எத்தனை நாட்களுக்கு, எவ்வளவு தேவையோ?

அந்தத் தண்ணிக்காரனுக்குத் தாயார் மருத்துவமனை யில் இருப்பதே நினைவு இருக்கிறதோ, இல்லையோ?

பணத்தேவை பற்றிய யோசனை வந்ததுமே, குணசேகரன் மருத்துவமனைக்குச் சென்றான்.

விசாரித்ததில், அவன் கட்டிய பணம் முடிந்து போயிருந்த போதும், அவன் செல்லில் சொன்னதை வைத்து, திலோத்தமாவிடம் கேளாமல் காத்திருந்தார்கள்.

''பெரிய தொகை என்றால், கேட்டிருப்போம், சார். வெறும் ஐநூறு ரூபாய்தான் அதிகப்பற்றாகி இருக்கிறது! இன்னும் சில நாட்கள், நோயாளி இங்கிருக்க வேண்டியிருக்கும் என்று மிசஸ் கண்ணபிரானுடைய டாக்டர் சொன்னார். அதற்குக் கிட்டத்தட்ட...'' என்று தோராயமாக ஒரு தொகை சொன்னார், விவரம் சொல்லும் இடத்தில் இருந்த அலுவலர்.

பணத்தைக் கட்டிவிட்டுக் குணசேகரன் கிளம்ப போனபோது, ''நீங்கள் வந்தால் அறைக்கு அழைத்து வருமாறு, மேடம் சொன்னார்கள், சார்!'' என்று சொல்லி, ஓர் அட்டென்டரைக் கூட அனுப்பி வைத்தார் அலுவலர்.

மேடம் என்று யாரைச் சொல்லுகிறார்? அம்மாவையா? மகளையா?

அவ்வளவு மனமில்லை என்றாலும், அலுவலரிடம் மறுக்க மாட்டாமல் சென்று, அறைக்குள் பார்த்தால், தாயார் மட்டும்தான் உட்கார்ந்திருந்தாள்.

மருமகனைக் கண்டதும், ஏகப்பட்ட உபசாரங்கள் செய்தாள்.

''வாருங்கள் மாப்பிள்ளை, வாருங்கள்'' என்று வாய் நிறைய வரவேற்று, உட்காரும்படி உபசரித்து, அவன் அமர, உட்கார, அந்த அட்டென்டரையே நாற்காலி எடுத்துப் போடச் சொல்லி, போட்ட பிறகு கதவைச் சாத்திச் செல்லுமாறு, அட்டென்டரை அனுப்பியும் வைத்தாள்.



மருத்துவமனைப் பணியாள் சென்றதும், ''நாற்காலியைச் சற்று பக்கத்தில் இழுத்துப் போட்டு, உட்காருங்கள் மாப்பிள்ளை! இல்லாவிட்டால் நீங்கள் பேசுவது எனக்குச் சரியாகக் காதில் விழாது!'' என்று கேட்டுக் கொண்டாள் ஆனந்தி.

இந்த மாமியாருக்கு, அவனை உட்கார வைக்கும் மரியாதை கூடத் தெரிகிறதே என்று உள்ளூர ஆச்சரியப் பட்டான், குணசேகரன்.

முன்பெல்லாம், அந்த நினைவே இராது! போகிற போக்கில் அம்மையார் உதிர்க்கும் முத்துக்களை அவன் சரியாக எடுத்துக் கோர்க்கவில்லை என்றுதான் குறைகள் வெடிக்கும்! இப்போது உட்காரச் சொல்லி, உபசாரம் செய்வது எதற்கு? இதெல்லாம், சும்மா ஆடுகிற குடுமியில்லை!

விஷயம் மெல்ல வெளிவந்தது.

அம்மையாருக்கு மகள் மீது கோபம்! அவளை அதட்டி வழிக்குக் கொண்டு வர, மருமகன் தேவைப்பட்டான்!

''நீங்கள் சொன்னால் கேட்பாள், மாப்பிள்ளை! வீட்டிலே ப்ரிஜ்ஜைத் திறந்தால், உருப்படியாக ஒன்றுமே இருப்பதில்லை மாப்பிள்ளை! கோக், பெப்சி, சாக்கலேட் புட்டிங், மோஸ், ஐஸ்கிரீம்... ஒன்றுமே... எதுவுமே ப்ரிஜ்ஜில் வைப்பதே இல்லை, மாப்பிள்ளை! முதலில் அதையெல்லாம் வாங்கி, ப்ரிஜ்ஜை நிரப்பச் சொல்லுங்கள்! செய் என்று நீங்கள் அதிகாரமாகச் சொன்னால், அவள் செய்வாள். எப்படியும் கட்டின புருஷனுக்கு

அடங்கி, ஒரு பெண் பிள்ளை செய்துதானே தீரவேண் டும்!''

பார்லருக்குப் போகக் கார் எடு என்றால், காரை எடுக்காமல் அப்படி என்ன வெட்டி முறிக்கிறானாம்... என்று மருமகன் காதில் விழுமாறு, இதே ஆனந்தி அம்மாள் உரக்கப் பேசியது, அவனுக்கு நன்றாகவே நினைவு இருந்தது!

அன்றும் அவன் திலோத்தமையுடைய கணவன்தான்!

ஏன், ஒருநாள் அவன் எண்ணிச் சென்ற வேலை நடக்காமல், விருதாவாய் வெய்யிலில் அலைந்து விட்டுத் தலைவலியோடு திரும்பி வந்தான்.

வீட்டு ஹாலில் ஒரே ஆட்டபாட்டம்! நிறையப் பேர் சேர்ந்து சீட்டாடிக் கொண்டிருந்தார்கள்.

அந்தக் கூட்டத்தில் மனைவியையும் காணவும், தலைவலியைச் சொல்லி, சூடாகக் காபி வேண்டும் என்று அவன் கேட்டபோது என்ன நடந்தது என்று, அவனுக்கு நன்றாக நினைவு இருக்கிறதே!

''ரொம்ப வலிக்கிறதாப்பா?'' என்று கேட்டபோதும், திலோத்தமாவுக்குமே, அப்போது உடனே எழ மனமில்லை.

ஒருவேளை, அவன் மீண்டும் கேட்டிருந்தால், அவள் எழுந்து சென்றிருக்கவும் கூடும்!

ஆனால் அதற்குள், ''கேட்கும் போதெல்லாம் காபி போட்டுக் கொடுக்க, என் மகள் என்ன சமையல்காரியா? காபி வேண்டும் என்றால், சமையல்காரியிடம் கேட்டு வாங்கிக் குடிப்பதற்கென்ன?'' என்று அத்தனை பேர் நடுவில் உரக்கச் சொன்னது இதே அம்மையார்தான்.



அதைவிடவும், தாயார் அருகில் அமர்ந்து, அவளது சீட்டுக்களைப் பார்த்துக் கொண்டிருந்த மனைவி ''அம்மா தான் சொல்லி விட்டார்களே! சமையல் அறைக்குப் போய்ச் சீக்கிரமாகக் காபியைக் குடியுங்கள், சும்மா இங்கே நின்று, தலைவலியை அதிகப்படுத்திக் கொள்ளாதீர்கள்!'' என்று அவனை நிமிர்ந்தும் பாராமல் சீட்டை உன்னிப் பாகக் கவனித்தபடி, அறிவுரை கூறியதுதான் அவனுக்கு ரொம்பவும் வலித்தது!

அதற்குப் பிறகு, அவன் அதிக நாட்கள் அங்கே இருக்கவில்லை!

இப்படியெல்லாம் அவனை நோகப் பேசினோமே, ஐந்து ஆண்டுகள் தொடர்பே இல்லாது போனவன் மனதில் கோபம் இருக்குமோ என்ற பயம் இராதா?

இந்த அழகில், மகளையே திட்டச் சொல்கிறாளே...!

இத்தனை ஆண்டுகளாகக் கணவனைப் பிரிந்து வாழும் மகள்!

வேற்று மனிதரான சிதம்பரத்துக்கு இருக்கும் அக் கறையும், ஆதங்கமும் கூட, இவளுக்கு இல்லை!

இப்படி ஒரு தாய் வயிற்றில் பிறந்தவள், பரிதாபத் துக்கு உரியவள்தான்!

அவளைப் பார்க்கவே இல்லாதது மனதை உறுத்த, ''திலோத்தமா எங்கே?'' என்று விசாரித்தான்.

''எங்கே போய்த் தொலைந்தாளோ?'' என்றாள் அன்னை அசுவாசியமாக. ''அம்மாவுக்கு உடம்பு சரியில் லையே, கூடவே இருப்போமே என்று கொஞ்சமேனும் இருக்கிறதா? பள்ளிக்கூடம், மண்ணாங்கட்டி என்று போய் விட்டாள். பத்துப் பதினைந்து பிள்ளைகளை

வைத்துக் கொண்டு, இதெல்லாம் பள்ளிக்கூடமா? பேசாமல், மூடிவிடச் சொல்லுங்கள் மாப்பிள்ளை! மூடிவிட்டு, அம்மாவுக்கு வேண்டியதைப் பார்த்துச் செய்து கொண்டு, பக்கத்திலேயே இருக்கச் சொல்லுங்கள். சொல்வதைக் கொஞ்சம் கண்டிப்பாகச் சொல்லுங்கள்'' என்று சலிப்பும் எரிச்சலுமாகக் கூறிய ஆனந்தி கண்ண பிரான், திடுமென நிமிர்ந்து அமர்ந்தாள்.

''திலோவைத் திட்டுவதற்காகத்தானே, அவளைத் தேடுகிறீர்கள்? நன்றாக 'லெஃப்ட், ரைட்' விட்டு, விட்டுத் திட்டுங்கள், மாப்பிள்ளை! பெற்ற தாய்க்குப் பிடித்த மானது பார்த்துத் தின்னக் கொடுக்காதது எல்லாம், பிள்ளையா? இவளையெல்லாம் பெறாமலே இருந்திருக் கலாம்!''

திலோத்தமாவுக்கும் அப்படித்தான் என்றது, குண சேகரனின் மனம்.

இந்தத் தாயின் வயிற்றில் பிறக்காமல் இருந்திருந்தால், அவளும் எவ்வளவோ நிம்மதியாகவே இருந்திருக்கக் கூடும்!

ஒன்றும் தெரியாத பாவனையில் ''செல்வம் என்ன செய்கிறான்? எங்கே இருக்கிறான்? வெளியூரிலா?'' என்று விசாரித்தான் அவன்.

ஆத்திரத்துடன் கையை நெறித்து, ''குடித்துவிட்டு எங்கே உருண்டு கிடக்கிறதோ, அந்தக் கழுதை'' என்றாள் மாமியார்!

''பெற்ற தாய் மேலேயே, கேஸ் போட்ட பாவி! அவன் சும்மா இருந்திருந்தால் இப்படிப்பட்ட பிசுநாறி மகளிடம் நான் பாடுபடவே நேர்ந்திருக்காதே! தேவைக்கு ஒவ்வொன்றாக விற்று, நிம்...மதியாக இருந்திருப்பேனே! எவ்வளவு சொத்து, பாவிப்பயல்! என்னையும் கெடுத்து தானும் கெட்டான்! எல்லாம் குடி வெறியில் செய்த மடத்தனம், மாப்பிள்ளை! என்னைப் பொறுத்தவரை, இனி எனக்கு மகனும் இல்லை. மகளும் இல்லை! நீங்கள் மட்டும்தான். மருமகன் என்றால் என்ன அர்த்தம்? இன்னொரு மகன் என்றுதானே? எனக்கு மகன், மகள் எல்லாம் இனி நீங்களேதான்!



தன்னை மீறி முகம் வெளுத்து 'கடவுள் காப்பாற்றட் டும்' என்று எண்ணினான், குணசேகரன்.

முக்கியமாக, இந்த அம்மாளுக்காகவே இந்த வீட்டுச் சங்காத்தமே வேண்டாம் என்பதுதான் என் முடிவு என்று எண்ணியவனாக, அவன் எழுந்தான்.

''நான் டாக்டரிடம் கேட்டுக் கொண்டு, அப்புறமாகத் திலோத்தமாவிடம் பேசுகிறேன். வந்து... திலோத்தமா எங்கே இருப்பாள் என்று தெரியுமா? அவளை நான் இன்னும் பார்க்கவே இல்லை!'' என்று மனைவி பற்றிய விவரம் விசாரித்தான்.

''கழுதை கெட்டால், குட்டிச் சுவர்' மாப்பிள்ளை! எல்லாம் அந்த மண்டி... மாண்டி.. மண்ணாங்கட்டிப் பள்ளிக்கூடத்தைத்தான் நடத்திக் கொண்டு உட்கார்ந் திருப்பாள். விட்டால், இரவு வரை அதுங்களோடு... அந்தப் பிள்ளைகளோடுதான் கிடப்பாள்..! தாயாரைப் பார்க்க வேணும் என்கிற அறிவே கிடையாது! நன்றாக உறைக்கும்படிச் சொல்லுங்கள்!'' என்று ஒருவாறு வழியனுப்பி வைத்தாள், ஆனந்தி கண்ணபிரான்.

என்னவோ, இப்போது இந்தக் காரைக் கொண்டு போய் திலோத்தமாவின் முன்னே நிறுத்துவது பீற்றல் போலக்

குணசேகரனுக்குத் தோன்றிவிட, வீட்டுச் சுற்று மதிலுக்குச் சற்று தூரத்திலேயே காரை நிறுத்திவிட்டு, இறங்கி நடந்து போனான்.

காவலுக்கு ஆள் இல்லாத பெரிய கேட்டும், களை வளர்ந்து புதர் மண்டிக் கிடந்த தோட்டமும், அவனது மனதில் சுமையேற்றின! இதையெல்லாம் பார்க்கும் அளவுக்கு, அவளுக்கு வருமானம் இல்லை!

வருவதைப் பீராய இப்படி ஒரு தாய்! தாயின் மருத்துவச் செலவு வேறு!

இதற்கிடையே, தன்னையே ஒழுங்காகக் கவனிக்கிறாளோ, என்னவோ?

வீட்டுக்குள் இருப்பாளோ என்று பார்வையால் தேடும் போதே, பக்கவாட்டில் இனிமையாய் சிரிப்புச் சத்தம் கேட்டது!

சில இளங்குரல்களோடு, திலோத்தமாவும்.

இனிய மனநிலையைக் கெடுத்துவிட மனமின்றி, சத்தமின்றி மெல்ல நடந்துபோய் எட்டிப் பார்த்தான்.

இவர்கள்தான், அவளுடைய மாணவ மணிகள் போலும்!

எதையோ 'அவுக் அவுக்'கென்று கடிப்பது போல, அவள் நடித்துக்காட்ட, அவளை இடித்துக் கொண்டு சூழ்ந்து அமர்ந்திருந்த எல்லாப் பிள்ளைகளும் அது போலச் செய்தவாறே, ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தனர்.

அவர்களிலும் ஒரு துறுதுறு வாண்டு, அவளது மடியிலேயே ஏறி, அவளது அரவணைப்பிலேயே சொகுசாக உட்கார்ந்திருந்தது!



முக்கியமாக, அவள் சிரித்துக் கொண்டிருந்தாள்!

இந்த இனிய சூழ்நிலையைக் கெடுப்பதா?

பிடிக்காமல் திரும்பி விட்டான் குணசேகரன். அடுத்த முறை பார்த்துக் கொள்ள வேண்டியதுதான்! ஐந்து ஆண்டுகள், நினைக்கக்கூட இல்லாதது, இன்னும் ஒரு வாரம்... ஏழே நாட்கள் தாமதத்தில் என்ன ஆகிவிடும்?

நல்லவேளை! காரைத் தூரத்திலேயே விட்டு வந்தான்!

காரில் திரும்பி வரும்போது, அவனுக்கு ஒரு யோசனை!

தங்கியிருந்த ஹோட்டலுக்குப் போகாமல், திருமதி கண்ணபிரான் இருந்த மருத்துவமனைக்கே மறுபடியும் சென்றான்.

பெரிய டாக்டரையே நேராகச் சந்தித்து, பிரச்சினையை அவர் முன் வைத்தான்.

பணம் பிரச்சினை அல்ல என்றானதும், அவன் சொன்ன பிரச்சினைக்கான தீர்வும் எளிதில் கிடைத்தது!

அதன்படி, குணமாகிக் கொண்டிருந்த திருமதி கண்ணபிரானை அவசரப்பட்டு வீட்டுக்கு அனுப்பி, அங்கே அவள் எதையாவது தின்று மறுபடியும் இழுத்துக் கொள்வதைவிட, மருத்துவமனையிலேயே, தனியறையில் உணவுக்கட்டுப்பாடும் ஓய்வுமாக வைத்திருந்து, நூறு சதவீதம் குணப்படுத்தி, அதன் பிறகாக வீட்டுக்கு அனுப்பத் தலைமை வைத்தியர் ஒப்புக் கொண்டார்.

இந்தத் தாயோடு, திலோத்தமா படும் துன்பங்களைக் கண்டிருந்தவர் என்பதால், கட்டணம் முழுவதையும் குணசேகரன் முன் பணமாகவே கட்டி விடுவதாகச் சொன்னதால், அவனது திட்டத்தை உடனே ஏற்றார்.

அந்தப் பெண் கொஞ்ச நாட்கள் வீட்டில் நிம்மதியாக இருக்கட்டும், பாவம் என்பதுதான் அவருக்கும்!

அவரிடம், அதிகப்படிக் கட்டணம் பற்றி, திலோத்த மாவிடம் தெரிவிக்க வேண்டாம் என்று கேட்கலாமா என்று யோசித்துவிட்டுச் சும்மா இருந்து விட்டான்.

அவர் ஏன் என்று கேட்டால், என்ன சொல்வது என்பது ஒன்று, விரைவிலேயே மணவிலக்குப் பெறப் போகிறவ னுக்கு என்ன அக்கறை என்று தோன்றும்தானே?

அத்தோடு அறிந்துகொள்ள வேண்டும் என்று திலோத்தமா தீவிரமாக முயன்றால், மறைக்க முடியாது. மறைப்பதற்காக, முழுதாகப் பொய் சொல்லும்படி, 'உன்னத'த் தொழில் புரியும் ஒரு நிறுவனத்தைக் கேட்பது சரியும் அல்ல!

அதெல்லாம் நடக்கும் போது பார்த்துக் கொள்ளலாம், இப்போதைக்கு அவள் கவலையற்று இருக்கட்டுமே.

ஆனால், மெய்யாகவே, திலோத்தமா கவலையற்று இருக்க வேண்டுமானால், இந்தச் சில்லரைச் செயல் களால் பயன் கிடையாது! அதற்காக பக்காவாக, வேறு ஏற்பாடு செய்ய வேண்டும்.

விவாகரத்து மூலமாக அவன் கொடுக்கக் கூடிய பணத்தைக் கூட, அசலைத் தொட முடியாதபடி ஏதேனும் செய்யவில்லை என்றால், இந்தத் தாயும் தமையனும், ஆளுக்கொரு பக்கமாகப் பிடுங்கி, அந்தப் பணத்தையும் வீணாக்கி விடுவார்கள்!

ஆனால், திலோ, அவனிடம் பணத்தை வாங்கிக் கொள்வாளா? முதல் முறையாகக் குணசேகரனுக்குச் சந்தேகம் உண்டாயிற்று.



சென்ற வாரம் அவன் கட்டிய பணத்தை அவள் திருப்பவில்லைதான். திருப்பித் தரும் நிலையில் அவள் இல்லை என்பதுதான் காரணமாக இருக்கும் என்பது, அவனது ஊகம்.

ஆனால், அவள் அதுபற்றி அக்கறையற்று இருக்க வில்லை, தினமும் அன்றுவரை செலவு எவ்வளவு ஆயிற்று என்று கேட்டுக் கொண்டு தான் இருக்கிறாள் என்பது, அவனுக்கு 'பில்' கட்டும் இடத்தில் கிடைத்த தகவல்.

தொகையைக் கேட்டதும் ''அவ்வளவா?'' என்று திலோத்தமா திகைத்து, வாடிப் பின் சமாளித்த விவரம் 'பில்லிங்' பகுதியில் இருந்த ஒரு பெண்ணின் உபயம்!

கூடவே, பணத்தைத் திருப்பி விடுவதாக அவள் திரும்பித் திரும்பிச் சொன்ன வேகம், அவனுக்கும் மறக்கவில்லை.

முகவரி கேட்டாளே! அப்போது அவன் நேரிலேயே வந்திருப்பது தெரிந்தால், பணம் கொடுக்கவில்லையே என்று ரொம்பவும் குன்றிப் போவாள்.

வந்ததன் காரணம் தெரிந்தால், அவ்வளவுதான்! அவளது கர்வம் அதைத் தாங்கவே தாங்காது!

பிரிந்து போனவன் தாய்க்காகப் பணம் கட்ட நேர்ந்த தையே பொறுக்க மாட்டாதவள், அடியோடு பிரிய எண்ணுகிறவன் பணம் கட்டியதை எப்படி சகிப்பாள்?

இந்தப் பொறுப்பற்ற தாயார், மருத்துவமனையி லிருந்து வீடு செல்லும் வரையிலேனும், இந்தப் பண விஷயத்தோடு, நிரந்தரப் பிரிவு பற்றியும் அவளிடம் சொல்லாதிருப்பதுதான் நல்லது!

சில பல காரணங்களால், இந்த ஏற்பாட்டின் பின்னாலிருந்து செயல்படுவது அவன் என்பதை, இப்போதைக்கு வெளியிட வேண்டாம் என்று மட்டும் மருத்துவரிடம் கேட்டுக் கொண்டு, அங்கிருந்து கிளம்பினான் குணசேகரன்.

சிதம்பரத்தைக் கூப்பிட்டு, எதையும் சொல்ல வேண்டாம் என்று, அவரையும் எச்சரிக்க நினைத்தவன், உடனே அந்த எண்ணத்தை விடுத்தான்.

உடனே அவருக்கு வேறு மாதிரி நம்பிக்கை வரும்! அனாவசிய நம்பிக்கை! அத்தோடு, தன் சொந்த மகளுக்காக, அவரும்தான் முடிந்த அளவு இந்தக் குடும்பத்தை விட்டு ஒதுங்கியே இருக்கிறாரோ! நல்ல விஷயம் என்றாலாவது, அவசரப்பட்டு, திலோத்தமாவிடம் சொல்லக் கூடும். இத்தனை நாள் எங்கிருக்கிறான் என்று தெரியாதிருந்த உன் கணவன், உன்னை ஒரேயடியாகத் தலை முழுக வந்திருக்கிறான் என்பதைச் சொல்ல நிச்சயமாக விரும்ப மாட்டார்.

எனவே அவரிடம் எதைச் சொல்லவும் தேவையில்லை!

யோசித்து முடிவு செய்தவன், அதற்கு மேல், மதுரையில் தங்கியிராமல், சென்னைக்குக் கிளம்பி விட்டான்.

திட்டமிட்டதை விடச் சீக்கிரமாகவே சென்னைக்குச் சென்றுவிட்ட போதும், யாரிடமும், எதையும் பகிர்ந்து கொள்ள அவனுக்கு மனமில்லை!

மதுரைச் செய்திக்காகக் குறைந்த பட்சமாக, அண்ணனும் தங்கையும் ஆவலாகக் காத்திருப்பார்கள் என்பது, குணசேகரன் அறிந்ததே.



என்றாலும் அவர்களிடம் என்ன செய்தியைச் சொல்லுவது?

நடந்ததைச் சொன்னால் புரியுமா என்பதே சந்தேகம்.

அன்றுபோலத் தவறாக எதையும் சாதனா சொல்ல மாட்டாள் என்று அவனுக்கு நம்பிக்கைதான். ஆனாலும் அதைப் பரீட்சை செய்து பார்க்க அவனுக்கு விருப்பம் இருக்கவில்லை!

மனம் தெளிவதற்காக, மலைக்குப் போவது என்பார்கள். குணசேகரன் மதுரைக்குப் போய் வந்தான்.

ஆனால், வருத்தத்தை ஒதுக்கி, சில ஆண்டுகளாகத் தெளிந்திருந்த மனம், இப்போது கலங்கிய குட்டையாகிப் போயிற்று!

அவனுக்குத் தேவைதானா?

டீ.வி.யில் ஏதோ ஓட, அவனது மனம் மதுரையில் நின்று சண்டித்தனம் செய்து கொண்டிருந்தபோது, அழைப்பு மணி ஓசை கேட்டது.

சென்று பார்த்தால், சாதனாவும் முகுந்தனும் அங்கே நின்றிருந்தார்கள்!

## 7



அவனது விவாகரத்து விஷயமாக இதுவரை, குணசேகரன் ஒரு சின்ன அடிகூட எடுத்து வைக்கவில்லை.

அதற்கான வாய்ப்பே அவனுக்குக் கிடைக்கவில்லை என்றால், யாருக்குப் புரியும்?

முக்கியமாக, சாதனா வீட்டாருக்குப் புரிவது மிகவும் கடினம்.

தொழிலில், அவன் ஒரே நோக்காக, அதே சமயம் மற்றவர்களை மிஞ்சிய வேகத்தோடும் செயல்பட்டு, வெற்றி பெற்றிருப்பது, மற்றவர்களைக் காட்டிலும் சாதனாவுக்கும் முகுந்தனுக்கும் நன்றாகத் தெரியும்.

இருமுறை சென்றும் ஒன்றும் நடக்காமல், எதையும் தொடங்காமல், அவன் திரும்பி வந்தான் என்றால், அதை அவர்களிடம் சொல்ல, அவனுக்கே ஒரு மாதிரிதான் இருந்தது!

கேட்டால் உண்மையைச் சொல்லலாம். ஆனால் அதற்கு நாளை வரை அவகாசம் இருக்கிறது என்று எண்ணிக் கொண்டிருந்தவன், அவர்களே இவனை நாடி, அப்போதே வந்து சேரவும் சற்றுத் திகைத்துப் போனான்.

அவன் முன்னதாகத் திரும்பி வந்து விட்டது, இவர்களுக்கு எப்படித் தெரியும்?

கைகளில் உணவுப் பாக்கெட் வேறு!

ஒதுங்கி வழி விட்டவனின் பார்வையைக் கவனித்து ''அண்ணனும் நானும் வெளியே போயிருந்தோம். உணவை வாங்கிக் கொண்டு, வீட்டிலே போய்ச் சாப்பிடலாம் என்று போகும்போது பார்த்தால், உங்கள் வீட்டில் விளக்கு வெளிச்சம் தெரிந்தது..'' என்று விளக்கம் கூறியவாறு சற்றுத் தள்ளி இருந்த உணவு மேஜை மேல், வாங்கி வந்தவற்றைப் பரப்பலானாள் சாதனா.

இரண்டு பேருக்கு மிக அதிகம்!



ஆனால், அதற்கும் விளக்கம் இருந்தது. வந்தது.

''அப்பாவுக்கும் சேர்த்து வாங்கினோம். ஆனால், அவர் மாத்திரை போடுவதற்காகச் சாப்பிட்டு விட்டாராம். நாம் மூவருமாகச் சாப்பிடலாம். நீங்களும் ஒன்றும் சாப்பிட்டு... நீங்கள் இன்னமும் சாப்பிடவில்லை தானே, சா...ர்?''

குணசேகரனின் மனம் அமைதியற்று அலை பாய்ந்து கொண்டிருந்த நேரம். இவர்கள் வந்தது, ஒரு வகையில் ஒரு நிம்மதியான மாற்றமாகவே இருந்தது! இப்போது உணவுக்காக வெளியே போக வேண்டியதும் இல்லை!

முகுந்தன் அவ்வப்போது இப்படி வருவதுதான்.

முதல் தடவையாக வந்தபோதும், அண்ணன் மூலமாக அறிந்ததாலோ, என்னவோ, இடம் பழகியது போலவே, சாதனா எல்லாம் எடுத்து வைத்தாள்.

மூவருமாக பேசியபடியே உணவருந்தினர்.

கலகலவென்ற பேச்சும், பிடித்தமான உணவுமாக, சற்று முன் வரை இருந்த இறுக்கம் மெல்ல அகலுவதைக் குணசேகரன் உணர்ந்தான்.

இதுதான் வாழ்க்கை! இரவுக்காக மட்டுமல்ல.

இப்படியே இருந்து முடிப்பதை விட்டுவிட்டு, மதுரைக்குப் போய் மன உளைச்சலை இழுத்துக் கொண்டானே!

ஆனால், அந்த நேரத்தில் திலோத்தமாவால் சமாளிக்கவே முடிந்திராதே! அந்த வகையில் போனதே நல்லதாயிற்று...

பேச்சு நின்று, அண்ணனும் தங்கையும் அவனைப் பார்ப்பதை உணர்ந்தவன் சட்டென்று சமாளித்தான். ''சின்ன வயது பற்றிச் சொல்லியிருக்கிறேன் இல்லையா,

முகுந்தன்? பிறர் தயவில் நடத்தப்பட்ட 'இல்ல'த்து வாசம். பெரும்பாலும் சாம்பாரில் கிடக்கும். காய்த் துண்டுகள்தான் தொட்டுக் கொள்வதற்கு. அபூர்வமாக யாராவது பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளைகளுக்குப் பிறந்த நாள், விசேஷங்கள் என்றால், இதுபோல நல்ல வகை உணவு கிடைக்கும். அடுத்த முறை கிடைக்கும் வரை, அதைப் பற்றியே பேசுவோம்! இப்படி நல்ல சாப்பாடு தினமும் உண்ணும்படியான நிலைக்கு உயர வேண்டும் என்று சொல்லியே, நாங்கள் நாலைந்துபேர், விழுந்து விழுந்து படிப்போம்!'' என்று அவன் பழைய கதை சொல்ல, மற்றவர்களின் கவனமும் அதில் பாய்ந்தது.

ஆனால், ''ஏங்கியிருப்பீர்களே, சா...ர்!'' என்றாள் சாதனா வருத்தத்துடன்.

அவளது விழிகளில் நீர் எட்டிப் பார்க்கவும், குண சேகரன் மறுப்பாகத் தலையசைத்தான். ''இது ஆக்கப் பூர்வமான ஏக்கம், சாதனா. அன்று அந்த ஏக்கம் ஏற்படா மல் இருந்திருந்தால், இந்த அளவு முயன்று நான் படித்தே இருக்க மாட்டேனே! அதனால், இதில் வருத்தப்பட ஒன்றும் இல்லை!'' என்றான் தொடர்ந்து.

''குணசேகர் என்ன சொல்கிறார் தெரிகிறதா? நீ வருத்தப்படக் கூடாதாம்! சிரித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்கிறார்!'' என்றான் முகுந்தன்.

பல் வரிசை கீற்றாகத் தெரிய, சாதனாவின் முகம் அழ காக மலர்ந்தது!

ஓரக் கண்ணால் குணசேகரனைப் பார்த்துவிட்டு, அவள் லேசாகத் தலை குனிய, சற்று நேரம் பேச்சு நின்று போயிற்று.



இதில், அவனுக்கு ஏதேனும் குறிப்பு இருக்கிறதோ? இருக்கிறது!

ஆனால், எந்தவிதமான உரிமையும் அற்ற அன்றைய நிலையில், இது போலக் குறிப்புகளை அவன் கண்டு கொள்வதே சரியில்லையே!

''சாதனா மட்டுமல்ல, முகுந்தன், யாருமே, எதற்காக வுமே வருந்துவது எனக்குப் பிடிக்காது! உலகத்தில் நாம் பிறந்திருப்பது, நிம்மதியும் மகிழ்ச்சியுமாக வாழ்வதற் குத்தான். என்ன ஒன்று, நம் மகிழ்ச்சி, அடுத்தவரைத் துன்புறுத்தாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்! அவ் வளவுதான்!'' என்று பொதுப்படையாகப் பேசி முடித்தான் குணசேகரன்.

கலகலவென்று, கிட்டத்தட்டக் கிளம்பும் வரையுமே வேறு பேச்சு நிகழவில்லை!

சாதனாதான் முதலில் எழுந்தாள்!

அவனது முகத்தைப் பார்த்தபடி ''சா...ர் அவ்வளவு தூரம் கார் ஓட்டிக் களைத்துப் போயிருப்பார். நாம் வேறு வந்து, ஓய்வெடுக்க விடாமல் ரொம்பவும் கஷ்டப்படுத்தி விட்டோம்...'' என்று இழுத்தாள்.

இலகுவாகப் புருவம் உயர்த்தி ''கஷ்டமா? இவ்வளவு நேரம், நீயும் முகுந்தனும் சிரித்தது எல்லாம் கஷ்டப் பட்டுத்தானா? என்ன முகுந்தன். உங்களுக்குக் கஷ்ட மாகவா இருந்தது?'' என்று, தன் பக்கம் பேச, நண்பனை அழைத்தான் குணசேகரன்.

''ஐயையோ, உங்கள் சண்டையில் என்னை இழுக் காதீர்களப்பா. அப்புறம் எம்டியும், செயலாளரும் சேர்ந்து கொண்டு, என்னைக் காலை வாரி விடுவீர்கள்! வேண்

டாம் சாமி!'' என்று அவன் சொன்ன பாவனையில் மூவருமே சேர்ந்து நகைத்தனர்.

வழியனுப்புவதற்காகக் கூட நடந்தவனுக்கு எண்ணம் எங்கோ ஓடியது.

வீடு என்றிருந்தால், இப்படித்தான் சிரிப்பும் கேலியுமாக இருக்க வேண்டும். அதை விட்டு, விருந்தும், விழாவும் ஆட்டமும் சீட்டாட்டமும்... அவைகளுக்காகவே வாழ்வது போல! ஒருவரோடு ஒருவர் கலந்து பேசக்கூட வழியில்லாது, தப்புத்தப்பான அபிப்பிராயங்களை வளர்த்து...

''அப்புறம்... இந்த முறை, அங்கே என்ன நடந்தது?

நல்ல இசையில், ஏதோ அபசுரம் கலந்த உணர்வு குணசேகரனுக்கு. காட்டிக் கொள்ளாமல், ''இன்னும் அவர்கள் மருத்துவமனையில்தான் இருக்கிறார்கள்'' என்றான் சுருக்கமாக.

கைப்பையின் பிடியில் விரல்கள் இறுகியபோதும், ''அவர்கள் பிழைத்து விடுவார்கள்தானே? பாவம். இன்னமும் ஐசியுவிலேயா, இருக்கிறார்கள்?'' என்று கரிசனம் காட்டி விசாரித்தாள் சாதனா.

உயிர்ப்பயம் நீங்கிவிட்டால், விஷயத்தைச் சொல்ல வேண்டியதுதானே என்கிறாளா?

''இல்லை. அறைக்கு மாற்றி விட்டார்கள். ஆ... ஆனால், அதிர்ச்சியாக எதையும் சொல்ல முடியாத நிலை. பார்க்கலாம்!'' என்றான் குணசேகரன்.

''இயன்ற வரை பாராமல், நீங்கள் விட மாட்டீர்கள் என்பது எனக்கு நிச்சயம் குணசேகர்! வரட்டுமா?'' என்று முகுந்தன் சொல்ல அண்ணனும் தங்கையும் கிளம்பிப் போனார்கள். 'லிப்ட்' கதவு மூடும் வரை நின்று விட்டு 'லிப்ட்' செல்லும் சிறு ஒலியைக் கேட்டவாறு, தன் ப்ளாட்டினுள் சென்று கதவைச் சாத்தினான் குணசேகரன்.



கடைசியாக அந்தப் பேச்சை எடுக்காமல் இருந்திருக்கலாம். நட்பு நிலையில் பேச்சு எவ்வளவு சுகமாகப் போயிற்று?

ஒருவேளை, சாதனாவை மணந்தால், இந்த மாதிரி அடிக்கடி...

கடைசிப் பேச்சினால், அவர்களது மகிழ்ச்சியும் பாதிக்கப்பட்டிருக்குமோ?

யோசித்தவாறே, சட்டென ஜன்னல் அருகே சென்று எட்டிப் பார்த்தான்.

அவனது ப்ளாட்டில் இந்தப் பக்கம் இருந்து பார்த்தால், ஒருபுறம் அழகாக நீலக்கடலும், தெரியும், மறுபுறமாக, வாஸ்துப்படி ஓர் ஓரமாக வைக்கப்பட்டிருக்கும் ஆறடி உயரமான பெரிய கேட்டும் தெரியும்.

வெளியார் வாகனங்களுக்கு உள்ளே நிறுத்த அங்கே அனுமதி கிடையாது எனவே, வருகிறவர்கள் சுற்று மதில் கேட் வரை நடந்துதான் செல்ல வேண்டும்.

செல்லும்போது, 'பாடி லாங்வேஜ்' காட்டிக் கொடுக்கும் அல்லவா?

அண்ணனும் தங்கையும் நடந்து போகும் விதத்திலேயே, இருவரும் எரிச்சலுற்று இருப்பது தெரிந்தது! சாதனாவிடம் சற்று அதிக எரிச்சல் காணப்பட்டது!

அவனுக்காக என்று, இதற்காக சந்தோஷப்பட வேண்டுமா? அவனுக்கு யோசனையாக இருந்தது.

பார்த்துக் கொண்டிருக்கும்போதே, கேட் அருகே இருக்கும் காவலாள் அவர்களை நெருங்கி ஏதோ சொல்ல, முகுந்தன் அவனிடம் பேசியவாறு, பைக்குள் கைவிட்டு... பணமாகத்தான் இருக்க வேண்டும் எடுத்துக் கொடுத் தான்!

காவலாளி பணிவுடன் நெற்றியைத் தொட்டு விலகிப் போக, இருவரும் கேட்டுக்கு வெளியே சென்று குண சேகரனின் பார்வைக்கு மறைந்தார்கள்.

ஆக, இவன் முன்னதாக திரும்பி வந்த விவரம், அண்ணன், தங்கை அறிந்தது இந்த வழியாகத்தான்...!

அவன் இடத்துக் காவலாளையே உளவாளியாக்கி, செயல்பட்டிருக்கிறார்கள்!

ஆனால், ஓர் உளவாளி இங்கே தேவை என்று ஏன் எண்ணினார்கள்?

தான் அறியாமல் தன்னை மற்றவர்கள் கண்காணிப்பது, அப்படி ஒன்றும் உவப்பூட்டும் செயல் அல்லவே!

அந்த வார இறுதியில் சில அலுவலக வேலைகளைப் பற்றிய குறிப்புகளை மட்டும் சாதனாவுக்கு அனுப்பி விட்டுச் சற்று முன்னதாகவே, அலுவலகத்திலிருந்து கிளம்பிப் போனான், குணசேகரன்.

எங்கே போகிறான், என்ன, ஏது என்ற அவனைப் பற்றிய எந்த விவரமும் இல்லாமலே! அது பற்றிக் கேட்பதற்கு வாய்ப்பு தராமலே!

ஒன்றும் நடக்கவில்லை, ஒன்றும் நடக்கவில்லை என்று திரும்பத் திரும்ப சொல்லக் கூசியே இப்படிச் சென்றிருக்கிறான் என்று அண்ணனும் தங்கையும் முடிவு செய்தனர்.



ஆனால், இந்தத் தருணங்களை அந்தப் பெண் எப்படியெல்லாம் பயன்படுத்திக் கொள்கிறாளோ என்று, சாதனாவுக்குச் சற்றுப் பதைப்பாகவே இருந்தது.

ஏற்கனவே அவனை அறிந்தவள் வேறு!

அவளுமே மதுரைக்குப் போய், அந்த முந்தியவளைப் பிடித்து ஓர் உலுக்கு உலுக்கி, 'குணசேகரனை விட்டுத் தொலையேன்' என்று நேராகவே கேட்டால் நல்லதோ என்றுகூட, அவளுக்குத் தோன்றத் தொடங்கியது.

குணசேகரன் தப்பாக எண்ணுவானோ என்ற ஒரே காரணம் மட்டுமே அவளைத் தயங்க வைத்தது எனலாம்.

இந்த முறை, குணசேகரன், நேரே திலோத்தமாவின் வீட்டுக்கே சென்றான்.

அவன் சென்ற நேரமும் மிகச் சரியானதாகவே இருந்தது!

ஏனெனில், அந்த நேரத்தில் அவள் தன் தமையனின் பிடியில் அகப்பட்டு படாத பாடு பட்டுக் கொண்டிருந் தாள்.

அந்த வீட்டில் மிச்சம் மீதி இருந்த ஒரு சில வயதான வேலையாட்களும், அவர்கள் பார்த்து பிறந்து வளர்ந்த சின்னம்மா, சின்னய்யா இருவரில் யார் பக்கமாகச் செயல் படுவது என்று தெரியாமல், தெரிந்தாலும் அதற்குரிய தைரியம் இல்லாமல், பயந்து நடுங்கிக் கொண்டு ஒதுங்கி நின்றனர்.

இம்முறையும், காரைச் சற்றுத் தள்ளி நிறுத்திவிட்டு, நடந்துதான் குணசேகரன் வந்தான்.

சுற்று மதில் கேட் தாண்டி உள்ளே வரும்போதே, ஏதோ உரத்த சத்தம்... கூச்சல், கதறல் மாதிரிக் கேட்கவும்

நீளக் கால்களால் விரைந்தோடிச் சென்று, வீட்டு முன் இருந்த பல படிகளை இரண்டிரண்டாகத் தாண்டி, வராந்தாவை அடைந்தான்.

திறந்திருந்த ஹால் கதவைத் தாண்டி உள்ளே சென்றால், ''விடு, விடு அண்ணா. எல்லோரும் பார்க்க என்ன அசிங்கம் இது! விடு!'' என்று அவளுடைய அண்ணன் செல்வத்தை ஒரு கையால் தள்ள முயன்று கிட்டத்தட்ட தோற்றுக் கொண்டிருந்தாள் திலோத்தமா.

அவளது மற்றொரு கை. அவளது கழுத்தில் இருந்து செல்வம் பிடுங்க முயன்ற, அவளது தாலிச் சங்கிலியை இறுகப் பற்றியிருந்தது.

இரு கைகளாலும் பிடித்துத் தள்ளினாலுமே, வளர்ந்த ஆண் மகனான செல்வத்தைத் தள்ளி விடுவது, திலோத்த மாவுக்குக் கடினம்! அதிலும், களைத்துச் சோர்ந்து, இப் போது ஓரளவு மெலிந்தும் இருந்த அவள், ஒற்றைக் கையால், அந்த ராட்சசனை என்ன செய்ய முடியும்?

ஆனால், அவளுக்குச் சாதகமாக இருந்த ஒரே ஒரு விஷயம், செல்வம். அந்த நேரத்திலும் குடித்து விட்டு நிதானமற்று இருந்தது.

ஒரு கையால் அவனும் திலோத்தமாவின் சங்கிலியைப் பற்றியிருந்தபோதும், தான் நேராக நிற்பதற்கே தடுமாறிக் கொண்டிருந்ததால், முழுப்பலம் காட்டி, அதைப் பிடுங்க முடியவில்லை! ''கொடுடீ, எனக்கு பணம் வேணும். இதையாவது கொடு... இல்லை என்றால், கொன்று விடு வே...ன்'' என்று குழறிக் குழறிப் பேசியவாறு, சங்கிலியை இழுத்துக் கொண்டிருந்தான், அவன்.

''விட்டு விடுங்கய்யா, விட்டு விடுங்கய்யா! குழந் தைய்யா...'' என்று ஆளாளுக்குப் பதறிக் கொண்டிருந் தனரே தவிர, பதறி அருகில் வந்து, செல்வத்தைப் பிடித்து விலக்க யாருக்கும் தைரியமோ, முக்கியமாக பலமோ இருக்கவில்லை!



பார்த்ததும் விஷயம் புரிந்துவிட, ஓர் எட்டில் அருகில் வந்த குணசேகரன், ஒரு கணம் யோசித்தான்.

செல்வத்தைப் பிடித்து இழுத்து, திலோவிடமிருந்து விலக்க முயற்சித்தான் என்றால், அவன் பிடியில் இருந்த சங்கிலி, திலோத்தமாவின் கழுத்தில் இன்னமும் அதிக மாக அழுந்தி வலிக்கும். காயம்கூட ஏற்படலாம்!

அவனாகச் சங்கிலியை விட வேண்டுமானால், செல்வத் தின் கவனத்தை, வேறு பக்கம் திருப்ப வேண்டும்.

பின்புறமாகவே, அணுகியவன், செல்வத்தின் பின்னங் கழுத்தில் ஓங்கி ஓர் அறை வைத்தான்.

வலியால், தங்கையின் சங்கிலியை விட்டு ''ஆ!'' என்று கழுத்தைப் பற்றியவாறே திரும்ப முயன்ற செல் வம், குடியில் நிதானம் இழந்திருந்ததால், கால் தடுமாறி கீழே விழுந்தான்.

பாதி உட்கார்ந்த நிலையில் விழுந்திருந்த அவனால் எழுவதற்கு முயற்சி செய்யக்கூட முடியவில்லை.

எழுவதற்காக ஊன்றிய கை வலுவற்று மடங்கி மீண் டும் கீழே தள்ள ''சொந்த அண்ணன்! குடிக்கப் பணம் கேட்டால், என்னை ஆள் வைத்து அடிக்கிறாயா?'' என்று குழறிப் பேசிக் குற்றம் சாட்டினான்.

தங்கை கணவன் என்கிற அடையாளம் கூடத் தெரி யாத நிலை!

''மாப்பிள்ளை அய்யா!'' என்று வியப்பும், பணிவும் மகிழ்ச்சியும் காட்டிய பணியாட்கள், ''அய்யா பாருங்கய்யா! இந்த வீட்டிலே, என்ன அக்கிரமம் எல்லாம் நடக்குதுன்னு பாருங்கய்யா'' என்று அவனிடம் முறையிட்டனர்.

தமையன் திடுமென கீழே விழவும், காரணத்தை நிமிர்ந்து பார்த்து ரத்தமென முகம் சிவக்க மறுபுறம் திரும்பி நின்றாள் திலோத்தமா.

மனைவியின் விறைத்திருந்த முதுகை ஒரு தரம் நோக்கிவிட்டு, ''எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் செல்வத்தை எழுப்பிப் போய் அவன் அறையில், படுக்க வையுங்கள். ஈரத்துணி கொண்டு, முகத்தைத் துடையுங்கள். கொஞ்சம் கறுப்புக் காபி போட்டுக் குடிக்கக் கொடுங்கள். போங்கள் போய் ஆளுக்கொன்றாகச் செய்யுங்கள்'' என்று வேலையாட்கள் அனைவரையும் அங்கிருந்து அகற்றினான் குணசேகரன்.

ஒரு காலத்தில் இதே வேலையாட்களை, திலோத்தமா ஓட ஓட விரட்டுவாள். இப்போது அவர்கள் முன்னிலையில் அண்ணன் நடந்த விதத்தால், அவளுக்கு அவமானமாக இருக்கும் என்று எண்ணிச் செயல்பட்டான் அவன்.

அத்தோடு செல்வத்தின் குடி பற்றி, டாக்டர் சிதம்பரம் சொல்லியிருந்த போதும், விஷயம் இவ்வளவு மோசமாக இருக்கும் என்று அவன் எதிர்பார்த்திருக்கவில்லை!

இந்தக் காலை நேரத்திலேயே, ஆள் அடையாளம் தெரியாத அளவு குடி!

அவனது ஐந்தாண்டுப் பிரிவுக்குப் பிறகும், தாலிக்குரிய மரியாதை அங்கே யாருக்கும் இருக்கும் என்று குணசேகரன் நினைக்கவில்லை!



ஆனால், தங்கையின் கழுத்தில் கிடப்பதை, வேலையாட்கள் முன்னிலையில் பலவந்தமாகப் பிடுங்க முயற்சித்தான் என்றால், செல்வம் எவ்வளவு கேவலத்துக்கு இறங்கி விட்டான்! ஒரு படித்த இளைஞன் குடிக்கக் காசு வேண்டும் என்று, தங்கையின் கழுத்துச் சங்கிலியையே பிடுங்க முயற்சித்தது, குணசேகரனுக்கு, இன்னமும் பெரும் அதிர்ச்சியாகவே இருந்தது.

மனைவியின் முகச்சிவப்பு நினைவு வர ''என்ன இப்படி...'' என்று இரங்கிய குரலில், அவளுக்கு ஆறுதலாகப் பேச அவன் முற்பட, அவனைத் திரும்பிப் பாராமலே, ''போய் விடுங்கள்'' என்றாள், தெளிவற்ற குரலில் திலோத்தமா.

''திலோ...'' என்று அவன் மீண்டும் தொடங்கியதை, அவள் காது கொடுத்து கேட்பதாகவே இல்லை!

மறுபடியும் ''ப்ளீஸ், போய்விடுங்கள்!'' என்று அதையே திருப்பிச் சொன்னாள்.

அவன் ஒரு கணம் திகைக்கையிலேயே, தொடர்ந்து, ''இங்கே ஏன் வந்தீர்கள்? நான்தான் உங்கள் பணத்தை எப்படியாவது திருப்பித் தந்து விடுவதாகச் சொன்னேனே! பிறகும் ஏன் வந்தீர்கள்?'' என்று அவள் கேட்ட பிறகே, குணசேகரனுக்கு விஷயம் புரிந்தது!

சட்டென மூண்ட கோபத்தோடு ''நான் பணத்தைக் கேட்டேனா?'' என்றான் அவன். ''ஏதாவது உதவி தேவையா என்று கேட்கத்தான்...'' என்று அவன் மேலே சொல்லிக் கொண்டிருக்கும்போதே, ஒரு பதற்றத்துடன் அவன் பேச்சை இடைமறித்து, ''எதுவும் வேண்டாம். நீங்கள் இங்கிருந்து உடனே போய்விடுங்கள்! அது போதும்... எனக்கு!'' என்று வேகமாகச் சொன்னாள்!

இன்னும் அவள், அவனைத திரும்பிக்கூட பார்க்க வில்லை! பார்ப்பதாகவும் இல்லை என்று புரிந்தது!

சினம் பெருக "ஏன்? அப்படி உன்னை என்ன செய்து விடுவேன் என்று உனக்கு பயம?" என்று ஆத்திரத்துடன் கேட்டான் அவன்.

அவன் சொல்லி முடிக்கும் முன்னே "ஐந்து ஆண்டு களுக்கு முன்பே, எதுவும் வேண்டாம் என்று போனவர் தானே? உங்களிடம் எனக்கென்ன பயம்?" என்று சுள் ளென்று அவளது பதிலும் சீறிக் கொண்டு உடனே வந்து விட்டது.

ஆனால், உடனேயே குரல் தணிந்துவிட, "ப்ளீஸ். எனக்கு வேலையிருக்கிறது! தயவு பண்ணி, இங்கிருந்து உடனே போய்விடுங்கள்!" என்றவளின் குரலில் மன்றாடலோடு, சிறு நடுக்கமும் தெரிய, குணசேகரன் திகைத்தான்.

தூரத்தில் சில இளங்குரல்களின் சளசளப்பு. வெகு லேசாகக் கேட்டது!

திலோவுக்குப் பள்ளி தொடங்குகிற நேரம் ஆகி விட்டது! வயிற்றுப் பிழைப்பு அதிலே நடக்கும்போது, அதை அலட்சியம் செய்வது, தகாதுதான்! ஆனாலும், இப்படிப் பதற வேண்டுமா?

கூட இரு பிள்ளைகளை அழைத்துக் கொண்டு, "எல்லாம் வீட்டுக்குள்ளதான் இருப்பாங்க" என்று, ஒரு வாண்டு வீட்டுப் படிகளில் ஏறிக் கொண்டிருந்தது, சற்று வாயிலை ஒட்டி, அவன் இருந்த இடத்திலிருந்து தெரிந்தது!



அன்று அவளது மடியில் சொகுசாகச் சாய்ந்து இருந்த சிறுவன்!

சும்மாவே பதறுகிறவள், இந்த மாணவ மணிகளைக் கண்டால், தாமதமாகி விட்டதற்காக ஒரேயடியாகக் கலங்கிப் போகக் கூடும்.

அது ஒரு கஷ்டம் அவனால் நேர்வானேன்? ஏற்கனவே அவள் அனுபவிப்பதே அதிகப்படி.

"உன்னிஷ்டம். கிளம்பி விட்டேன். ஆனால், ஏதேனும் உதவி வேண்டுமானால்..." ஏறுமுன் மீண்டும் குறுக் கிட்டு "உதவி தேவைப்படாது" என்றாள் அவள் அவசர மாக.

எரிச்சலை அடக்கிக் கொண்டு, "சரி, சரி! நீ கழுத்தைப் பிடித்துத் தள்ளுமுன், நானே கிளம்பி விடுகிறேன். உனக்கு எதற்கு வீண் கஷ்டம்? ஆனால், நான் சொன்னது நினைவு மட்டும் இருக்கட்டும். வருகிறேன்!" என் றுரைத்து அங்கிருந்து வெளியேறினான் குணசேகரன்.

குஞ்சுக் கால்களால் படியேறி தோழர்களோடு மேல் படிக்கு வந்துவிட்ட அந்தச் சிறுவன், அவனைப் பார்த்த தும் ஒரு வெட்கச் சிரிப்பு சிரித்துவிட்டு நகர, தன்னை மீறிக் கையை நீட்டிக் குழந்தையின் பூங்கன்னத்தை ஆசையாக ஒரு தரம் வருடி விட்டுப் படியிறங்கினான் குணசேகரன்!

"பாரு! நான்தான் சொன்னேனே இங்கே ஹால்லதான் இருக்கிறாங்க..." என்று அவனும் "ஆமா, ஆமா!" என்று மற்ற சிறார்களும் பேசிய மழலை இனிய சங்கீதமாகக் காதுகளில் பாய்வதை, ரசித்து, அனுபவித்தபடியே சென் றான் அவன்.



# 8

திலோத்தமா இன்றிருக்கும் நிலைமைக்கு, அவளைப் பணத்தால் மட்டுமின்றி, மனதாலும் வாழ வைப்பது, இந்தப் பள்ளிதான் போலும்.

இந்தச் சின்னப் பிள்ளைகளின் சிரிப்பும் மழலையும் இல்லாவிட்டால், அவள் என்ன ஆகியிருப்பாளோ, பாவம்! அவளுடைய அம்மாவும், அண்ணனுமே அவளை உண்டு இல்லை என்று ஆக்கி விட்டிருப்பார்களே!

அதிலும் செல்வம்!

ஐந்து ஆண்டுப் பிரிவுதான். இருந்தாலும் தங்கையுடைய கணவரை அடையாளம் கூடவா, தெரியாது போகும்?அந்த அளவுக்குக் குடி மயக்கம்.

'கொன்றுவிடுவேன்' என்று அவன் சொன்னதை எண்ணி, ஒரு கணம் குணசேகரனுக்குப் பதட்டமாகக் கூட இருந்தது!

ஆனால், அப்படி ஒன்றும், இந்தா, வந்து கொல்லு என்று திலோ கழுத்தைக் காட்டிக் கொண்டு நிற்க மாட்டாள் என்ற நம்பிக்கையும் இப்போது ஏற்பட்டிருந்தது. இன்றுகூட, சங்கிலியையும் காப்பாற்ற எண்ணாவிட்டால், செல்வத்தை அவளே பிடித்துத் தள்ளியிருப்பாள்!

சொல்லப்போனால், எவ்வளவு கெட்டிக்காரத்தனமாக இந்தப் பள்ளியைத் தொடங்கி நடத்துகிறாள்!



கண்ணபிரானின் மரணத்துக்குப் பிறகு, அவளுடைய மனைவியும் மகனும் சென்ற அழிவுப் பாதையைப் பார்க்கும்போது, திலோவும் அதே போன்ற வாழ்க்கையையே நடத்தியிருக்கலாம்! அப்படி நடத்தியிருந்தால், அவளைப் பெரிதாகக் குற்றம் கூறக் கூட முடியாது!

ஆனால், அவன் மனைவி அப்படிச் சுலப வழி தேடி அழியவில்லை! மாறாக, ஆக்கப்பூர்வமாகச் செயல்பட்டிருக்கிறாள்!

அன்றைய நிலையை எண்ணி இடிந்து போகாமல், என்ன செய்வது என்று யோசித்திருக்கிறாள்.

அண்ணனுக்கும் தாய்க்கும் இடையில், தனக்கென்று அதிகப் பணம் எடுக்க முடியாமல், செலவு குறைவான வழியை யோசித்து, இந்தப்பள்ளி நடத்தத் திட்டமிட்டு, அதற்கான பயிற்சி எடுத்து, பள்ளிக்குப் பிள்ளைகளைச் சேர்த்து.. வாவ்!

முட்டையில் இருந்து வெளிவந்து, இருந்த இடத்தில் வெறுமனே இலைகளைத் தின்றுகொண்டே இருக்கும் புழு, வண்ணத்துப்பூச்சியாக வானில் சிறகடிப்பது போன்ற மாற்றம்!

சிறுத்தை தன் புள்ளிகளை மாற்றிக் கொள்வதில்லை என்று நினைத்தானே! இது வண்ணத்துப்பூச்சியின் மாற்றமாக அல்லவா இருக்கிறது?

அவ்வளவு செய்த இந்த வண்ணத்துப்பூச்சி சிறகொடிந்து போகாமல் காப்பாற்ற வேண்டுமே!

காப்பாற்றியே தீர வேண்டும் என்று, அதற்கான வழியைத் தேடியபோது, அவனுள்ளும் ஒரு திட்டம் பிறந்தது.

ஆனால் திலோத்தமா போலத் தனித்துச் செய்ய இயலாமல், அவனது திட்டம் நிறைவேறப் பலரது உதவி தேவைப்பட்டது!

முதல் ஆளாக, முக்கியமான ஆளாகவும், டாக்டர் சிதம்பரத்தைத் தொடர்பு கொண்டான் குணசேகரன்.

அவர் சம்மதிக்கவும், அடுத்து, அவனுடைய மாமி யாரை.

இரு சந்திப்புகளையும் முடித்துக் கொண்டு, மதுரையில் சில பல ஏற்பாடுகளைச் செய்துவிட்டுக் குணசேகரன் சென்னையை அடைந்தபோது, ரொம்பவே தாமதம் ஆகியிருந்தது.

தொடர்ந்த பல நாட்களும் கூட, அவன் அலுவலகத்தில் கழித்த பொழுது மிகவும் குறைவாகவே இருந்தது!

அதற்காக வேலையை அலட்சியம் செய்தான் என்று சொல்ல முடியாது. ஆனால் அன்றாடம் செய்ய வேண்டிய வேலைகள் தொடர்பானவை தவிர வேறு எதையும், சாதனாவால், குணசேகரனுடன் பேசவே முடியாது போயிற்று.

அவளும் விட்டுவிடாமல், தொழில் பேச்சைச் சாக்கிட்டு அண்ணன் முகுந்தனை வரவழைத்துப் பார்த்தாள்.

புதிய நிறுவனத்துடன் ஆர்டர்கள் கைக்கு வந்துவிட்டதால், தொழில் தொடர்பாக அவனிடம் பேச வேண்டியதே, குணசேகரனுக்கு நிறைய இருந்தது.

தொழில் பேச்சு என்றால் முகுந்தனுக்கும் வருமானமே.

சாதனா வெளியே தவித்துக் கொண்டிருப்பதை மறந்து புதிதாக வடிவமைக்க வேண்டிய பொருட்களைப் பற்றி, இருவரும் பேசி முடித்தனர்.



அவன் செய்ய வேண்டிய வேலைகளைப் பற்றி மட்டும் அவனிடம் பேசிவிட்டு, ''இந்தப் புது நிறுவன வேலையை ஏற்றதில் இருந்து, எனக்கு வேலை மிகவும் அதிகம், முகுந்தன். தப்பாக எடுத்துக் கொள்ள மாட்டீர்கள் என்று நம்புகிறேன்'' என்று குணசேகரன் அடுத்த பைலை எடுக்கவும், முகுந்தன். வேறு வழியின்றியே என்றாலும் முகம் வாடாமலே வெளியேறினான்.

அவனுக்கும் பெரிய ஒப்பந்தம், அதன் மூலமாக அதிகப் பணம் என்று மகிழ்ச்சிதான்.

ஆனால், அவனுடைய தங்கைக்குத்தான் ஆத்திரம். ''அங்கே என்ன ஆயிற்று என்று ஒன்றுமே தெரியாமல் இருக்கிறோம். நம் நிலைமை என்ன என்றும் எதுவும் தெரியவில்லை. ஒரு வார்த்தை கூட கேளாமல், வந்து நின்று இளிக்கிறாயே!'' என்று முகுந்தனிடம் எரிந்து விழுந்தாள்.

புது வருமானம் பற்றிய மகிழ்ச்சியில் இருந்த அவனுக்கு, சாதனாவின் கோபம் முதலில் பெரிதாகப் படவில்லை. ''குணசேகரைப் பார்த்துப் படிக்க வேண்டும். சாது. இந்தப் புது வேலையில், அவர் வேறு நினைவே இல்லாமல் இருக்கிறார்! அந்த உழைப்புதான், அவரை இந்த நிலைக்கு உயர்த்தியிருக்கிறது! இந்த டிசைன்கள் எல்லாம் சனிக்கிழமை மாலைக்குள் வேண்டும் என்கிறார். அர்த்தம் புரிகிறதா? இந்த வேலை முடிப்பதற்காக, அவர் மதுரைக்கே போகவில்லை! அப்படி உழைக்கிறவரிடம் போய், அங்கே என்ன ஆயிற்று, சொல்லு என்று சட்டையைப் பிடித்தா கேட்க முடியும்?அன்றைக்கு வாட்ச்மேனிடம் விசாரித்து, அவர் வீட்டுக்குப் போய்ப் பார்த்ததே, சற்று அதிகப்படி என்பது என் அபிப்ராயம்!

இந்த புதிய வேலை ஒரு நிலைக்கு வரும்வரை பொறுத் திருப்போம்'' என்றான் அவன்.

''உனக்கு அதிக வருமானம் வரப்போகிறது என்றதும், என்னைக் கை கழுவிவிட்டாய்! விட்டால், என் திருமணம் செய்ய வேண்டும் என்பதையே மறந்துவிடுவாய்!'' என்று குற்றம் சாட்டினாள் தங்கை.

''ஏய்ய்... என்ன பேச்சுப் பேசுகிறாய்? இவள் சொல் வதைப் பாருங்கள், அப்பா!'' என்று தந்தையிடம் முறை யிட்டான் முகுந்தன்.

''உரிய காலத்தில் தங்கைக்கு மணம் செய்விப்பது, அண்ணனான உன் கடமைதானேப்பா?'' என்றார் தண்ட பாணி.

தந்தையும் தங்கையோடு சேர்ந்து கொள்ளவும் ''நானா பொறுப்பைக் கவனியாமல் விடுகிறவன்? இப்போது வேண்டுமானாலும் சொல்லுங்கள், என்னுடைய ஒரு சினேகிதன் தங்கையைக் கொடுத்த இடத்தில், ஒரு பையன். துபாயில் பெரிய வேலையில் இருக்கிறானாம். உன் தங்கைக்குப் பார்க்கிறாயா? என்று கேசவன் என் னிடம் கேட்டான். நான்தான், வேறு எண்ணம் இருக் கிறதே என்று, சரியாகப் பதில் சொல்லவில்லை. இப் போது அவனிடம் மேற்கொண்டு பேசட்டுமா?'' என்று முகுந்தன் கேட்டான்.

தந்தை மகளைப் பார்த்தார்.

''என்னப்பா, பெரிய வேலை?'' என்று தோளைக் குலுக்கினாள் சாதனா. ''இங்கே குணசேகரின் நிறுவன மதிப்பு, வருமானம் என்ன என்று தெரியுமா? அதற்கு கால் தூசி பெறாது, உன் துபாய் வேலைக்காரன் சம்பளம்!'' என்றாள் சற்று இளக்காரமாக.



''அப்போதும் நீயும் பணத்தைத்தானே பார்க்கிறாய்? என்னைச் சொன்னாயே!'' என்று முகுந்தன் மடக்கவும் அசடு வழிந்தாள் அவள்.

உடனே சமாளித்து, ''அப்படியானால் என்னை மடக்கு வதற்காக வந்ததுதான், துபாய் வேலையாக்கும்'' என்று உதட்டைப் பிதுக்கினாள் தங்கை!

''அதெல்லாம் இல்லை! இன்னைக்கு வேண்டு மானாலும், சொல்லு! நண்பனிடம் பேசச் சொல்லு கிறேன்'' என்றான் தமையன்.

ஒரு கணம் பேசாதிருந்துவிட்டு ''குணசேகரனின் வரவு செலவுக் கணக்கு எனக்குத் தெரியும். தோற்றம், என் மூலமாக, நாம் மூவருமே அறிந்தது! குணசேகரின் குண மும் சிறப்பானதே! அப்படியிருக்க அவரைக் கைநழுவ விடுவதற்கு, எனக்கு, மனமே வரவில்லையே!'' என்றாள் சாதனா.

''நீ சொல்வது எல்லாம் சரிதான். ஆனால், குணசேகருக்கு, நீ இரண்டாம் மனைவி! இந்தத் துபாய்ப் பையன் என்றால், முதலாவதாக இருப்பாயே!'' என்றான் அண்ணன்.

''என்னண்ணா, முதல்? வெளியே தெரியாமல் எத் தனையாவதோ? எம்டியைப் பொறுத்தவரையில் அவர் திருமணம் பற்றிச் சொன்னதே பெரிய விஷயம் அல் லவா? மறைத்திருந்தால், நமக்குத் தெரியவே வாய்ப் பில்லைதானே? பணம், குணம் எல்லாம் இருக்கும் இவரை விட, என்னால் முடியாது!'' என்றாள் சாதனா முடிவாக.

''காரம், மணம், குணம் நிறைந்த இந்த அசல் பட் டணம் பொடியை, உன்னால் விட முடியாதாக்கும்!

போகட்டும். மணக்கப் போகிறவள், நீ! அதனால் உன் விருப்பம்தான் முக்கியம்! ஆனால், அதேபோல, இது விஷயத்தில் குணசேகருடைய விருப்பமும் முக்கியம் தானே? அவருக்குப் பிடிக்காவிட்டால்..'' என்று இலகுவாகப் பேசிய முகுந்தன், தங்கையின் சீற்றத்தைக் கண்டு மிரண்டு, ''பி.. பிடிக்கும்ப்பா... யாருக்கேனும், உன்னைப் பிடிக்காமல் போகுமா? கட்டாயம் பிடித்து விடும்! ஆனால், ஒருவேளை அவருக்கு வேறு நாட்டம்.. அதுவும் அந்தப் பெண் மனைவி எனும்போது.. அந்தப் பழைய நினைவில் உன்னை அந்த மாதிரிப் பிடிக்காமல் போகலாம் இல்லையா?'' என்று ஒருவாறு உளறிக் கொட்டிக் கிளறி மூடி முடித்தான்.

ஆனால், ''நான் பிடிக்க வைப்பேன்'' என்றாள் அவள் ஆத்திரத்தோடு!

தொடர்ந்து அங்கே நிலவிய அமைதி, மற்ற இருவரும் அவ்வளவாக அவளோடு ஒத்துப்போகவில்லை என்று காட்டியது.

ஆனால் இருவருமே அவளிடம் மிகுந்த அன்பு உள்ளவர்கள். அதனால், ஒரேடியாக அவர்களிடம் முகத்தை முறித்துப் பேச மனமின்றி, ''எல்லாம் தானாக நடக்கும் என்று சும்மா உட்கார்ந்து இருந்தால், எதுவுமே கிடைக்காதுதான்! எதற்கும், நான் ஒரு முயற்சி செய்து பார்க்கப் போகிறேன். அது பலிக்காவிட்டால், பிறகு இதைப் பார்ப்போமே!'' என்றாள் சாதனா. சற்றுத் தணிந்த குரலில்.

சங்கடமான இன்னொரு மௌனத்தின் பின் ''குணசேகருக்கு ஒரு குடும்பம் இருக்கிறது. அதைச் சீர்ப்படுத்திக் கொண்டிருக்கிறார் என்றால், நாம் அதில் தலையிடுவது, நியாயம் இல்லை, சாதும்மா! கொஞ்சம்



யோசித்துப்பார்!'' என்று மெதுவாக எடுத்துச் சொன்னான் முகுந்தன்.

ஆனால், ''பெரிய குடும்பம்!'' என்று தலையைச் சிலுப்பினாள் தங்கை ''ஐந்து ஆண்டுகளாக அதை அடியோடு மறந்து இருந்தவர்தானே? அந்தப் பக்கமும் அப்படித்தான்! அவளுக்கும் இவர் நினைவே கிடையாது! தொல்லை விட்டது என்றுதான் இருவருமே இருந்திருக்கிறார்கள்! அதுவே தொடர்ந்து இருக்கும்! வாழ்நாள் முழுதுக்குமே! எல்லாம், உங்களால் வந்ததுப்பா! வில்லங்கம், விவாகரத்து, அது இது என்று சொல்லி குணசேகரனை, அந்த வேண்டாத மனைவியிடம் கொண்டு சேர்த்துவிட்டீர்களோ என்று எனக்கு சந்தேகமாக இருக்கிறது. அப்போது நகத்தால் கிள்ளி எறிந்திருக்கக் கூடியது! இப்போது கூரான கோடாலி தேவைப்படுமோ என்கிற அளவுக்குப் பெரிய மரமாக வளர்ந்து நிற்பது போல இருக்கிறது!'' என்றாள் எரிச்சலாக.

என்னவோ எல்லாம் அவர்களது பிழை போல, அவள் பேசியதும், இருவருக்குமே சற்று வருத்தம்தான்.

மதுரைக்கு குணசேகரன் சென்றான் என்றால், அவளும்தானே சந்தோஷப்பட்டாள்?

இப்போது அவள் நினைத்த முன்னேற்றம் இல்லை என்றதும், பழியைத் தூக்கி, டமார் என்று அவர்கள் மீது போடுகிறாளே!

ஆனாலும், வீட்டின் சின்னக்குட்டி! தாயில்லாமல் வளர்ந்தவள். இவள் மகிழ்ச்சியோடு வாழ வேண்டும் என்ற கவலைதான். தந்தை, தமையன் இருவருக்குமே பெரிதாகத் தெரிந்தது!

இருவரும் பேச்சின்றி, முகத்தில் கவலையும் கனிவுமாக அவளைப் பார்த்துக் கொண்டு நிற்க, ''ஆனால், அதற்குப் பயந்து நான் ஒன்றும் சும்மா இருக்க மாட்டேன்'' என்று குரலில் உறுதியோடு அறிவித்தாள் அவள்.

தொடர்ந்த சில நாட்கள், சாதனாவுக்கு மிகவும் எரிச்சலூட்டுவனவாக அமைந்தன.

தந்தையிடமும், தமையனிடமும் சூள் உரைத்ததற்கு இணங்க, குணசேகரனின் கவனத்தைக் கவர, அவள் எவ்வளவோ முயற்சி செய்தாள்தான்.

அவளது வேலைத் திறமைதான். அவனது முதல் நல்லெண்ணத்தை அவளுக்கு ஈட்டித் தந்தது என்பதை நினைவு வைத்து, அவன் எள் எனுமுன் எண்ணையையே கையில் கொண்டு போய்க் கொடுப்பது போல விரைந்து, அதேசமயம், அவசரப் பிழை எதுவும் நேர்ந்துவிடாத கவனத்தோடும் செயல்பட்டாள்.

குணசேகரன், தப்பு தவறு இல்லாதவன். எனவே, கண்டபடியான நடை, உடை, பாவனைகள் அவனது வெறுப்பையே தூண்டி விட்டுவிடக் கூடும். எனவே, கண்ணைக் கவரும் விதமாக பார்க்கப் பளிச்சென்று, அதேசமயம் கண்ணியமாகவும் தோன்றக்கூடிய உடைகளை வெகு கவனத்துடன் தேர்ந்தெடுத்து அணிந்து, அந்த உடைகளுக்கு ஏற்றவாறு அவளது அங்க அசைவுகள் ஆபாசமற்ற எழிலோடு அமையுமாறு பார்த்துக் கொண்டாள்.

ஆனால், பெரும்பொழுதைச் செலவழித்து, யோசித்து யோசித்து அவள் செய்த எதையுமே, அவன் கண்டு கொண்ட மாதிரியே தெரியவில்லை!



வேலைக்கேனும் தலை நிமிராமல் பார்வை பைலிலேயே இருந்தபடி சொன்ன, ஓர் அரைகுறை ''குட்'' மட்டுமேனும் கிடைத்தது!

ஆனால், நடை, உடை, பாவனையை பொறுத்தவரை, அவள் ஒரு கோணிப்பையைக் கட்டிக் கொண்டே நடமாடியிருக்கலாம்! அதைக்கூட, வித்தியாசமாக இருக்கிறதே என்று குணசேகரன் ஒரு தரம் திரும்பிப் பார்த்திருக்கலாம்! ஊகூம். அதைக் கூட கவனித்திருக்க மாட்டான்!

அந்த அளவுக்கு, அவனிடம் சலனமே இல்லை! அலுவலகத்தில் இருக்கும் முழு நேரமும், புது நிறுவனத்து வேலை தவிர, வேறு எண்ணமே இல்லாதது போலக் குணசேகரன் நடந்துகொண்டது, ஒரு விதத்தில் நிம்மதியாகவும், மற்றொரு விதத்தில் கவலையாகவும் இருந்தது அவளுக்கு!

வேலை மட்டுமே அவனது கவனம் என்றால் அவளுக்குச் சந்தோஷம்தான்! அவனுக்குப் பெருகும் வருமானம், பின்னால் தன்னதாகவும் ஆகுமே, என்ற எண்ணம்!

ஆனால் அவளிடம் ஈர்ப்பே இல்லையோ, அதன் காரணம் மதுரைக்காரியோ என்று நினைக்கும்போதுதான், மிகவும் சஞ்சலமாக உணர்ந்தாள் சாதனா.

இதற்கிடையே, துபாய் மாப்பிள்ளை பற்றி, முகுந்தன் வேறு அவ்வப்போது நச்சரித்தான்.

''நல்ல இடம். நாளைக்குக் கிடைக்கக் கூடிய பலாக்காயை விடக் கையில் இருக்கும் களாக்காய் மேல் என்று சொல்வார்கள்! நிச்சயம் இல்லாத குணசேகரின் பணத்துக்

காக, இதை விடுவது அவ்வளவு சரியென்று எனக்குத் தோன்றவில்லை!'' என்று அடிக்கடி சொல்லி, அவளைத் தொல்லை செய்தான்.

குணசேகரனின் பணத்துக்காக என்று இப்போது, அண்ணன் அடிக்கடி சொல்வதை, சாதனா கவனிக்காமல் இல்லை!

குணசேகரன் தரும் 'பிசினசு'க்காகத் தன்னைக் கைவிட்டு விட்டதாக அவள் சொன்னதற்கான குத்தல்!

ஆனால், அவளது அலுவலகக் கம்ப்யூட்டரில் சில பட்டன்களைத் தட்டினால், குணசேகரனின் தொழிலின் மதிப்பு, அவனது வரவு செலவுக் கணக்குகள் தெரியும்! தினமும் அதைப் பார்க்கிறவளுக்கு, அதை எப்படி விட மனம் வரும்?

அப்படி விடச் சொல்லுகிறவர்கள் முட்டாள்கள் என்று கோபமாக நினைப்பதும், நினைத்துவிட்டு, சேச்சே, அப்பாவையும் அண்ணனையும் அப்படி நினைக்கலாமா என்று தன்னைத்தானே கடிந்து கொள்வதுமாக, சாதனா வின் மனம் அலைபாய்ந்து தவித்தது!

அத்தோடு முகுந்தன் சொல்வதும் ஒரு வகையில் சரிதானோ? அவள்தான் அசட்டுத்தனமாகக் காத்திருக் கிறாளோ என்று, அதுவேறு சஞ்சலம்!

மனதைத் தெளிவிக்கும் முயற்சியாக, குணசேகரன் அறியாமல், அவனைப் பின் தொடர்ந்தும் பார்த்தாள். ஒருவாறு, அதன் பிறகே, அவள் நிம்மதி அடைந்தாள் எனலாம்.

ஏனெனில், மறுவாழ்வு மையத்துக்கும் மதுரைக்காரிக் கும் என்ன சம்பந்தம்?



ஒருவேளை அவளைத்தான் சிகிச்சைக்காக சேர்த்திருக் கிறதோ என்று ஓர் எண்ணம் திடீரெனத் தோன்றவும் விழுந்தடித்துக் கொண்டு ஓடிப்போய் விசாரித்தும் பார்த்தாள்.

குணசேகரனை இழந்த துக்கத்தை மறப்பதற்காக, அந்தப் பெண் போதைக்கோ, குடிக்கோ அடிமையாகி இருக்கலாமே. நடக்கக் கூடியதுதானே?

ஆனால், அங்கே ஓர் ஆணைத்தான் குணசேகரன் சென்று பார்க்கிறான் என்று அறிந்த பிறகு, அதற்கு மேல், மறுவாய்வு மையம் பற்றி ஆர்வம் அவளுக்கு விட்டுப் போயிற்று!

யாராவது பழைய நண்பன், அதிலும் இல்லத்தில் பழக்கப்பட்டவனாக இருப்பான்.அவர்களுக்குத்தானே குணசேகரன் வேண்டாத உதவியெல்லாம் கணக்குப் பாராமல் செய்வது?

ஆனால், அங்கே சேர்க்கப்பட்டிருந்தவனுக்கும், திலோத்தமாவுக்கும் உள்ள தொடர்பு தெரிந்திருந்தால், சாதனா நடுநடுங்கிப் போயிருப்பாள்.

ஏனெனில் அந்த மறுவாழ்வு மையத்தில், தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்து சிகிச்சை பெற்று கொண்டிருந்தவன், செல்வம்! குணசேகரனுடைய மனைவி திலோத்தமை யுடைய ஒரே சகோதரன்! குணசேகருடைய ஒரே மைத்துனன்!

செல்வத்தை மறுவாழ்வு மையத்தில் கொணர்ந்து சேர்ப்பதற்குள், குணசேகரன் பெரும்பாடு பட வேண்டி யிருந்தபோதும், செய்தே ஆக வேண்டும் என்ற பிடி வாதத்தை அவன் சற்றும் தளர விட்டானில்லை!

எப்போது, பணத்துக்காக, தங்கையின் கழுத்து நகையைப் பலாத்காரமாகப் பிடுங்க செல்வம் முயற்சி செய்தானோ, அதன் பிறகு திலோ இருக்கும் அதே வீட்டில், அவனும் இருப்பது நல்லதில்லை என்று, அவனுக்குத் தெளிவாகிப் போயிற்று!

குறைந்த பட்சமாக, அவன் இன்றிருக்கும் நிலையில் நிச்சயமாக, அது கூடவே கூடாது!

அதனால், இப்போதைக்கு அவனை அங்கிருந்து அகற்றியே ஆக வேண்டும் என்று முடிவு செய்தான் குணசேகரன்.

ஆனால், எப்படி?

எப்படியும், அவன், திலோத்தமாவுடைய அண்ணன்! அந்த வீட்டில் அவனுக்கும் உரிமை இருந்தது! அதனால், அவனை இங்கிருந்து அடாவடித்தனமாக அடித்து விரட்டுவது.. இன்றைக்கு அவனால் முடியும் என்றாலும் நியாயமில்லை!

அண்ணனை விரட்டுவதற்குத் திலோவும் ஒத்துக் கொள்ள மாட்டாள்.

மீதமிருக்கும் வழி, செல்வத்தைத் திருத்தி நல்லபடி வாழ வைப்பது மட்டுமே!

அது மட்டும் நடந்தால், அவனுக்காகவும் ஏங்கிக் கொண்டு இருக்கிறாளே, நளினி, அவளது வாழ்வும் உருப் பட்டுப் போகும்.

இதற்கு டாக்டர் சிதம்பரத்தை ஒத்துக்கொள்ள வைப்பதற்குத்தான், குணசேகரன் பெரும்பாடு பட வேண்டியிருந்தது!



பெண்ணைப் பெற்றவர்! மருத்துவர் என்பதால், குடியினால் ஏற்படக் கூடிய உடல் பாதிப்புகளை நன்கு அறிந்தவர்.

நூறு சதவீதமாகச் செல்வம் குணமடைந்தால் மட்டுமே, பெண்ணைக் கொடுத்தால் போதும் என்று, குணசேகரன் கேட்டுக் கொண்டபோதுதான், அவர் சற்றே அசைந்து கொடுத்தார்.

அடுத்துத் தொழில் பயிற்சி கொடுத்து, உருப்படியாகச் சம்பாதிக்க வைப்பதாக வாக்கு கொடுக்கவும், யோசிக்கத் தொடங்கினார்.

இரண்டு தலைமுறை நட்பின் பாதிப்பும் இருக்கிறதே!

கடைசியாகத் தனக்கு ஏன் இந்த அக்கறை என்பதையும் குணசேகரன் விளக்கிய பிறகே, அவனது திட்டத்தை ஏற்று, உதவியும் செய்யத் தொடங்கினார்.

இன்றியமையாத உதவி!

ஏனெனில், ஒரு மருத்துவராக, இதுபற்றி அவருக்கு நிறையத் தெரிந்திருந்ததோடு, நிறைய ஏற்பாடுகளைச் செய்யவும் முடிந்தது.

செலவுகள் அனைத்தையும் குணசேகரன் இயல்பாக ஏற்றான்.

அதிலும், உரிய உறவாக, சொந்த மகனை மறுவாழ்வு மையத்தில் சிகிச்சைக்காக சேர்க்கும்படியாக ஒரு கடிதம் எழுதித் தருவதற்கான உந்துதலாக, மாமியாருக்கே லஞ்சம் கொடுக்க நேர்ந்ததைக் கூட அவன் பொருட்படுத்தவில்லை என்பதைக் கண்ட பிறகு, சிதம்பரத்தின் ஒத்துழைப்பு முழுமையாக இருந்தது!

உச்ச கட்டமாக, இருவருமாகச் சேர்ந்து, இரண்டு ஆட் களையும் ஏற்பாடு செய்து, கிட்டதட்ட கடத்திச் சென்று தான் செல்வத்தை மறுவாழ்வு மையத்தில் சேர்த்தார்கள்.

ஒருமாதம் கழித்து, வெற்றிப் பெருமிதத்தோடு மனை வியைப் பார்க்கச் சென்ற குணசேகரனுக்கு, அங்கே ஒரு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது.

சுனாமிப் பேரலை போன்று, சற்றும் எதிர்பாராத பேரதிர்ச்சி!



# 9

திலோத்தமா இருக்கும் வீட்டில், இப்போதைய செல்வம் இருப்பது கூடாது என்று முடிவு செய்ததுமே, அதை எப்படி சாதிப்பது என்றும் குணசேகரன் தீர் மானித்துவிட்டான்.

செல்வம் குடிப்பதை நிறுத்தியாக வேண்டும்! அவ னுக்கு நல்ல புத்தி சொல்லி நிறுத்துவது முடியாத காரியம் என்று, குணசேகரன் முதல்நாளே புரிந்து கொண்டான்.

ஒரு கெட்டதை விடுவது என்றால், ஒன்று தனக்காகப் புத்தி இருக்க வேண்டும். அல்லதுஅக்கறையுள்ள ஒருவர் எடுத்துச் சொல்வதைக் கேட்டுப் புரிந்து கொள்ளும் அளவுக்கு, சுய உணர்வோடேனும் இருக்க வேண்டும்.

இரண்டில் எது இருந்திருந்தாலும், செல்வம், இவ்வள வுக்குத் தரம் இறங்கியிருக்க மாட்டான்!



இப்போது அவனைக் கட்டாயப்படுத்தித்தான், இந்தக் கெட்ட பழக்கத்தைக் குணப்படுத்தியாக வேண்டும்!

ஒரு வளர்ந்த முழு மனிதனை, எந்த வித உரிமையும் இல்லாத இன்னொருவன் கட்டாயப்படுத்தி ஒன்று செய்ய, வைப்பது எளிதல்ல!

அப்படிக் கட்டாயப்படுத்திக் கூட்டிப் போனாலும், உரியவர்களின் கோரிக்கை, அனுமதி இல்லாமல் மறுவாழ்வு மையங்களிலோ, மருத்துவமனைகளிலோ அவர்களை அனுமதித்துச் சிகிச்சை அளிக்க மாட்டார்கள் என்ற அவனது ஐயம் சரியானதாகவே இருந்தது!

இது போன்ற விவரங்கள்,சிகிச்சை முறை போன்றவற்றைச் சிதம்பரம், குணசேகரனுக்குச் சொல்லிக் கொடுத்தார்.

அவர் சொன்னபடி, ஆனந்தி கண்ணபிரானிடம் பெற்ற கடிதம், அவளுடைய மகனைக் கட்டாயப்படுத்தி சிகிச்சை அளிப்பதற்கு மிகவும் பயன்பட்டது!

அந்தக் கடிதத்தை வைத்துக்கொண்டுதான், செல் வத்தைக் கடத்திப்போய், மறுவாழ்வு மையத்தில், குண சேகரனால் சேர்க்க முடிந்தது!

சேர்த்தது மட்டுமில்லாமல், குணசேகரன் தினமும் சென்று செல்வத்தைப் பார்த்தான்.

எந்தவிதமான போதை என்றாலும் வெறும் காபியளவு வீரியம் அற்றதே என்றாலும் கூட, பழகிவிட்டால், அது இல்லாமல் இருப்பது கடினமே.

அப்படியிருக்க, பாட்டில் பாட்டிலாக உள்ளே தள்ளி எந்நேரமும் மயக்கத்தில் ஆழ்ந்து கிடந்த செல்வத்தைப் போன்ற மொடாக் குடியன், அந்த வாசனையே இல்லாமல் என்ன பாடு படுவான்?

தன்னுடைய இந்தத் துன்பத்தின் காரணம் இவன் என்று வெறுத்து ஒதுக்கிய செல்வத்திடம் பிடிவாதமாக நெருங்கிப் பேசினான், குணசேகரன்.

அவன் பேசியதற்கு பலனும் இருந்தது!

கடைசியாக நளினி கிடைப்பாள் என்கிற தூண்டிலில் அவன் முழுமையாகவே மடங்கிப்போனான்.

இந்த இடத்தில், சிதம்பரமும், மகளையே கூட்டி வந்து, குணசேகரனின் கூற்றை உறுதிப்படுத்தவும், செல்வம் வேகமாக குணம் பெறத் தொடங்கினான்.

அவனது மன உறுதியைப் பார்த்து, மறுவாழ்வு மையத்து மருத்துவர்களே, வியப்படைந்து போனார்கள்!

கூடவே அடுத்து, வாழ்வில் என்ன செய்யலாம் என்ற யோசனையையும் உருவாக்கி, செய்யும் ஆர்வத்தையும் செல்வத்திடம் தூண்டிவிட்டான் குணசேகரன்.

நல்லதொரு உதாரணமாகக் கண் முன்னே தங்கை கணவரையே பார்க்கவும், தானும் ஏதாவது செய்ய வேண்டும் என்ற தாகத்தைச் செல்வமும் உணரலானான்.

அப்போதுதான், ஒரு நிமிர்வோடு நளினியை மணக்கக் கேட்கலாம்!

கார்களில் ஈடுபாடு உள்ள அவனுக்கு 'ஆட்டோ மொபைல்' உதிரிப் பாகங்கள் கடை ஒன்று தொடங்க யோசனை கொடுத்து, அது பற்றிய அறிவை வளர்க்கவும், குணசேகரன் ஏற்பாடு செய்தான்.

'நளினி' போட்ட மந்திரத்தில், செல்வம் தொழிலையும் மிகுந்த ஈடுபாட்டோடு கற்றுக் கொண்டான்.

சின்ன வயதில் சரியான வழிகாட்டுதல் இருந்திருந்தால், செல்வத்துக்கு இந்தப் பிரச்சினையே நேர்ந்திராது



என்று, சிதம்பரமே மகிழ்ந்து கூறும் அளவுக்கு, அவனது முன்னேற்றம் இருந்தது!

இதேபோல வளர்ந்தும், தானாக வழி கண்டுபிடித்து வாழ்கிறவள் என் மனைவி என்று நினைத்தபோதும், அதை வாய்விட்டுச் சொல்லாமல் மனதிற்குள்ளேயே வைத்துக் கொண்டான் குணசேகரன். சிதம்பரம் வீட்டோடு, செல்வத்தின் உறவுதானே சீர்ப்பட வேண்டும்?

வெற்றி நிச்சயம் என்று, தெள்ளத் தெளிவாகத் தெரிந்த பிறகே, மிகுந்த மகிழ்ச்சியும் பெருமிதமுமாகத் திலோத்தமையிடம் விஷயத்தைச் சொல்லப் போனான் குணசேகரன்.

உள்ளூர, சிறு பிள்ளை போல ஒரு துள்ளல் இருந்தது அவனிடம்! திலோவின் பெரும் துன்பத்தைப் போக்கியிருக்கிறானே!

உடன்பிறந்த அண்ணனால், அவளுக்கு இனி வருத்தம், வேதனை, குன்றல், குறுகல் ஒன்றும் இராது! பெருமையே படலாம்!

அன்றைக்கு திலோத்தமையின் பள்ளி நேரம் முடிந்து, அவள் ஓய்வாக இருக்கும் நேரம் பற்றி விசாரித்து, அதன் பின்னரே, குணசேகரன் மனைவியைப் பார்க்கப் போனான்.

நேரம், நேரம் என்று முன்போல் அவள் பதறும்படி நேரக் கூடாதில்லையா?

ஹாலை அடுத்திருந்த சின்ன அறையில் திலோத்தமா தனியாகத்தான் அவனுக்காக அமர்ந்திருந்தாள்.

பொதுவாக, வெளியார் அறியாமல், முக்கியமாகப் பணியாட்களுக்கும் தெரியாமல் பேசுவது என்றால், அந்த அறையைத்தான் பயன்படுத்துவது வழக்கம். அங்கே

திலோத்தமா காத்திருந்தது, அவனுக்கு மகிழ்ச்சியை அளித்தது.

தேவமங்கை போன்று, அன்று போலவே, இன்றும் திலோத்தமை அழகாகத்தான் காட்சியளித்தாள்.

ஆனால், முன் போன்ற குதியாட்டம் ஆர்ப்பரிப்பு இல்லை! ஓர் அமைதி.. அமைதி என்பதை விட, ஒரு கட்டுப்பாடு தெரிந்தது.

கூடவே, இந்த வயதில் அவளுக்குத் தேவையற்ற களைப்பும். இதை முதலில் போக்கியாக வேண்டும். பழைய மாதிரியாக துள்ளல் நடையைச் சீக்கிரமே கொண்டு வரவேண்டும்.

கணவனைக் கண்டதும், திலோத்தமா எழுந்து, அவனை வரவேற்று உட்காரச் சொன்னதில் ஒன்றும் குறைவில்லை!

அவன் உட்கார்ந்ததும், உள்ளே பார்த்துக் குரல் கொடுத்ததும் வந்த குளிர் பானத்தை அருந்தச் சொன்ன திலும் குற்றம் சொல்ல முடியாதுதான்.

ஆனாலும்.. ஏதோ ஒன்று, அவனைத் தூர..மாய்.. வெகு தூரத்தில், யாரோவாக, ஒரு விருந்தாளியாகத் தள்ளி நிறுத்துவது போலக் குணசேகரன் உணர்ந்தான்.

அதற்கான காரணத்தை அவனால் ஓரளவு உணர்ந்து கொள்ள முடிந்தது!

ஐந்து ஆண்டு காலம், கணவன் எங்கே இருக்கிறான் என்றே தெரியாத நிலை!

அதன்பிறகு, திடுமென அவன் வந்து நின்றால், அதுவே அதிர்ச்சி!



அதிலும், அப்படி அவன் வந்து நின்ற இரு தருணங் களுமே அவளுக்கு மிகவும் துன்பமானவை! தலை குனிவைத் தருவன!

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக அவளை வெறுத்து ஒதுக்கிப் போன கணவனே, அதுவும் இல்லாதவன் என்று அந்த வீட்டில் இளப்பமாக நடத்தப்பட்ட அவனே முன்வந்து, அந்தக் கேவலங்களில் இருந்து அவளைக் காப்பாற்ற நேர்ந்தது. அவளது தன்மானத்துக்கு தாங்க முடியாத பெரிய அடியாகத்தான் இருந்திருக்கும்!

அதனாலேயே, அப்போதெல்லாம் ‘போய்விடுங்கள் போய்விடுங்கள்’ என்று அவள் விரட்டியதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது!

ஆனால், அது முடிந்த கதை என்று, இப்போது அவளுக்கு ஏன் புரியவில்லை? மறக்க வேண்டியது என்பதும்தான்!

அதை விளக்கிப் புரிய வைக்கும்முன் ‘கண்டேன் சீதையை’ என்பது போல, நல்ல சேதியைத் தெரிவிக்க எண்ணினான் குணசேகரன்.

‘‘திலோ உன் அண்ணன் முழுக்க, முழுக்கத் திருந்தி விட்டான். அவனுக்குச் சிகிச்சை கொடுத்த வைத்தியர் களுக்கே அதிசயம்! அப்படிக் குடித்தார் என்கிறீர்கள்.. நல்லபடியாக வாழும் ஆசை இவ்வளவு இருக்கிறதே, என்று ஆச்சரியப்பட்டார்கள்! அந்த ஆசை இருப்பதா லேயே, செல்வம் இனிமேல் அந்தத் தப்பு வழி போகவே மாட்டான் என்று மறுவாழ்வு மைய மருத்துவர்கள் உறுதி யாகச் சொல்லுகிறார்கள்’’ என்றான் மகிழ்ச்சியோடு.

‘‘ரொம்ப சந்தோஷம்!’’ என்றாள் அவள் மெதுவாக, ‘‘இதற்கெல்லாம் நாங்கள் உங்களுக்குத்தான் ரொம்பவும் கடன் பட்டிருக்கிறோம் என்று தெரிகிறது!’’

''அதென்ன வார்த்தை, திலோ, கடன் கிடன் என்று? உறவு எனும்போது, ஒருவருக்கொருவர் செய்வதுதானே?'' என்றான் அவன் சாதாரணமாகவே.

''அப்படியில்லையே!'' என்று மறுத்தாள் அவள். ''தாயும் பிள்ளையும் என்றாலே, வாயும் வயிறும் வேறே என்கிறார்கள்! மற்ற எதையும் விட நெருக்கமான உறவையே அப்படிச் சொல்வதானால்.. இதற்கெல்லாம் சேர்த்து எவ்வளவு செலவு ஆயிற்று என்று சொல்கிறீர்களா? தந்துவிடுகிறேன்!'' என்றாள் திலோத்தமா, அவ்வளவு நேரம் பயன்படுத்திய மெதுவான, கட்டுப்பாடான குரலிலேயே, தெளிவாக.

திகைத்துப் போனான் குணசேகரன்!

எத்தனை முறை மனதில் ஒத்திகை பார்த்திருந்தால், உணர்ச்சி வசப்படாமல், இப்படிச் சொல்ல முடியும்?

குரல் மறைத்த வலியும் வேதனையும் புரிய ''என்ன பேச்சு இது, திலோ? உன்னிடம் பணம் பிடுங்கவா, இதையெல்லாம் செய்தேன் என்று நினைத்தாய்? அப்படி இல்லைம்மா!'' என்றான் அவன் தணிந்த குரலில்.

''நீங்கள் அப்படி நினைக்காமல் இருக்கலாம். அதையே சாக்காக வைத்து, நானும் திருப்பித் தராமல் இருக்க முடியுமா? எவ்வளவு என்று சொல்லுங்கள். தந்துவிடுகிறேன்!'' என்றாள் அவள் பிடிவாதமாக.

என்ன பைத்தியக்காரத்தனம், இது?

இதுவரை, என்ன செலவாகியிருக்கும் என்று ஒரு சின்ன ஊகமாவது, இவளுக்கு இருக்குமா? இருந்தால் இப்படி கேட்பாளா?

வெளிப்படையாக ''விடு திலோ, எதையும் இங்கிருந்து திரும்பப் பெற்றுவிட வேண்டும் என்ற எண்ணத்தில் நான் எதையும் செய்யவில்லை!'' என்றான் அவன்.



''தெரியும். நீங்கள் இப்போது பெரிய பணக்காரர் ஆகிவிட்டதாகக் கேள்விப்பட்டேன். ஆனால், அதற்காக என் குடும்பத்துக்காக, உங்களைச் செலவு செய்ய விட்டுவிட்டுச் சும்மா இருக்க என்னால் முடியாது. சொல்லுங்கள், எவ்வளவு? சீக்கிரமாகச் சொன்னால், சீக்கிரமாகவே வாங்கிக் கொண்டு போகலாம்.''

என் குடும்பத்துக்காக! சீக்கிரமாக வேறு போய்விட வேண்டுமாம்!

''திலோ, சும்மாச் சும்மாக் கேட்காதே, நான் என் மைத்துனனுக்காக செய்தேன் அவ்வளவுதான். இத்தோடு, இந்தப் பேச்சை விடுகிறாயா?'' என்றான் அவன்.

''என்ன மைத்துனன்?'' என்றபோது, அவள் கண்களில் கோபம் மின்னியது. ''அந்த உறவெல்லாம் வேண்டாம் என்றுதானே ஐந்து ஆண்டுகளுக்கு முன்னதாகவே, வெட்டிக் கொண்டு போனீர்கள்? அப்புறம் என்ன மைத்துனன் வேண்டியிருக்கிறது? சொல்லுங்கள், எவ்வளவு? அண்ணனுக்காக மட்டும் அல்ல. அம்மாவுக்காகச் செலவு செய்ததையும் சேர்த்துச் சொல்லுங்கள்!'' என்றாள் குரலில் அழுத்தம் தொனிக்க.

அம்மாவுக்காகச் செலவு செய்ததுமா? என்ன பெண் இவள்!

'மிச்சம் மீதி இருக்கிற நகைகளும், அவள் சம்பாதித்ததும்..'

இன்னும் மிச்சம் மீதி இருப்பதையும் பிடுங்கவா, அவன் செலவு செய்தான்?

''திரும்பத் திரும்ப என்ன பிடிவாதம் இது, திலோத்தமா? இதற்கு, அதற்கு என்று நான் ஒன்றும் கணக்கு வைத்துக் கொள்ளவில்லை! விடு!''

அவள் விடுவதாக இல்லை.

''ஆற்றிலே போட்டாலும் அளந்துதான் போட வேண்டும் என்கிறார்கள். ஆற்றிலே போடுவதையே இப்படிச் சொன்னால், அடுத்தவருக்காகச் செலவு செய்ததற்கு எவ்வளவு கணக்குப் பார்க்க வேண்டும்? கணக்குப் பார்த்துதான் இருப்பீர்கள். கணக்குப் பாராமல் செலவு செய்தால், எங்கள் நிலைதான் வரும். உங்களைப் போலப் பணக்காரர் ஆக முடியாது. சொல்லுங்கள், எவ்வளவு ஆயிற்று? எனக்கு வேலை இருப்பதால், கொஞ்சம் சீக்கிரமாகச் சொன்னால் நல்லது!''

சொன்னால் இவன் முகம் எப்படி மாறிவிடும் என்பது தெரியாமல், சீக்கிரமாக வேறு சொல்ல வேண்டுமாமே!

''எரிச்சல் மூட்டுகிறாய், திலோத்தமா. எனக்கு எதுவும் வேண்டாம். இது வந்துதான் ஆக வேண்டும் என்று இல்லை! இதற்கு மேல், இந்தப் பேச்சு வேண்டாம். இப்போது செல்வம் நன்றாகி விட்டால் அவனுக்கு...'' என்று பேச முயன்றான் குணசேகரன்.

ஆனால், அவள் குறுக்கிட்டு ''இப்போது நீங்கள் பணக்காரர், இந்தப் பணம் வந்துதான் அடுத்த வேளை உணவு என்பது இல்லை என்று எனக்கும் தெரியும். ஆனால் அதற்காக, ஊரில் உள்ள பணக்காரனிடம் எல்லாம், நான் கடன்பட முடியுமா? வேண்டாம். செலவு செய்ததை முழுதாகவே கேட்டு வாங்கிக் கொள்ளுங்கள்'' என்று அதையே மறுபடியும் கூறினாள் திலோத்தமா.

ஊரில் உள்ள பணக்காரன்! எப்படி அன்னியமாக்கிப் பேசுகிறாள்!

''கீறல் விழுந்த ரிக்கார்டு மாதிரி சொன்னதையே சொல்லிக் கொண்டிராதே, திலோ. உன்னிடம் திரும்பப் பெறும் எண்ணத்தில் நான் எதையும் செய்யவில்லை என்றால், தயவு பண்ணிப் புரிந்து கொள்'' என்று பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு அவன் கூறியதை அவள் வேறு விதமாகப் பொருள் எடுத்துப் பேசினாள்.



''அதுதான் ஏன் என்று கேட்கிறேன்! என்னால் முடியாது என்று பார்த்தீர்கள் போல! ஆனால் என்னால், முடியும். நீங்கள் தொகையைச் சொன்னீர்கள் என்றால்...''

''சொல்ல முடியாது!'' என்றான் அவன் ஆத்திரத்துடன், ''தர வேண்டாம் என்றால் புரிந்து கொள்ளாமல், மீண்டும் மீண்டும் உளறல், இது?''

''உளறலா?'' என்று அவனை நேராகப் பார்த்தாள் திலோத்தமா, ''தர முடியாத தொகையைப் பற்றித் திரும்பத் திரும்பக் கேட்கிற முட்டாள் என்று எண்ணுகிறீர்கள். அப்படித்தானே? இப்போது நீங்கள்தான் புரிந்து கொள்ளாமல் பேசுகிறீர்கள், குணசேகரன் சார்! பைசாக் கணக்கு வரை என்னால் சரியாகச் சொல்ல முடியாத போதும், உங்களுக்கு எவ்வளவு பணம் இழப்பு என்று எனக்கும் ஓரளவு தெரியும்...''

''இழப்பாக நான் நினைத்தது இல்லை!''

''லாபமாக ஒன்றும் கிடைக்காது எனும்போது, கையை விட்டுப் போன தொகை இழப்புதானே? ஆனால், அது பற்றிய விவரம் இப்போது முக்கியமில்லை! நீங்கள் செலவு செய்த பணம், அம்மாவுக்காக மருத்துவமனைக்குக் கட்டியது. அண்ணனை இங்கிருந்து கடத்திப் போகச் செலவு செய்தது, இன்னும் அண்ணனுக்காக மறுவாழ்வு மையத்தில் கட்டியது. தொழில் பயிற்சி...''

இவை அனைத்தையும் விடப் பெரிய செலவு நல்ல வேளைக்காக இவளுக்குத் தெரியாது என்று குணசேகரன் நினைக்கும்போதே, ''எல்லாவற்றுக்கும் மேலாக, பெற்ற மகனை மறுவாழ்வு மையத்தில் சேர்க்க விரும்புவதாக அம்மாவைக் கடிதம் எழுத வைப்பதற்காக, அவர்களுக்குக் கொடுத்த லஞ்சம் எல்லாம் சேர்த்து...'' என்று திலோத் தமா கூறும்போதே குணசேகரனுக்குத் திகைப்புதான்.

பணத்தையும், வாங்கிக் கொண்டு, அவன் கேட்டுக் கொண்டதையும் மீறி, மகளிடம் போய் சொல்லியிருக் கிறார்களே! நீ தராவிட்டால் போல, என்னிடமே எதை வாங்கித் தின்னவும் பணம் இருக்கிறது பார் என்று, பெருமையடிப்பதற்காக இருக்கும். என்ன மாதிரி தாயார், திலோவுக்கு! ஆனால் அந்தப் பணத்துக்கு வட்டியாக ஒரு சிறு தொகையைத்தான் எடுத்துச் செலவழிக்க முடியும் என்று அறியும்போது, அந்தம்மாவுக்கே அதிர்ச்சியாகத் தான் இருக்கப் போகிறது!

ஆனால், இந்தக் கணக்கு முழுவதையும் விசாரித்து அறிந்து வைத்துக் கொண்டே, திருப்பித் தரப் போவதாக எப்படி கூறுகிறாள் என்ற வியப்புடன் மனைவியைப் பார்த்தான் அவன்!

மிச்சம் இருக்கும் அனைத்து நகைகளுமோ என்று அவன் ஊகித்தது போலவே, திலோத்தமா, பக்கத்து மேஜையின் இழுப்பறையைத் திறந்து, ஒரு சிறு துணி மூட்டையை எடுத்தாள்.

அதை அவிழ்த்து, பிரித்து வைத்தாள்.

''ஒவ்வொன்றுக்கும் விலை மதிப்புப் போட்டு வைத் திருக்கிறேன். நல்ல வேளையாக தங்கத்தின் விலை



ஏறியிருக்கிறது! உங்கள் பணத்துக்கு ஈடாக, இதை எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று நிமிர்வுடன் உரைத்தாள்.

அந்த நகைக் குவியலில், அவனது பரிசான பிரேஸ் லெட்டும் இருந்தது.

அசட்டுப் பிடிவாதமாகவே கருதி ''இதெல்லாம் எனக்கெதற்கு? நான் வளையல் அணிவது இல்லையே!'' என்றான் இலகுவாகவே.

நக்கல் வேண்டாம். இவைகளை விற்று பணத்தை எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றாள் அவன் மனைவி பழைய விறைப்புடனேயே.

'என்ன ரோஷம்' என்று வியக்கத் தோன்றியதே தவிர, குணசேகரனுக்குக் கோபம் வரவில்லை.

முன்பும், இப்படிச் சிறு பிள்ளைத்தனமாகவே கருதி யிருக்க வேண்டுமோ?

அவள் அருகில் வந்து நின்று பிரேஸ்லெட்டை மட்டும் கையில் எடுத்து ''இவைகளில் எதையும் நான் எடுத்துப் போகப் போவதில்லை, திலோ. நீயே அணிந்து கொள்'' என்றான்.

''இல்...'' என்று பிடிவாதத்துடன் உயர்ந்த பார்வை, சட்டெனத் தாழ, மேஜையைப் பார்த்துத் திரும்பி நின்று ''இ... இல்லை எனக்கு வேண்டாம் எ... எல்லாவற்றையும் ப.. பணமாக மாற்றிக் கொள்ளுங்கள்!'' என்று உரைத்தவளின் குரலும் இறங்கி விட்டிருந்தது.

''திலோ...'' என்று அழைத்தவனுக்கும் பேசுவதில் சிரமம் இருந்தது! லேசாகத் தொண்டையைச் செறுமிக் கொண்டு, ''சில பொருட்கள், சில இடங்களில் மட்டும்

தான் இருக்க வேண்டும். இது இருக்க வேண்டிய இடம்...'' என்று அவளைச் சுற்றி கையைக் கொணர்ந்து, அவளது இடக் கரத்தைப் பற்றினான்.

கை வளையத்தினுள் அசைவற்று நின்றவளின் கையில் நகையை அணிவித்துவிட்டு, மனைவியின் மூடிய இமைகளின் மீது மென்மையாக முத்தமிட்டான் குணசேகரன்.

''குணா!'' என்றழைத்து, சிறு விம்மலுடன் அவன் மார்பில் சாய்ந்தாள் மனைவி.



# 10

தொடர்ந்து நேர்ந்ததற்கு யார் பொறுப்பு என்று யாராலும் சொல்ல முடியாது.

ஆனால், இடையில் நேர்ந்த ஐந்தாண்டுப் பிரிவு பற்றியோ, அந்தப் பிரிவின் காரணங்கள் பற்றியோ, நேரப் பிணைப்பில் கிடந்த அந்த இருவருக்குமே சற்றும் நினைவு வரவில்லை!

கம்ப்யூட்டர் தொடர்பான கண்காட்சி ஒன்றிற்குத் தோழிகளுடன் சேர்ந்து சென்றபோது, ஒரு ஸ்டாலில் விளக்கம் கூறுபவனாகத்தான், குணசேகரனை முதல் முதலாகத் திலோத்தமா பார்த்தது!

அவன் சொன்னது எதுவும் அப்போது அவளது மூளையில் ஏறவில்லை என்றாலும், ஜெராக்ஸ் காப்பி போல,



அவனது தோற்றம் அச்சுப் பிசகாமல், அவள் மனதில் அப்படியே பதிந்து போனது!

அவனைப் பார்ப்பதற்காக, அதற்காக மட்டுமே தினமும், கண்காட்சி நடந்த பத்து நாட்களுமே, திலோத்தமா அந்தக் கண்காட்சிக்குப் போனாள். அப்படிப் பார்த்ததும், கண்காட்சி முடிந்த பிறகு, பெற்றோரிடம் ஒரே பிடிவாதமாக நின்று, அவனை மணந்து கொண்டதும் மட்டுமே அப்போது அவளுக்கு நினைவு வந்த விஷயங்கள்.

நாலுபேர் மெச்ச, தோற்றம் இருக்கிறது. அத்தோடு பின்புலம் இல்லாத பையன் என்பதால், ஏவியதைச் செய்துகொண்டு, இங்கேயே வீட்டோடு கிடப்பான். மகளையும் வேறெங்கும் அனுப்பத் தேவையிராது. மாமியார், நாத்தனார் மற்ற உறவினரின் தொல்லையும் இராது என்று பெற்றோர் பேசிக் கொண்டது, அவளுக்கு அப்போது தெரியாது!

அவனுக்குப் பல தோல்விகளுக்குப் பிறகாக, அந்த வேலை கிடைத்த புதிது! அடிப்படையாக ஒரு சிறு தொகையும், அவன் மூலமாக நடக்கும் விற்பனைக்கு கமிஷனும் ஊதியம் வருமானத்தைப் பெருக்கும் முயற்சியாக, விற்பனையில் அவன் தீவிரமாக ஈடுபட்டிருந்த வேளை!

நிலா மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு ஒரு பெண் தினமும் வந்து நிற்கவும் அவனுக்கும் மயக்கம்தான். அவள் அணிந்திருந்த 'பளிச்'சுகள் வைரம் என்று கூட, அவனுக்கு அப்போது தெரியாது!

ஆனால், கண்காட்சி முடிந்தபிறகு, அந்த நிலாப் பெண்ணை... பொருத்தமாகத் தேவலோக அழகியின்

திலோத்தமா என்ற பெயர் வேறு. அவளைப் பாராமல் எப்படி வாழப் போகிறோம் என்று ஒரே கவலை அவ னுக்கு!

ஆனால், நமக்கு இருக்கும் வருமானத்தில், ஒரு பெண்ணை மணந்து, செலவை சமாளிக்க முடியுமா என்ற பெரும் கலக்கம். அதையும் மீறிக் கொண்டு, அவளைப் பார்த்தே தீர வேண்டும்., அவளோடு பேசியே ஆக வேண்டும். அவள் இல்லாமல் தீராது என்கிற தவிப்பு.

அந்தத் தவிப்புக்கு மருந்தாகத் திலோத்தமா வீட்டில் இருந்து திருமணமே பேசி வரவும். சொர்க்கத்தையே கையில் தந்த உணர்வு அவனுக்கு.

அந்த மகிழ்ச்சியில் வீட்டோடு மாப்பிள்ளையாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனை. அப்போது குண சேகரனுக்குக் கொஞ்சமும் உறுத்தவே இல்லை!

ஒருவேளை, பெற்றோர் உடன் பிறந்தவர்கள் என்று, சொந்தக் குடும்பம் ஒன்று இருந்திருந்தால், அப்போதே அவனுக்கு தயக்கம் தோன்றியிருக்கக்கூடும்! அவர்களில் யாரேனும் எச்சரிக்கையும் செய்திருக்கலாம்!

யாருமற்றவனாக இல்லத்தில் வளர்ந்த தன்மையால் அப்படிப்பட்ட தயக்கம் ஏதுமின்றி, உறவே இல்லாது தனியனாக இருந்த தனக்கு, மனம் கவர்ந்த மனைவி யோடு ஒரு குடும்பமும் கிடைக்கப் போவதாகவே எண்ணிக் குதூகலித்தான், அவன்.

அந்தக் குதூகலத்தோடு, அவளை மணந்தது மட் டுமே, இப்போது அவனுக்கும் மனதில் இருந்தது!



ஒருவருக்கொருவர் தவிர, வேறு எதுவுமே இல்லாத அந்த நிலை எவ்வளவு நேரம் நீடித்ததோ, இருவருமே அறியார்கள். அவர்கள் ஒன்றிய நிலையை குணசேகர னின் செல் கலைத்தது!

மனைவிக்கு மறைத்துப் பேச எதுவும் இல்லாத வனைப் போன்று, ஒரு கையால் அவளை அணைத்த வாறே, பாண்ட் பாக்கெட்டில் இருந்த செல்லை எடுத்துப் பேசினான் அவன்.

செல்லில் பேசியது சாதனாதான்.

சொந்தச் செயல்பாடுகள் பற்றி அவளிடம் எதுவும் சொல்லாமலே, அவளுக்கான வேலைக்குறிப்பை மட்டும் ஈமெயிலில் அனுப்பிவிட்டு, மதுரைக்கு வந்திருந்தான் அவன்.

ஒருநாள் விடுப்பு எடுத்துத் தனக்கான சில வேலை களை முடித்துக் கொண்டு திரும்பி வந்தவள். குண சேகரனைக் காணாமல் தவித்துப் போனாள்.

ஒரு நல்ல சேதி சொல்வதற்காக அவனைத் தேடினால், அவளிடம் சொல்லாமல் கொள்ளாமல் எங்கே போனான்?

சொல்லாமல் எப்படிப் போகலாம் என்ற குமுறலும் உள்ளூர இருக்கத்தான் செய்தது.

பின்னொரு காலத்தில் அதற்காக அவனைக் கொஞ்ச மேனும் வருந்தச் செய்யும் திட்டமும் அவளுக்கு இருந்தது! ஆனால், அதற்கு முன் நல்ல காரியம் நடந்தாக வேண் டும்! அதற்கு பின் பார்த்துக் கொள்ள வேண்டிய விஷயம் அது!

தந்தைக்கோ, தமையனுக்கோ ஏதாவது தெரியுமா என்று விசாரித்தாள்.

இருவரும் கையை விரிக்கவும், சாதனாவுக்கு அவர்கள் மீதும் ஆத்திரம் வந்தது.

எல்லாம் அவளே பார்க்க வேண்டுமா? அப்பா, அண்ணன் என்று இருவரும் எதற்கு இருக்கிறார்கள்? அவள் ஊரில் இல்லை என்றால், இந்த அப்பாவோ, அண்ணனோ குணசேகரன் மீது ஒரு கண்ணை வைத் திருக்கலாம் அல்லவா?

முகுந்தனுக்குத்தான், தங்கையைவிட அவனது வருமானம் பெருகுவதில்தான் அதிகக் கவனம் என்று பார்த்தால், தந்தையும், அவனுக்குத்தான் தலையாட்டு கிறார்!

அவன் சொல்வதைக் கேட்டு, ஏழைக்கேற்ற எள் ளுருண்டை என்று தொடங்கிவிடுகிறார்!

''நம் நிலைமைக்கு இந்த துபாய் மாப்பிள்ளையே அதிகம்மா, அவரையே பார்ப்போம். கோடிகளுக்கு ஆசைப்பட்டு, கிடைக்க இருக்கும் நல்லதையும் கெடுத்துக் கொள்ளாதே!'' என்று அவளுக்கு இலவசமாக அறிவுரை வழங்கல் நடக்குமே தவிர, இந்த விஷயத்தில் இரண்டு பேருமே, ஒரு பைசாவுக்குப் பிரயோசனம் கிடையாது!

இப்போது கிட்டத்தட்டக் காரியத்தை முடித்துக் கொண்டு வந்திருக்கிறாளே, இதற்கு என்ன சொல்லப் போகிறார்கள்?

குறைந்த பட்சமாகக் குணசேகரன் இருக்கும் இடம் தெரிந்தாலாவது, அதற்கு ஏற்ப நடந்து, அவனை வளைத்துப் பிடிக்கலாம் என்று பார்த்தால், இரண்டு பேருமே கையை விரிக்கிறார்களே!



ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, குணசேகரனுக்கே போன் போட்டாள்.

அவள் செய்ய வேண்டிய வேலைகளைத் தெளிவாகக் குறித்து வைத்த பிறகும் தொடர்பு கொண்டால், அதற்காக காரணம் சொல்ல வேண்டுமே!

காரணம் இல்லாமல் தொடர்பு கொண்டு, வெட்டிக் கதை பேசும் உரிமை, அவளுக்கு இன்னும் கிடைக்க வில்லையே!

எனவே, குணசேகரனிடம் சாதனா பதவிசாகத்தான் பேசினாள்.

யோசித்து வைத்தபடி, ''ஈமெயில் பார்த்தேன், கு...சா....ர்! அ...அவசரமாக அனுப்பியதில், ஏதேனும் வி...விட்டுப் போயிருக்குமோ என்று தோன்றியது. அதனால்தான், நேரே பேசி, சரி பார்த்துக் கொள்ளலாம் என்று போன் செய்தேன். உங்கள் ஈமெயிலை வாசித்துக் காட்டட்டுமா, சா...ர்?'' என்றவள், வேண்டும் என்றே அந்த 'சா...ரி'ல் ஒரு தயக்கம் காட்டி இழுத்தாள்.

புரிந்து கொண்டு குணா என்று, அல்லது குறைந்த பட்சமாக உன் அண்ணனைப் போலக் 'குணசேகர்' என்று கூப்பிட்டேன் என்று சொல்ல மாட்டானா, என்கிற ஆசை.

ஆனால் தொழில் சம்பந்தப்பட்ட வரையில் அடுத்த வரின் அரைவினாடித் தயக்கத்தைக் கூட சரியாகப் புரிந்து கொண்டு செயல்படுகிறவன் 'குறிப்பறிய மாட்டாத நன் மரம்' போல, அவளது இழுப்பைக் கண்டு கொண்ட தாகவே தெரியவில்லை!

ஒருவேளை கண்டு கொண்டாலும் 'வில்லங்கத்தை' அகற்றிய பிறகுதான் காட்டிக் கொள்ள வேண்டும் என்று இருக்கிறானோ என்றொரு சந்தேகம் அவளுக்கு.

அந்த 'வில்லங்கம்' தானாகவே அகன்று போகப் போகிறது என்று எண்ணுகையில் உள்ளூர உற்சாகம் குமிழியிட்டது சாதனாவுக்கு. ஆனால் அதைக் காட்டிக் கொள்வது சரியில்லை என்று அடக்கிக் கொண்டாள்.

எல்லாம் இந்த அப்பா பண்ணிய மடத்தனம்!

கொஞ்சம் கொஞ்சமாக நெருங்கிப் பழகப் பழக, 'வில்லங்கத்தை' அகற்றும் வேகம் தானாக வரும் என்று, இந்த அப்பாவின் 'தண்ட' புத்திக்குப் புரியாமல் போயிற்றே!

அகப்பட்டவர்களுக்கு எல்லாம் அவள் மனதுக்குள் அர்ச்சனை செய்து கொண்டிருப்பது தெரியாமல் 'தேவையில்லை' என்ற ஒரே வார்த்தையில், அவளது கேள்விக்கான பதிலைக் கொடுத்தான் குணசேகரன்.

ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு ''வைத்து விடாதீர்கள் சார்!'' என்று அவசரமாகக் கூறினாள் அவள். ''இதில் எனக்கு ஒரு சந்தேகம்.''

''சரியாகப் படித்துப் பார், சாதனா... சந்தேகம் வராது. இப்போது...'' என்றவனின் பேச்சில் குறுக்கிட்டு ''சரி சார்... ஆனால்... இந்த ஒரு நாள் விடுப்பில் நான் எங்கே போனேன், என்ன செய்தேன் என்று நீங்கள் கேட்கவே இல்லையே! சொல்லட்டுமா?'' என்று கேட்ட சாதனாவின் குரல் குழைந்து, தழைந்து இழைந்தது.

''இல்லை. வேறு முக்கிய வேலையில் ஈடுபட்டிருப்பதால், இப்போது வேண்டாம். வைத்துவிடு'', என்று



செல்லை மூடியவாறு பார்த்தால், திலோத்தமா அவனிடம் இருந்து விலகி, அறையின் எதிர்ப்புறத்தில் இருந்த அறை வாயிலுக்குச் சென்றிருந்தாள்.

செல்லை பையினுள் வைத்தவாறே ''திலோ ப்ளீஸ்...'' என்றவாறு கைகளை விரித்து, ''திலோ...'' என்று தாபத்துடன் அழைத்தான்.

ஆனால் திரும்பிப் பார்த்த அவளது கண்களில் கனல் தெறிக்கக் கண்டு திகைத்து, ''என்ன திலோ'' என்று வினவினான்.

அருவருப்புடன் உதடு லேசாக நெளிய ''அருகில் இருப்பவள் எந்தப் பெண் என்றாலும், உங்களுக்கு ஒன்றுதானா? என்னிடம் இப்படி நடக்க, உங்களுக்கு வெட்கமாக இல்லை?'' என்று கடுமையான குரலில் கேட்டாள் அவள்.

குணசேகரனின் முகமும் மாற ''எதற்கு வெட்கம்? நான் தொட்டுத் தாலி கட்டிய மனைவியைத்தானே, அணைத்தேன்? இதில் வெட்கப்பட என்ன இருக்கிறது?'' என்று கேட்டான் அவனும் கடுமையான குரலிலேயே.''

''தாலி கட்டிய மனைவியா? அதை, ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு விட்டுப் போகு முன்பு நினைத்திருக்க வேண்டும்! அன்று அதை மறந்து சென்றவருக்கு, இப்போது என்ன திடீர் மோகம்?'' என்றாள் அவள் ஏளனமாக.

அவளது பேச்சின் நியாயத்தை மறுக்க முடியாமல் ''ஏன், சற்று முன் உனக்கும் இதெல்லாம் நினைவிருந்த மாதிரி தெரியவில்லையே! பார்க்கும்போதெல்லாம், போய்விடு, போய்விடு என்றவளுக்கும்தானே,

திடீர் மோகம் வந்தது?'' என்று பதிலுக்கு கேட்டான் கணவன்.

ஆனால், முகம் கன்றிச் சிவக்க, அவள் இறுகக் கண் மூடி நின்ற விதத்தில் உருகி, ''சாரிடா! சாரி. சாரி! சொல்லியிருக்கக் கூடாது! மன்னித்துவிடு!'' என்று ஒரே எட்டில் அவளை அணுகி அணைத்துத் தட்டிக் கொடுத்தான்.

சமாளித்துக் கொள்ளச் சிரமப்பட்டாலும், பெரு முயற்சி செய்து நிமிர்ந்தவள், தன்னை விடுவித்துக் கொண்டு, விலகிப் போனாள்.

தள்ளிப்போய் நின்றுகொண்டு ''தப்புதான்! நான் செய்ததும் பெரிய தப்புதான்! ம...மன்னித்துவிடுங்கள். இப்போது... தயவு பண்ணி, இந்த நகைகளை எடுத்துக் கொண்டு, உடனே இங்கிருந்து போய்விடுங்கள்!'' என்று கம்மிய குரலில், கண் கலங்க, ஆனால் பிடிவாதமாகச் சொல்லி முடித்தாள்.

''திலோ, நான் சொல்வதைக் கொஞ்சம் பொறுமையாகக் கேள். இதில் யார் மேலும் தப்பு கிடையாது...''

''இல்லை தப்புதான். எல்லா விஷயமும் தெரிந்திருந்தும், நான்... நான் வசமிழந்து போனது, ரொம்பவே... பெரிய பிழைதான். மன்னித்து விட்டுப் போய்... இதையெல்லாம் எடுத்துக் கொண்டு போய்விடுங்கள்! உங்களைக் கையெடுத்துக் கும்பிடுகிறேன். தயவு பண்ணி...''

''என்ன விஷயம் தெரியும் உனக்கு? நான் என்ன சொல்கிறேன் என்று கொஞ்சமும் கவனியாமல், போய் விடு, போய்விடு என்றால் எப்படி, திலோ? நீயோ? நானோ



மன்னிப்பதற்குரிய எந்தத் தப்பையும் இப்போது செய்யவில்லை... என்ன?'' தன் எண்ணத்தை விளக்கிக் கொண்டு இருந்த குணசேகரன் மனைவியின் பார்வை மாறிய விதம் கண்டு, என்னவென்று வினவினான்.

ஒரு பெரிய மூச்சை எடுத்து விட்டுவிட்டு நிமிர்ந்து நின்று, திலோத்தமா சொன்னாள். ''இரண்டு பெண்களுடன் காதல் நாடகம் நடத்துவது சரி என்றே படலாம்! ஆனால் இன்னொரு பெண்ணை மணக்க இருப்பவரை... மணக்க இருப்பவருடன் நான்... இழைந்தது, பெரிய தப்பாகவே... அது குற்றமே என்பதுதான் என் அபிப்பிராயம்!''

லேசாக இமை இடுங்க அவளைப் பார்த்தான் குணசேகரன் ''நான் இன்னொரு பெண்ணை மணக்கப் போவதாக உனக்கு யார் சொன்னது?'' என்று கேட்டான்.

பார்வை விலக, அவள் சொன்னாள். ''உண்மையை யார் சொன்னால் என்ன?''

''சொல்வது உண்மை என்றால், யார் சொன்னார்கள் என்று சொல்ல வேண்டியதுதானே? அதை மறைப்பானேன்?'' என்றான் அவன் ஆத்திரத்துடன்.

அவனுக்கு ஆத்திரம்தான். ரொம்பவே!

இந்த விஷயத்தை, யார் மூட்டை கட்டிக் கொண்டு வந்து, திலோவிடம் சொல்லியிருக்கக் கூடும் என்று அவனுள் ஓர் ஊகம் இருந்தது!

டாக்டர் சிதம்பரத்திடம் மணவிலக்கு பற்றிச் சொல்லியிருந்தானே தவிர, மறுமணம் என்பது பற்றி, அவன் எதுவும் சொல்லவில்லை. அவர் ஏதேனும் ஊகித்திருக்

கலாம் என்றாலும், அவரது அன்புக்குரிய 'திலோக்குட்டி' யிடம் சொல்லி வருத்தமாட்டார்.

அத்தோடு, சற்றுமுன் சாதனா பேசிய விதத்தை எண்ணிப் பார்க்கும்போது, அவனுக்கு அவள் மீது, கடும் சீற்றம் உண்டாயிற்று!

என்ன தைரியம் இருந்தால், அவள் இங்கே வந்து, திலோத்தமாவிடம் இப்படிப் பேசியிருப்பாள்?

அந்த நேரம் திலோவுக்கு எவ்வளவு வேதனையாக இருந்திருக்கும் என்று இருந்தபோதும், மனைவி மீதும் அவனுக்கு கோபம்! யார் வந்து, என்ன சொன்னாலும் நம்பிவிடுவதா?

அத்தோடு தன் பெயரை வெளியிட வேண்டாம் என்றும் சாதனா கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். மற்றபடி, அவள் பெயரை திலோ மறைக்கத் தேவை யில்லை!

திலோத்தமா பேசாமலே நிற்கவும் ''எந்தப் பெண் ணிடமும் மணப்பதாக நான் வாக்குறுதி கொடுத்தது இல்லை!'' என்றான் குணசேகரன்.

கசந்த முறுவல் ஒன்று திலோத்தமையின் உதடுகளில் தோன்றி, உடனே மறைந்தது. ''தொழிலில் ஜெயிக்க வேண்டும் என்றால், நிறையப் பொய் சொல்ல நேரும்! அப்படிச் பொய் சொல்லி சம்பாதிக்கும் தேவை நமக்கு இல்லைம்மா. இருப்பதே, இன்னும் பத்துத் தலை முறைக்கு காணும் என்று என் தந்தை சொல்லுவார். முயற்சி எடுக்கப் பிடிக்காத சோம்பேறித் தனத்துக்குச் சப்பைக்கட்டுக் கட்டுகிறார் என்று நினைப்பேன். ஆனால், அவர் சொன்னது மெய்தானோ என்று இப்போது



தோன்றுகிறது! பொய் சொல்லும் கலையில் வல்லவர் ஆகித்தான், பணக்காரர் ஆனீர்கள் போல!'' என்றாள் அதே கசப்பும் கூடவே வெறுப்புமாக.

''அதாவது, இன்னோரன்ன வார்த்தைகளால் நான் பொய் சொல்கிறேன் என்கிறாய்.''

''புரிந்தால் சரி!'' என்ற ஒரு பெருமூச்சுடன் திரும் பினாள் அவள். ''செல்லும்போது, இந்த நகைகளை எடுத்துச் சென்று விடுங்கள். அந்தப் பெண்ணுக்கு நகைகள் செய்யப் பயன்படக்கூடும்'' என்று வெளியே செல்ல ஓர் எட்டு எடுத்து வைத்தவள், சற்றுத் தயங்கி நின்றாள்.

மறுபடியும் அறையினுள் வந்து, கையில் கணவன் அணிவித்த 'பிரேஸ்லெட்'க் கழற்றி, நகைக் குவியலின் மீது வைத்துவிட்டுத் திரும்பினாள். அவளது வழியை மறைத்துக் கொண்டு, குணசேகரன் நின்றான்.

''யாரோ ஒருத்தி வந்து, ஏதோ சொன்னால், அதை நம்பிவிடுவாயா? என் பேச்சுக்கு மதிப்பே கிடையாதா?''

''அவள் மட்டும் சொல்லவில்லை'' என்றாள் அவள் அலுப்போடு ''செல்வம் அண்ணனைப் பற்றிச் சொல்வ தற்காக, நேற்று நளினி இங்கே வந்திருந்தாள். செல்வத் துக்காக இவ்வளவு செய்கிறவரும், திலோவும் சேர்ந்து வாழ வழியில்லையே, விவாகரத்து வேண்டி வந்திருக்கிறாரே என்று தந்தை ரொம்பவும் வருத்தப்பட்டதாகக் கூறினாள்'' என்றாள் தரையில் எதையோ பார்த்தபடி.

தடைப்பட்ட குரலும், தாழ்த்திய இமைகளும் சோர்வும் சொன்ன கதை புரியத் தானாக எழுந்த கரங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு, கவனமாக வார்த்தைகளைத்

தேர்ந்தெடுத்து அவன் சொன்னான். ''ஐந்தாண்டுப் பிரிவும், அதற்கு முன் இங்கே அனுபவித்ததுமாக நாம் முழுதாகப் பிரிந்துவிட்டால் நல்லதோ என்று நான் நினைத்தது நிஜம்தான், திலோ! ஆனால், அது மறுமணத் துக்காக மட்டும் என்று சொல்ல முடியாது. அதுவும் இங்கே வந்து உன்னைப் பார்த்த பிறகு...''

சட்டெனக் குறுக்கிட்டாள் திலோத்தமா, ''தெரியும்! அலை மேல் அலையாக, அடுக்கடுக்காய் இங்கே எனக்கு நேர்ந்த பிரச்சினைகளின் நடுவில், உங்கள் கண்ணியம் மிக்க கனவான்தனமும், இளகிய மனமும் தலை தூக்கி, வந்த நோக்கத்தை என்னிடம் சொல்லக்கூட விடாமல் தயங்கித் திண்டாட வைத்துவிட்டன! அதுதானே? கேள்விப்பட்டேன். கவலைப்படாதீர்கள். இப்போதுதான் என் பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்து விட்டனவே. அண்ணன் திருந்திவிட்டான். அம்மா குணமாகி விட் டார்கள். என் வாழ்க்கை அலையே இல்லாத, அலை தோன்றக்கூட வழியில்லாத தொட்டித் தண்ணீர் ஆகி விட்டது! அத்தோடு சொல்லத் தேவையும் இல்லாமல் இப்போது எனக்கு விஷயமும் தெரிந்தும் விட்டது. எங்கெங்கே கையெழுத்துப்போட வேண்டுமோ, சொல்லுங்கள். ஒன்று விடாமல், எல்....லா..... இடத் திலும் கையெழுத்துப் போட்டுத் தருகிறேன். நீங்கள் நிம் மதியாகப் போய் உங்கள் சாதனாவை மணந்து...'' கொள்ள லாம் என்று முடிக்க நினைத்து, அவன் குறுக்கிட இடம் கொடாது பேசிக்கொண்டே போனவள், அவளது தோளைப் பற்றி, அவன் பலமாக உலுக்கவும் திகைத்து விழித்தாள்.

தோளைப் பற்றியிருந்த கைகளை அகற்றாமலே, ''பைத்தியமா, உனக்கு? நான் என்ன சொல்ல வருகிறேன்



என்றுகூடக் கேளாமல்...'' என்று கோபமாகத் தொடங் கியவன், அவளது திகைத்த பார்வையில் இளகி, மெல்ல அவள் தலையைத் தன் தோளில் சாய்த்து அழுத்தி ''ஒன்று சொன்னால், சொல்வது என்னவென்றுதான், கொஞ்சம் கேளேன், திலோ! மணவிலக்கு என்ற எண்ணத்துக்கு சாதனாவுடைய தந்தையின் பேச்சு காரணம் என்றாலும், நான் அவளை மணப்பதாகச் சொன்னதே கிடையாது!'' என்றான் அவன்.

அவனிடம் இருந்து விலகப் பலவீனமாக முயன்றபடி, ''பின்னே எந்தத் தைரியத்தில் அவள் அப்படிச் சொல்ல முடியும்?'' என்று கண்ணீர்க் குரலில் கேட்டாள் திலோத்தமா.

''சொல்கிறேன். புரிந்து கொள்ளும் விருப்பத்தோடு கேள். சொல்கிறேன். எந்த முடிவையும் முதலிலேயே எடுக்காமல், எடுத்திருந்த முடிவை ஒதுக்கிவிட்டு கேட்டால்...'' என்று குணசேகரன் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே ''அம்மா, சின்னம்மா!'' என்று பதட் டத்துடன் அழைத்தவாறு, யாரோ வேகமாக வரும் சத்தம் கேட்டது.

''இங்கே, சின்ன அறையில் இருக்கிறேன், வீரய்யா என்ன விஷயம்?'' என்று கேட்டபடி, அறை வாயிலை நோக்கித் திலோத்தமா செல்ல, குணசேகரனும் உடன் நடந்தான்.

வீட்டில் மீதமிருந்த முதிய வேலையாட்களில் ஒருவன்.

குணசேகரனைக் கண்டதும், ''வணக்கமுங்கய்யா'' என்றவன் உடனே தன் எஜமானியைப் பார்த்து ''அம்மா,

சின்னக் குழந்தை அய்யா இங்கே வந்தாருங்களா?'' என்று கலக்கத்துடன் கேட்டான்.

பக்கத்தில் இருந்தவனிடம் பார்வை பாய்ந்து மீள, ஒரு வினாடி தயங்கிவிட்டு, ''இல்லையே, வீரா அவன் சொக்கனோடு இருக்கிறான்'' என்றாள் திலோத்மா.

''அவனைத்தான் பார்த்துக்கிடச் சொன்னீங்களாம்? ஆனாக்க, அவன் கிட்டே குழந்தை இல்லம்மா. அந்தப் பக்கம், பின்னாலே, முன்னாலே வீடு முச்சுடு தேடியாச்சுது! புள்ளையைக் காணோமுங்கம்மா. சொக்கனும் அவன் வீட்டுக்காரியுமா, குளந்தைய காணோமின்னு உக்காந்து ஒப்பாரி வச்சுக்கிட்டு, இருக்கிறாங்க, நான்தான் ஒருவேளை சொக்கனை ஏமாத்திட்டுச் சின்னவுக, அம்மாவைத் தேடி இங்கிட்டு ஓடியாந்திருப்பாரோன்னு தேட வந்தேம்மா!'' என்று வீரய்யா கவலையுடன் கூறினான்.

'அந்தக் குழந்தைக்காகவேனும்...'' என்று டாக்டர் சொன்னதும், அவரது புரியாத பார்வையும் நினைவு வர, குணசேகரனின் மனம் படபடத்தது.

''இல்லையே... இங்கே வரவே இல்லை. அங்கே பள்ளிப் பக்கம்...'' என்று கவலையுடன் திலோத்தமா ஏதோ சொல்லுகையில், குறுக்கிட்டு ''என்ன குழந்தை? இங்கே யார் குழந்தை, திலோ?'' என்று அழுத்தமான குரலில் விசாரித்தான்.

உதட்டைக் கடித்துக் கொண்டு திலோத்தமா பேசாது நிற்க, ''அய்யோ, நம்ம குழந்தைதாங்கய்யா! உங்க புள்ளை! சின்ன ராசா! அய்யோ, எங்கேயும் எங்க சின்னய்யாவைக் காணலியே!'' என்று புலம்பினான் வீரய்யன்.



பள்ளியில் உரிமையோடு, திலோத்தமையின் மடியில் ஏறி, சொகுசாக அமர்ந்திருந்த சிறுவன்! அவனுடைய மகன்! அவன் பிள்ளை!

''அங்கே பள்ளிக்கூடத்துப் பக்கம் போய், இன்னொரு தரம் தேடு, வீரய்யா... நானும் இதோ வருகிறேன்'' என்று அவனை அனுப்பிவிட்டு, மனைவியின்புறம் ஆவேசத்துடன் திரும்பினான் குணசேகரன்.

''உனக்கு என்ன தைரியம் இருந்தால், மகனைப் பற்றி என்னிடம் சொல்லாமல் மறைத்திருப்பாய்? உன்னை என்ன செய்தால் தகும்?'' என்று கடும் சீற்றத்துடன் வினவினான்.

# 11



தனக்கு ஒரு மகன் இருக்கிறான் என்று தெரிந்ததும், மனைவி மேல் மகாக் கோபம் வந்தது குணசேகரனுக்கு.

கண் மண் தெரியாத ஆவேசம்.

கோபமிகுதியில் ஏதாவது செய்து விடுவோமோ என்று கைகளை இறுக மூடிக் கொண்டவனுக்கு ஏதேதோ நினைவு வந்தது.

முதல்நாள் கூட, அவனைக் கண்டதும், உள்ளே ஓடி போய்விட்டு வந்தாளே! மகனை மறைக்கத்தானா?

பிறகும், போய்விடு போய்விடு என்று விரட்டிய தெல்லாம் கூட, அவன் கண்ணில் படாமல், மகனை மறைப்பதற்காகத்தான் இருக்க வேண்டும்!

ஆனால், அவன் மகனை இரண்டு தரம் பார்த்திருக் கிறான். இருமுறையும் அவள் அறியாமலே!

அன்று சிரிப்புச் சத்தம் கேட்டு மறைவாக நின்று எட்டிப் பார்த்தபோது ஒருதரம்.

செல்வத்தை அடித்துப் போட்ட அன்று, கூட இரு பிள்ளைகளைக் கூட்டி வந்து, அவனைப் பார்த்து வெட்கச் சிரிப்பு சிரித்துவிட்டுப் போனபோது ஒரு தடவை!

கையை நீட்டி, அவனது கன்னத்தை வருடியதை நினைக்கையில், குணசேகரனுக்கு இப்போதும் உடல் சிலிர்த்தது!

அதுபோன்ற எத்தனை தருணங்கள் வாழ்க்கையில் நேர்ந்திருக்கக் கூடும்?

தானாகக் கெடுத்தது பெரும் பகுதி என்றால், மீதியை இவளும் அல்லவா தடுத்துவிட்டாள்!

மகனை அறியாது போனதில் தன் பிழையும் இருப் பதை உணர்ந்ததும், மனைவி மீது பொங்கிய சினம் அவனுக்குக் கொஞ்சம் மட்டுப்பட்டது.

அத்தோடு, இது சீற்றத்தைக் காட்டும் நேரம் அல்ல! முதலில் மகனைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்!

அவன் அறிந்த வரையில், சொக்கன், அவனுடைய மனைவி, வீரய்யன் மூவருமே, வயதாகியிருந்தபோதும், விசுவாசமான, கெட்டிக்கார வேலையாட்கள்! அவர்கள், அரைகுறையாகத் தேடிவிட்டு வந்து சொல்ல மாட் டார்கள்!



பின்னே, பிள்ளை எங்கே?

குணசேகரன் மனதில் பலவாறான எண்ணங்கள் ஓடியதெல்லாம் சேர்த்துச் சில வினாடிகளே இருக்கும். வேகமாகச் சென்ற வீரய்யன், இன்னும் பள்ளிக்குப் பாதி தூரம் கூடப் போகவில்லை!

ஒருவேளை... அவன் இப்படித்தான் எங்கேனும் ஒளிந்திருந்து விளையாட்டுக் காண்பிப்பானா என்று கேட்பதற்காக திலோத்தமாவைப் பார்த்தால், அவனது சீற்றத்தைச் சற்றும் பொருட்படுத்தாமல், நெற்றிப் பொட்டை அழுத்தியபடி, எதையோ தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தாள்.

எதையோ என்ன? அவனைப் போலவே, மகன் எங்கே என்றுதான் இருக்கும்.

கண்டபடி வளர்ந்து, காடாக மண்டிக் கிடந்த செடி கொடிகளும் புதர்களும் நினைவு வர, அவனுக்கு மனம் பதைத்தது! அவைகளுக்குள் என்ன மாதிரி பூச்சி பொட்டுகள் இருக்கின்றனவோ? அவற்றில் ஏதேனும் கடித்திருக்குமோ என்று நினைக்கக்கூட அவனால் முடியவில்லை!

அப்படி ஏதும் இராது என்று தனக்குள் உருப்போட்ட படி, ''அவன்...'' என்று குணசேகரன் தொடங்குமுன் ''ஜீவன், ஜீவானந்தன்'' என்றாள் திலோத்தமா.

அவளது ஜீவனுக்கு ஆனந்தம் தருகிறவன் என்று பெயர் வைத்தாள்போல, என்று தன் போக்கில் நினைத்த படி ''அங்கே புதர் மண்டிக் கிடக்கிறதே...'' என்று அவன் கவலையோடு கேட்டு முடிக்கும் முன் மறுபடியும்

''அங்கெல்லாம்... அவன் போகமாட்டான்'' என்று பதில் தந்தாள் அவள்.

மேலே அவன் பேசுமுன் ''வேலையாட்கள் எல்லா இடமும் தேடியிருப்பார்கள்தான். ஆனாலும், நீங்கள் கொஞ்சம் மாடிப்பக்கம் போய்த் தேடுகிறீர்களா? அலமாரி மாதிரி இடங்களில் ஒளிய அவனுக்குப் பிடிக்கும். ஆனால் காற்றில்லாமல் போய்விடும் என்பதால் கதவை முழுதாக மூடக்கூடாது என்று கற்றுக் கொடுத் திருக்கிறேன்... நான் கீழே பார்க்கிறேன்'' என்று வேகமாகச் சென்றாள்.

மறுபேச்சின்றி குணசேகரன் மாடிக்கு ஓடினான்.

பழகிய இடமே என்பதால், விரைவாகத் தேட முடிந்தது.

சற்று வசதியாக, முன்போல அதிகமான எண்ணிக் கையில் பீரோக்கள் இல்லை!

சுவரோடு பதிந்திருந்த பல அலமாரிகள் காலியாக, வெளிப்புறம் பூட்டப்பட்டு, சாவியுடனேயே இருந்தன.

எதற்கும்... என்று எல்லாவற்றையும் கதவு மறைவு, கட்டில்களின் கீழே என்று மற்ற இடங்களிலும் தேடிவிட்டு ''ஜீவா, ஜீவா'' என்ற அழைப்பு. அடிபட்ட மானின் கதறலாக ஒலிப்பதைக் கேட்டபடி தோல்வி யுடன் இறங்கிப் போனால், சோர்ந்து, ஓய்ந்து, திலோத்த மாவும் அங்கே வந்து சேர்ந்திருந்தாள்.

அவனும் வெறும் கையுடன் வரவும், ''குணா, என் கண்மணியை எங்கேயும் காணோமே!'' என்றாள் குரல் நடுங்க.



என் கண்மணியும் கூடத்தான் என்று எண்ணிய போதும் அதைச் சொல்லாமல், ''பயப்படாதே, பந்தை உருட்டிபடி பட்டர்ஃப்ளையை விரட்டியபடி, கேட்டுக்கு வெளியே போனானோ, என்னவோ? அங்கேயும் போய்ப் பார்க்கலாம்'' என்றான் அவன்.

மறுப்பாகத் தலையை வேகமாக ஆட்டினாள் அவள் ''மாட்டான். என்னிடம் கேளாமல், அவன் எங்கேயும் போக மாட்டானே... அவனுக்கு என்னமோ... குணா, எனக்குப் பயமாக இருக்கிறதே, குணா! நல்லவேளை மூடிய கிணறுதான். ஆனால்... காணோமே!'' என்று வெடவெடத்தபடி, கணவனோடு ஒண்டினாள் திலோத் தமா.

மனைவியின் உடம்பு முழுவதுமே பதறுவதை உணர்ந்து, சட்டென அவளை அணைத்தபோது, பிடியில் அகப்பட்ட புறாக் குஞ்சு போல அவளது நெஞ்சு படபடப்பதை உணர்ந்தான் குணசேகரன்.

இவளிடம் எப்படி கோபப்படுவது?

கோபம் எல்லாம், எங்கள் கண்ணப்பன் கிடைத்த பிறகுதான்! ஆனால், அவன் கிடைப்பானா?

கிடைப்பான். கிடைப்பான் என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டு ''இங்கிருந்து வெளியே செல்ல வேறு வழி இருக்கிறதா?'' என்று விசாரித்தான் குண சேகரன்.

''இ... இல்லை. கார் வந்து செல்லும்படியாக பெரிய கேட் மட்டும் தான்'' என்றவள், நெற்றியில் தட்டி, ''இருக் கிறது. இங்கே அகலமான வழி, நீளமானதும் கூட. முழுவதும் சுத்தம் செய்ய முடியாமல், பள்ளிக் குழந்தை

களுக்காக, அந்த பக்கம் ஒரு சின்ன கேட் போட்டு வைத்திருக்கிறேன். ஆனால் பள்ளி முடிந்து பிள்ளைகள் போனதும், பூட்டி விடுவோம். பூட்டியாயிற்று. அதில் ஏறி... மறுபுறம் இறங்...க ஊகூம், மாட்டான். ஆனாலும்...'' என்றவள், ''சுந்தரம்!'' என்று இன்னொரு பணியாளை, உரத்த குரலில் கூப்பிட்டாள்.

அந்த குரலுக்கு அவசியம் இல்லாமல், எல்லோருமே, கண்ணீரும் கலக்கமுமாக, அருகில்தான் நின்று கொண் டிருந்தனர்.

ஓடி வந்த சுந்தரம் ''இதோம்மா, நானு அந்தப் பக்கமாக போய்ப் பார்க்கிறேம்மா'' என்று கிளம்பினான்.

''எதற்கும் சற்று தூரம் வரைபோய்ப் பார்த்துவிட்டு வா. சைக்கிளை எடுத்துப்போ'' என்று அனுப்பினாலும், அவள் குரலில் நம்பிக்கை இருக்கவில்லை.

''ஜீவா அப்படிப் போக மாட்டானே, குணா! துறு துறுத்தான். ஆனால், சொன்னதை மீறமாட்டான். வெளியே போகக் கூடாது என்று சொல்லியிருக்கிறேனே!'' என்றாள் வேதனைக் குரலில், ''ஆனால் எங்கேயும் காணோமே!'' என்றாள் மறுபடியும்.

திடீரென்று பிள்ளை மாயமாக மாட்டான். இதில் வேறு ஏதோ இருக்கிறது!

அதையே தானும் நினைத்தவள் போல, ''ஜீவனை யாராவது க... கடத்திப் போவது என்றாலும், காரணம் இல்லையே! இங்கே, இப்போது பணம் கிடையாது என்று எல்லோருக்கும் தெரியுமே!'' என்று முனகினாள் திலோத் தமா.



குணசேகரன் அதிர்ந்தான்.

அவனிடம் பணம் இருப்பதை அறிந்த யாராவது... ஆனால், இங்கே அவன் புதியவன். அவனைப் பற்றி யாருக்குத் தெரியக்கூடும்?

யோசித்தவாறு ''நேற்று, இன்று, இங்கே வேறு யாரும் வந்தார்களா?'' என்று விசாரித்தான்.

''வேறு யாரும்... நேற்று நளினி, இன்று திருமண அழைப்புக் கொடுக்க, அப்பாவுடைய பழைய நண்பர் ஒருவர், அப்புறம் செல்வம் எப்படி இருக்கிறான் என்று கேட்டு, அண்ணனுடைய சினேகிதர்கள் இரண்டு பேர், பள்ளிக் குழந்தை ஒரு சிறுமியுடைய தாயார்... அவ்வளவு தான் வேறு யாரும் இல்லை!''

''அவர்களில் யாருடனுடன் ஜீவன்...''

''ஊகூம். போக மாட்டான். அத்தோடு எல்லோரும் விடை பெற்று சென்ற பிறகும், குழந்தை என்னோடு இருந்தான். எல்லோருமே மதியத்துக்கு முன்னே வந்தவர்கள். ஜீவாக் குட்டிக்கு மதிய உணவு கொடுத்து, மூன்று மணிக்கு மேல் பழச்சாறும் கொடுத்துத்தான் சொக்கனிடம் பார்த்துக் கொள்ளச் சொல்லி, அனுப்பி னேன்.''

மனைவியின் கன்றிக் கலங்கிய முகம், அப்படி அனுப்பியதின் காரணத்தைத் தெரிவித்தது. அவன் வரும் நேரம், மகனைப் பார்த்துவிடக்கூடாது என்று, வீட்டி லிருந்து அனுப்பியிருக்கிறாள்.

ஆத்திரம்தான்! ஆனால், சும்மாவே மகனைக் காணா மல் தவித்துக் கொண்டிருப்பவளை என்ன சொல்வது?

சொக்கனை அழைத்து விசாரித்தான்.

''சின்னம்மா சொன்னாப்புலதான்யா, பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்திலே, புள்ளைங்க வெளையாடன்னு சுத்தம் பண்ணி வைச்சிருக்கிற தோட்டத்திலதான்யா, வச்சு வெளாட்டுக் காட்டிக்கிட்டிருந்தேன். ஊஞ்சலு, ஓடிப் பிடிச்சு, ஒளிஞ்சி பிடிச்சு, ஓரோரு ஆட்டமா, ஆடிக்கிட்டு இருந்தோம்யா. திடீருன்னு, பொத்துன கண்ணைச் சின்னவரு தொறக்கவே சொல்லலை. கூப்பிட்டாக்க, பதிலும் கொடுக்கலை. கொஞ்ச நேரம் கெஞ்சிட்டு, நானாவே கண்ணைத் தொறந்து பாத்தா... அய்யோ, என் ராசா, எங்கய்யாவைக் காணலியோ...'' என்று அழுதான் அவன்.

கடத்தல்தான். அதுவும் அந்த நேரத்தில்தான் என்று, கணவன் மனைவி இருவருக்கும் தெளிவுபட்டுப் போயிற்று.

சிறு பிள்ளைகளைக் கடத்திக் கைகாலை உடைத்து பிச்சை எடுக்க வைக்கும் கும்பலைப் பற்றி எண்ணிப் பெற்றவள் கலங்க, தந்தை வேறு நினைத்தான்.

''முதலில் போலீசில்...'' என்று திரும்பியவளைப் ''பொறு. அவர்கள் வந்து கேட்கும்போது, தெளிவாகச் சொல்ல, முதலில் நாமும் தெளிவுபடுத்திக் கொள்வோம்'' என்று நிறுத்திவிட்டு ''அங்கே பெரிய மரங்கள், புதர்கள் உண்டா?'' என்று விசாரித்தான்.

''உண்டு'' என்றாள் அவள் சுருக்கமாக.

அது பற்றி அவன் மேலும் விவரம் கேட்கவும் ''ஆனால், பள்ளிக் குழந்தைகள் ஓடியாடி விளையாடுவதற்காகச் சுத்தமாகப் பராமரித்து வைத்திருப்பது, பள்ளியை ஒட்டித் தனி அடைப்பாக இருக்கும்.''



''செல்வத்துடைய நண்பர்கள் எப்படிப்பட்டவர்கள்?'' என்று அவன் திடுமெனக் கேட்கவும் திலோத்தமையின் விழிகள் அகன்றன.

''அவர்களா? இருக்காது., குணா...'' என்று யோசித்து அவர்களை நினைவுக்குக் கொண்டு வந்து, சொன்னாள். ''சற்று நரங்கலாக... கொஞ்சம் கீழ்த் தட்டு ஆட்கள்... அவர்களோடு சேர்ந்துதான், அண்ணன் குடிக்கத் தொடங்கினான் என்று அம்மா சொல்வதுண்டு என்றாலும் ஜீவாவைக் கடத்திப் போகிற அளவு... ஊகும். என்னைப் பார்த்தால், எழுந்து நின்று 'சிஸ்டர்' என்று அழைத்து, மிகவும் மரியாதையாகவே நடந்து கொள்வார்கள்! அண்ணன் எப்போது வருவான் என்று கேட்டுவிட்டு, அப்போதே போய்விட்டார்கள். ஊகூம். அவர்களாக இராது, குணா'' என்றாள் அவள்.

''ஜீவானந்தனுடைய தந்தையிடம் இப்போது பணம் இருக்கிறது என்று தெரிந்தவர்கள், இந்த பகுதியில், அவர்கள் மட்டும்தான். அவர்கள் வீட்டை விட்டு வெளியே செல்வதை நீ... யாராவது பார்த்தீர்களா?''

எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்தார்களே தவிர, செல்வத்துடைய இரு நண்பர்களும் வெளியே சென்றதை யாரும் பார்த்ததாகச் சொல்லவில்லை.

சந்தேகம் நிச்சயப்பட்டுவிட ''அவர்கள் போகவில்லை'' என்றான் குணசேகரன். ''இங்கேயே அந்தத் தோட்டத்தில் மரத்தின் மேலேயோ, புதர்களின் மறைவிலோ ஒளிந்திருந்துவிட்டு, சமயம் பார்த்து அவனைக்

கடத்தியிருக்கிறார்கள். பள்ளிக் கேட் வழியாகத்தான் வெளியே சென்றிருக்க வேண்டும்.''

''ஐயோ! ஆனால்... இன்னமும் என்னால் நம்ப முடியவில்லையே குணா! ஆனால், இது உண்மை என்றால், என் கண்மணியைக் கடத்துவதற்கான வாய்ப்பை நானே கொடுத்தேனா?'' என்று தவித்தாள் திலோத்தமா.

''ஷ்! விடு, திலோ. அவர்கள் ஜீவனைக் கடத்துவதற் கென்று திட்டம் போட்டு வந்தவர்கள். சரியான சமயத்தில் செயல்பட எண்ணி, இங்கே பதுங்கியும் இருந்தார்கள். எப்படியும் திட்டத்தை நிறைவேற்றித்தான் இருப்பார்கள். கொஞ்சம் முன்னதாக நடத்தி விட்டார்கள். அவ்வளவுதான். இப்போது அது முக்கியம் அல்ல. நல்லபடியாக நம் ஜீவனை எப்படிக் காப்பாற்றுவது என்று, அதைத்தான் யோசிக்க வேண்டும். இங்கே யாராவது உயர் அதிகாரி, பதவியில் போலீசில் யாரையாவது தெரியுமா?'' என்று கேட்டான் குணசேகரன்.

''அ... அதிகாரியென்று... எனக்குத் தெரியாதே. குணா, சும்மா போலீசில் சொன்னால் கண்டுபிடித்து விட மாட்டார்களா?'' என்று கவலையுடன் கேட்டாள் அவள்.

உடனேயே அவளே, ''அவர்கள் இருவரின் பெயர் தெரியும். மணி, சாமி என்று. ஆனால், அது முழுப்பெயரா, அவர்களின் இருப்பிடம் எங்கே, என்ன என்று ஒன்றும் தெரியாதே! வந்தால் குசுகுசுவென்று செல்வத்திடம் பேசி, அவனைக் கூட்டிப் போய்விடுவார்கள்! பணத்தை எடுத்துக் கொண்டு போகிறவன், அப்புறம் முழுப் போதையில் வருவான்... மற்றபடி... பாவிகள்! இவர்கள்



உருப்படுவார்களா? இவர்களை என்ன விவரம் சொல்லிப் போலீசில் புகார் கொடுப்பது? ஆனால் அவர்களாகத்தான் இருக்குமா, குணா? இன்னமும் என்னால் நம்ப முடிய வில்லையே!'' என்று அவள் பரிதவித்துக் கொண்டிருக்கும் போதே, அவள் வீட்டு டெலிபோன் மணி அடித்தது!

''அவர்களாகத்தான் இருக்கும்'' என்றான் குணசேகரன்.

விறைத்துப் போய் நின்றவளைக் கைப்பிடியில் அழைத்துச் சென்று, எடுத்துப் பேசு என்று சைகை செய்தான்.

''நம் சந்தேகம் தெரியாத மாதிரியே பேசு! அத்தோடு பிள்ளையின் சுகம் தெரியாமல், எதுவும் தர முடியாது என்றும் கட்டாயம் சொல்லு!''

டெலிபோன் ரிசீவர் இவ்வளவு கனக்குமா?

அதைத் தூக்க முடியாமல் தூக்கி''ஹலோ...'' என்றாள் திலோத்தமாவும் குரலே எழும்பவில்லை.

''என்ன, சத்தத்தையே காணோம்? மகனைக் காண வில்லை என்று வேலைக்காரன் வந்து சொல்லிவிட்டானா? அப்புறம் ஏன் போனை எடுக்க, இவ்வளவு நேரம்? பிள்ளையைக் கடத்திப் போனவன், என்ன கேட்கப் போகிறானோ... சீக்கிரமாகக் கொடுத்துப் பிள்ளையை மீட்க வேண்டுமே என்று, துடித்துக் கொண்டு வந்து எடுக்க வேண்டாம்?'' என்று அதட்டியது ஒரு கும்மல் குரல்.

குரலைக் கண்டுபிடிக்க முடியாமல், மாற்றி அல்லது ஏதோ துணி கொண்டு வாயை மறைத்துப் பேசியிருக்க வேண்டும் என்று திலோவால் ஊகிக்க முடிந்தது.

கணவன் சொன்னது நினைவு வர, ''ஏய், நீ யாராக இருந்தாலும் உனக்கு என்ன வேண்டுமோ, அதைக் கேட்டு வாங்கிக் கொண்டு அவனைப் பத்திரமாக என்னிடம் கொடுத்துவிடு! ஆனால், அவனது சுகம் தெரியாமல், எதுவும் ஒரு பைசா கூடத் தரமாட்டேன்'' என்றாள் பதற்றத்தை மறைக்க முயன்றபடி.

''பரவாயில்லையே, நேராக நீயே விஷயத்துக்கு வந்துவிட்டாயே, பாருங்க சிஸ்டர். உன் பிள்ளையை வைத்து, நாங்கள் என்ன செய்யப் போகிறோம்? கேட்கிற பணத்தைத் தந்துவிட்டால், பிள்ளையை விட்டுவிட்டு, நாங்கள் போய்க் கொண்டே இருப்போம்!''

''எ...எவ்வளவு?''

''ஐந்து... பத்து... இல்லை, ஒரு இருபத்தைந்து லட்சம், மொத்தமாகக் கொடுத்து விடேன்! ஏதோ வேறே தொழில் பண்ணி, நாங்களும் பிழைத்துப் போவோம்.''

''இருபத்தைந்து லட்சமா, கேட்கிறாய்? அடேயப்பா! அவ்வளவு பணம் என்னிடம் ஏது? என் நகைகள் எல்லாம் சேர்த்தாலும், மூன்று லட்சத்துக்கு மேல் வராதே! ப்ளீஸ் அதை வைத்துக் கொண்டு என் மகனை...''

''என்னது? நகையை எடுத்துக் கொள்ளணுமா? அப்புறம் அதை விற்கப்போய், நாங்கள் போலீசிலே மாட்டுவதற்கா? அதெல்லாம் முடியாது. சலவை நோட்டாகப் பணம்தான் வேணும். அத்தோடு, பணம் இல்லை என்று சொல்லாதே. உன் புருஷன் கிட்டே கேட்டு வாங்கிக் கொடு, அவனுக்கும் பிள்ளைதானே? தருவான்.''

கணவன் சொன்னது சரிதான் என்று தோன்ற, திலோத்தமா சுதாரித்தாள்.



மகனுக்காக இப்போதும் பயம்தான். ஆனாலும், சந்தேகம் இன்னமும் சரியாகத் தெளிய வேண்டியிருந்தது.

''அவர் என்னைப் பிரிந்து போய் ஐந்து ஆண்டுகள் ஆகிறது. இப்போது போய் அவரிடம் எப்படி நான் பணம் கேட்பேன்?'' என்று கவலை காட்டி கேட்டாள்.

''ஆ... ஆங், இந்த உடான்ஸ் நம்மகிட்ட விடாதே தாயி! மச்சினனுக்கு, அவ்வளவு செலவு பண்ணி, தனியாக வைத்து, ராஜவைத்தியம் பார்க்கிறான். சொந்த மகனுக்கு தரமாட்டானா? யாருகிட்ட கதை விடுகிறே? முதலிலே, அவனைப் பிடித்துப் பணத்தைத் தயார் பண்ணி வை! அதை எங்கே, எப்படித் தருகிறது என்று அப்புறம் சொல்கிறேன். அத்தோடு, இன்னும் ஒன்று! போலீஸ் கிட்டே மூச்சுவிடக்கூடாது! புகார் கிகார் என்று அவர்களிடம் போனால், அப்புறம், பிள்ளையை அடியோடு மறந்து விடணும்! ஜாக்கிரதை!'' என்ற எச்சரிக்கையோடு, போனை வைத்துவிட்டான் அவன்.

''ஐயோ, நீங்கள் சொன்னது, சரிதான் குணா! அவர்கள் செல்வண்ணாவோடு சுற்றியவர்களேதான். ஒருதரம், 'சிஸ்டர்' என்று வாயை விட்டான். எப்போதும் சொல்வது போல, அதே மாதிரியே இருந்தது! அண்ணனுக்கு, நீங்கள் சிகிச்சை அளிப்பது பற்றித் தெரிந்திருக்கிறது! அதனாலேயே, உங்களிடம் நிறையப் பணம் இருப்பதாகச் சொல்லுகிறான்! உங்களிடம் கேட்டு, வாங்கித் தரச் சொல்லுகிறான். நீங்கள் சொன்னதுபோல, அண்ணன், அவன் அவனது சிகிச்சை முறை தொடர்பாக உங்கள் பணம் பற்றித் தெரிந்தவர்கள், அவர்கள்தானே? அத்தோடு 'நாங்கள்' 'நாங்கள்' என்று பன்மையிலேயே

பேசுகிறான். இங்கே வந்ததும் இரண்டு பேர். அந்த இரண்டு பேராகவே இருக்குமோ என்று, இப்போதும் எனக்கு தோன்றுகிறது'' என்று பேசிய விவரம் முழுவதும் சொன்னாள்.

தொடர்ந்து ஒரு வினாடி தயங்கி, ''ஒன்றுதான் எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது, குணா ஜீவனுக்கு அவர் களை அடையாளம் தெரியும். அடையாளம் காட்டக் கூடிய வயதும் கூட. அதற்காக... அவனை அவர்கள் எ... என்னமும் செய்து விடக்கூடாதே!'' என்றாள் மறுபடியும் குரல் நடுங்க.

குணசேகரனுக்கு முதலில் இருந்தே அதே பயம்தான் அதற்காகத்தான், மகனின் சுகம் பற்றிக் கடத்தல் காரர்களிடம் பேசச் சொன்னான். அவளும் சொன்னாள் தான். ஆனாலும், அவனது நெஞ்சுக்குள் அச்சம் குளிர் பரப்பிக் கொண்டேதான் இருந்தது.

இப்போது அவளுக்கும் அது தொற்றிக் கொண்டது.

பணத்தைக் கொடுத்தாலுமே, ஜீவானந்தனின் நலத்துக்கு உயிருக்கு என்ன உத்தரவாதம்?

''அதுதான், ஜீவனின் சுகம் தெரியாமல் பணம் கிடைக் காது என்று சொல்லியிருக்கிறாயே, பணத்துக்காகக் குற்றம் செய்கிறவர்கள். அந்தப் பணம் கிடைப்பதற்கா கவே, அவனை ஒன்றும் பண்ணாமல் நல்லபடியாக வைத் திருப்பார்கள்'' என்று மனைவிக்குச் சொல்வது போலத் தன்னையும் திடப்படுத்திக் கொண்டான், குணசேகரன்.

இனி அடுத்த முயற்சி என்ன?

மகனை மீட்பதற்காக இருபத்தைந்து லட்சம் பணத்தைக் கொடுப்பது, அப்படி ஒன்றும் பெரிய காரியமாக



குணசேகரனுக்குப் படவில்லை! உடனே எடுக்கக்கூடிய பணமாகக் கையில் அந்த அளவு இருக்காது என்றாலும், அவனது ஒரு சொல்லில் தருவதற்கு ஆட்கள் இருந் தார்கள்.

ஆனால், பணத்தைக் கொடுத்தாலும் பிள்ளையை உடனே ஒப்படைப்பார்களா?

துருப்புச் சீட்டாகப் பயன்படும் பிள்ளையை, ஒரு தரம் பணத்தை வாங்கிக் கொண்டு உடனே திருப்பித் தரு வார்களா? இதோ, அதோ என்று போக்குக் காட்டி, இயன்றவரை பறிக்க முயற்சிப்பார்களா?

பணத்தாசை ரொம்ப பொல்லாதது! அதிலும் பணத் துக்காகத் தப்பு செய்யத் துணிந்தவர்களை நம்பவும் முடியாது! அவர்களைத் திருப்திப்படுத்தவும் முடியாது.

ருசி கண்ட பூனை மாதிரி, இன்னும் இன்னும் என்று இது எங்கே போய் நிற்கும் என்று சொல்லவே முடியாது.

ருசி கண்ட பூனை!

குறுக்கும் நெடுக்குமாக நடந்தபடி கலக்கத்துடன் யோசித்துக் கொண்டிருந்த குணசேகரன், சட்டென நின்றான்.



# 12

இந்தக் கடத்தலே, ருசி கண்ட பூனையின் வேலை தான் அல்லவா?

செல்வத்தை குடிக்க வைத்து, அவனது பணத்தி லேயே தானும் தின்று, குடித்துக் கூடவே சில்லரையும் தேத்திப் பழகிறவர்களின் வேலை.

இவர்கள், அவ்வளவு இலகுவாக, ஒரே தரம் பணத்தை வாங்கிக் கொண்டு, ஜீவாவைத் தந்துவிடுவார்களா? குணசேகரனால் நம்ப முடியவில்லை.

பெற்றவர்களின் பாசத்தையும், பயத்தையும் பயன் படுத்தி, மேலும் மேலும் பிடுங்கத்தான் முயற்சிப்பார்கள்.

இந்த இழுப்பறி, எத்தனை நாட்கள் நடக்குமோ? இடையில் ஜீவாக்குட்டி என்ன ஆவான்?

பிள்ளைக்கு எந்தவித ஆபத்தும் நேர்ந்து விடாமல், இவர்களை எப்படி வெல்வது?

அமைதியற்று நடந்தபடி அவன் யோசித்தபோது, சோர்ந்து விழுந்து கிடந்த திலோத்தமாவும், அதையேதான் செய்து கொண்டிருந்தாள் போலும்.

மூளையைப் போட்டு கசக்கியதில், அவளுக்கு ஒன்று நினைவு வர ''இங்கே படிக்கிற ஒரு சிறுவனுடைய தாத்தா டிசி என்று சொல்லுவான். ஆனால் அவர் எந்த அளவுக்கு உதவியாக இருப்பார் என்று ஒன்றும் தெரியவில்லை... அத்தோடு, நாம் போலீசிடம் போனால்...'' என்ற அச்சத் தோடு உடல் சிலிர்த்தாள் அவள்.

''இப்படித் தரம் கெட்டவர்களோடு பழகி, தானும் கெட்டு, இப்போது இப்படி ஓர் ஆபத்தும், இந்த அண்ண னால் வந்துவிட்டதே!'' என்று தன்னை மீறிப் புலம்பினாள்.

''கரெக்ட்!'' என்றான் குணசேகரன். ''இப்படி ஓர் இடும்பைக் கொண்டு வந்தவன்தான், இதைத் தீர்க்கவும் வேண்டும்!''



''யார்...? அ... அண்ணனா? எ... என்ன சொல்லு கிறீர்கள், குணா? அண்ணனுக்கும், இதற்கும் என்ன சம்பந்த... ஓ, அண்ணனுக்கு அவர்களைப் பற்றித் தெரியும். அவனிடம் விலாசம் கேட்டுப் போலீசில் சொல்லிப் பிடித்துவிடலாம் என்கிறீர்களா? இல்லை யில்லை அவசரப்படாதீர்கள். குணா, போலீசுக்குப் போவது ஜீவாக்குட்டிக்கு ஆபத்து! எச்சரித்திருக்கிறான்!'' என்று அஞ்சிக் கலங்கினாள் அவள்.

''இல்லை, திலோ. நீ நினைப்பது போலில்லை. ஆனால்... எனக்கு வேறு விதமாய் ஒரு யோசனை தோன்றியிருக்கிறது. அதன்படி, திலோ, நான் சொல் வதைக் கவனி. அந்தக் கடத்தல்காரன் போன் பண்ணி னால்... பண்ணுவான். பணம் வேண்டும் அல்லவா? கட்டாயம் பண்ணுவான். அவனிடம் விவரம் கேட்டுக் கொள். பணத்தை எப்படித் தரவேண்டும். அதேசமயம் நம் பிள்ளையை எப்படித் தரப் போகிறார்கள் என்றெல் லாம். கூடவே, ஓரிரு நாட்கள் அவகாசமும் கேள். சென்னையில் பணம் தயார் செய்து கொண்டு வருவதாக என்று காரணம் சொல்லு. கூடவே, ஜீவனுக்கு ஒரு சின்ன துன்பம் செய்தாலும் அவர்கள் கதி அவ்வளவுதான். அத்தோடு ஒரு பைசா கூடக் கிடைக்காது என்பது போல மிரட்டியும் வை. பணம் பற்றிச் சொன்னால்தான், அவர்களுக்கு மனதில் படும். பிள்ளையை ஒழுங்காகப் பார்ப்பார்கள். அவனுக்கு ஏதாவது என்றால், நான் சும்மா விடமாட்டேன், முதலில் பணமே கொடுக்கமாட்டேன் என்று நான் சொன்னதாக, என்மேல் பழியைப் போட்டுவிடு. பிள்ளைக்கு உரிய ஆகாரம் கொடுக்கச் சொல்லு.

''உன்னைத் தேடினாலும்... தேடுவான்தான். ஆனால், அவர்களுக்கு அறிமுகம் ஆனவர்கள் என்பதால், அத்தோடு பள்ளிக்கு வரும் பிள்ளைகளுடைய பெற்றோர், வேலையாட்கள் என்று நிறையப் பேரோடு பழகிறவன் ஜீவா. அதனால், அதிகம் பயப்பட மாட்டான் என்று... நம்புவோம். என்பதையும் ஒரு நாள் சகித்துத்தான் ஆகவேண்டும் வேறு வழியில்லை! அதற்குள் செல் வத்தை இங்கே வரவழைத்து ஒரு நாடகம் ஆடி, மகனை மீட்போம்.

''டாக்டர் சென்னையிலிருந்து, இன்று கிளம்பி வருவ தாகச் சொல்லியிருந்தார். இப்போது கூடவே செல்வத்தை கூட்டி வரச் சொல்கிறேன். எதற்கும், நான் பணத்துக்கும் ஏற்பாடு செய்து விடுகிறேன். கடவுளை நம்பி, நம்மால் இயன்றது எல்லாம் செய்வோம். கூடவே...'' என்று மனைவியின் கையைப் பற்றி ''பயப்படாமல் இருக்கவும் முயற்சி செய்வோம்'' என்று முடித்தான்.

''குணா...!'' என்ற கதறலோடு, பற்றிய அவனது கையில் முகம் புதைத்தவள், பெரிய மூச்சுகளை எடுத்துத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு நிமிர்ந்தாள்.

தைரியத்தைக் கூட்டிக்கொண்டு ''எல்லாம் நல்லபடி யாக நடக்கும் என்று நம்புவோம், குணா. ஆனால் செல்வம் அண்ணனை வைத்துத் திட்டம் போடுகிறீர்கள்! அண்ணனால் எதுவும் முடியுமா என்று... அதுதான் கொஞ்சம் யோ...சனையாக இருக்கிறது!'' என்றாள் சந்தேகமும், கவலையுமாக.

சட்டென முகம் தெளிவுற ''உன் அண்ணனைச் சமீபத்தில் நீ பார்க்கவில்லை அல்லவா? பார்த்திருந்தால், அவனால்தான் வேலை நடக்கும் என்று நீயே சொல்லு வாய். கவலைப்படாதே. முதலில் நம் டாக்டரைப் பிடிப் போம்'' என்று தன் செல்லை எடுத்தான் குணசேகரன்.



குணசேகரனின் திட்டத்தை முழுதாகக் காது கொடுத்துக் கேட்கக் கூட டாக்டர் சிதம்பரம் முதலில் மறுத்தார்.

''இப்போதுதான். அந்த குழியிலிருந்து செல்வம் மீண்டு வந்திருக்கிறான். அதற்கு எவ்வளவோ உதவி செய்துவிட்டு, மறுபடியும் அதே குழிக்குள் நீங்கள் தள்ளினால் எப்படி? இதை நான் ஒத்துக் கொள்ளவே மாட்டேன்!'' என்று ஒரே பிடியாக நின்றார்.

அவர், அவருடைய மகளை நினைக்கிறார் என்பது, கணவன், மனைவி இருவருக்குமே புரிந்தது! அவர்கள் நிலையும் அதுதானே? பிள்ளைக்காகப் பார்ப்பது!

பொறுமையாக, உள்ள நிலைமையை எடுத்துச் சொன்ன பிறகும், ''இதெல்லாம் பழைய வாசனை இல்லவே இல்லாமல், மாதக் கணக்கில் கட்டுப்பாட்டில் வைத்திருந்தால்தான், நிரந்தரமாகப் பலிக்கும். அப் போதுமே, சிலது பின்னடிப்பதுண்டு. ஆனால் நீங்கள் நேரே அந்த சூழ்நிலைக்கே அதுவும், அதே கும்பலிடமே அனுப்பப் போவதாகச் சொன்னால் எப்படிச் சம் மதிப்பது?'' என்று அப்போதும் அவர் ஒத்துக் கொள்ள வில்லை.

இவரிடம் பேசிப் பயன் இல்லை என்று இருவரும் நளினியைப் பிடித்தார்கள்.

அவள் தந்தையிடம் அடித்துப் பேசினாள். ''எனக்கு நம்பிக்கை இருக்கிறது, அப்பா! செல்வம், இனி பழைய

மாதிரித் தப்பு பண்ணவே மாட்டார். என்னிடம் சத்தியம் பண்ணித் தந்திருக்கிறார்! சத்தியத்தை மீறினால், நான் திரும்பிக் கூடப் பார்க்கமாட்டேன் என்று அவருக்குத் தெரியும். அதுவே அவருக்குப் போதும்! நீங்கள் தைரிய மாகச் செல்வத்தை கூட்டி வாருங்கள்!'' என்று தந்தைக்கு உத்திரவு போட்டாள்.

அவர் சம்மதிக்கும் வரை, அவள் விடவில்லை.

அவளது கரங்களைப் பிடித்துக் கொண்டு, திலோ கண்கலங்கவும் ''என்ன திலோக்கா. நீங்கள்! எந்தவிதமான பிரதிபலனும் கருதாமல், குணா அண்ணா எங்களுக்கு உதவி செய்தார். இப்போது அவருக்குக் கைமாறு செய்ய எங்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தால், அதை செய்யாமல் விடுவோமா? அதற்காக ஜீவாக் குட்டிக்கு இப்படி ஒரு ஆபத்து நேர்ந்திருக்க வேண்டாம்! ஆனாலும் செல்வம் அவனைக் காப்பாற்றிவிடுவார். கவலைப்படாதீர்கள்!'' என்றாள் நளினி ஆறுதலாக திடமாகவும் கூட!

செல்வம் மறுபடியும் திசை மாறினான் என்றால், அப்புறம் அவர் காட்டுகிற பையனுக்குக் கழுத்தை நீட்டியாக வேண்டும் என்று மகளுக்குச் சிதம்பரம் நிபந்தனை இட்டிருந்தார் என்று அறியவும், திக்கென்று இருந்தது, திலோத்தமாவுக்கு.

அண்ணன், அன்பாக இந்த பெண் இருவர் வாழ்வை யும் நாசமாக்குகிறோமோ என்று, இன்னொரு கவலையும் நெஞ்சில் சுமையாகச் சேர்ந்தது.

ஆனால், நளினி தைரியமாக இருந்தாள். ''உங்கள் அண்ணன் முழுதாகக் கெடக் காரணமே, என் கவலையும் சேர்ந்ததுதானே, திலோக்கா? அப்பாவின் இப்போதைய



நிபந்தனையும் சேர்ந்து, அவரை எந்தத் தப்பும் செய்ய விடாது! ஒன்றும் பயப்படாதீர்கள். நல்லதே நடக்கும்!'' என்று மற்றவளைத் தேற்றினாள்.

குணசேகரனும் நம்பிக்கை காட்டவே, கொஞ்சம் அமைதியுற்றாள் மனைவி.

ஆனாலும் உள்ளூர நடுக்கம்தான். பதைப்புதான்!

குணசேகரன் ஏற்பாடு செய்திருந்த காரோட்டி, செல் வத்தையும், சிதம்பரத்தையும் நள்ளிரவிலேயே கூட்டி வந்து சேர்ந்துவிட்டான்.

''நல்லதுதான் யார் கண்ணிலும், எதேச்சையாகக் கூடப் பட்டிருக்க மாட்டார்கள்'' என்றான் குணசேகரன்.

''ஓகோ, அதற்காகத்தானா? வீட்டுக்கு வருமுன் ஒரு காபி குடிக்கக் கூட, உங்கள் டிரைவர் விடவில்லை. அத்தான்'' என்றான் செல்வம்.

''ஆமாம்ப்பா, தற்செயலாகக் கூட அவர்கள்... அவர் களுக்குத் தெரிந்த யார் கண்ணிலும் கூட, நீ பட வேண்டாம் என்று நினைத்தேன்!'' என்றான் குண சேகரன். ''எவர்கள்'' என்று மைத்துனன் கேட்டதை ஒதுக்கி, ''காபி வேண்டுமானால், இங்கேயே... நானே போட்டுத் தருகிறேன். தனியே இருந்ததில் போட்டுப் பழகிவிட்டேன்'' என்று சமையலறைப் பக்கமாகத் திரும்பினான்.

''இல்லை வேண்டாம். நானே...'' என்று எழுந்த திலோத் தமை நின்று ஒரு கணம் கணவனைப் பார்த்தபோது, அந்தக் கண்ணில் எல்லையற்ற சோகம் இருந்தது.

மகனுக்காக மட்டுமானது இல்லை, அது! பாவம் அவளுக்கும் நினைவு வருகிறது!

ஆனால் அதற்குள் ''திலோ, நில்லம்மா. எனக்குக் காபி வேண்டாம். இங்கே வா, என்ன, இப்படிப் பாதியாகி விட்டாய்! என்ன பிரச்சினை? அம்மாவா?'' என்று தங்கையின் அருகில் வந்து, அவள் கையைப்பற்றித் தட்டிக் கொடுத்தவாறு கேட்டான், செல்வம்.

ரொம்ப காலமாகவே அன்னியனாகிப் போயிருந்த அண்ணனின் கனிவில், திலோத்தமையின் கண்கள் கலங்கின.

மகனின் நினைவு, மேலும் நெஞ்சைக் கலக்க ''டாக்டர் அங்கிள் சொல்லவில்லை?'' என்று கம்மிய குரலில் கேட்டாள் அவள்.

''இல்லையே! ஏதோ பிரச்சினை, உன் உதவி தேவையாம் என்று மட்டும்தான் சொன்னார். அம்மாவோ என்று நினைத்தேன். ஆனால், எப்போதும் என்னைவிட நீ சொல்வதைத்தானே, அம்மா கேட்பார்கள் என்று யோசனை எனக்கு. என்ன விஷயம்மா? அம்மாதானா? ரொம்பத் தொந்திரவா? அல்லது...'' என்று கேள்வியாகப் பார்த்தான்.

''இல்லண்ணா, இது, அம்மா இல்லை. இப்போது...'' என்று அவள் சிரமத்துடன் சொல்லத் தொடங்கியபோது, காபி வாசனை வந்தது.

கூடவே, ''அதைப் பற்றி நான் சொல்கிறேன். முதலில் எல்லோரும் காபி குடியுங்கள். என் காபி!'' என்று காபி ட்ரேயை ஏந்தியவாறு நளினி வந்தாள்.

முகம் மலர, ''ஏய் நளின்! நீ, எங்கே இங்கே? அதுவும் இந்த நேரத்தில்? டாக்டர் மாமா சொல்லவே இல்லையே!'' என்று ஆவலாகக் கேட்ட வண்ணம், காபித் தட்டை வாங்கி, டீபாய் மீது வைத்தான் செல்வம்.



அவள் நேராகப் பார்க்கவும், முகம் மாறி ''ஏதேனும் பெரிய பிரச்சினையா?'' என்று எல்லோர் முகங்களையும் மாறி மாறிப் பார்த்துக் கேட்டான்.

ஒவ்வொருவருக்கும் திலோத்தமா காபியை எடுத்துக் கொடுக்க, விவரம் சொல்லும் பொறுப்பை, நளினி ஏற்றுக் கொண்டாள்.

கேட்டு முடித்ததும் ''கடவுளே! எல்லாம் என் அசட்டுத் தனத்தினாலா? அவர்கள், அவர்கள் என்றது இவர்களைத்தானா? ஐயோ! திலோ, சாரிம்மா! என்னால் நேர்ந்ததை, நான்தான் சரி செய்ய வேண்டும். கட்டாயம் செய்வேன்! நேரில் போய் அவர்களைப் பிடித்து, உதைத்து... ஊகூம், கூடாது. ஜீவாப் பையன், அவர்களிடம் மாட்டிக் கொண்டிருக்கிறானே! அத்தான், இப்போது என்ன செய்யலாம். சொல்லுங்கள், செய்கிறேன்!'' என்று தங்கை கணவரிடம் கேட்டான் செல்வம்.

அத்தான், அத்தான் என்று, அவன் குணசேகரனை மரியாதையுடன் அழைத்துப் பேசிய விதம், திலோத்தமாவுக்குப் புதுமையாகவும், கூடவே ஆறுதலாகவும் இருந்தது!

ஒரு பெருமூச்சுடன் இருக்கையில் அமர்ந்த டாக்டரும் ''இப்போது விவரம் சொல்லுங்கள், குணசேகர். நீங்கள் சொல்வது நடக்கும் என்கிற நம்பிக்கை இப்போது எனக்கும் வந்திருக்கிறது!'' என்றே இயம்பினார்.

தன் திட்டத்தைக் குணசேகரன் விவரித்து முடிக்கும் வரை யாரும் குறுக்கிடவில்லை.

இவன் சொல்லி முடித்த பிறகு ''நீங்கள் ஜீவாக் குட்டியோடு, நல்லபடியாகத் திரும்பி வருவீர்கள் என்ற நம்பிக்கை, எனக்கு நூறு சதவீதம் இருக்கிறது, செல்வா!'' என்றாள் நளினி.

''கட்டாயம்'' என்றான் அவனும்.

''எதிராளியை எப்போதும் குறைத்து மதிப்பிடக் கூடாது. அவர்கள் இருவரும், செல்வத்தை சந்தேகிக்க லாம்! தங்கை மகனுக்காக வந்திருக்கிறானோ என்று தோன்றத்தானே, செய்யும்? அவன் சொல்வது உண்மை தானா என்று உரசிப் பார்க்கலாம். செல்வத்தின் நடிப்பு உண்மை போலவே இருக்க வேண்டும் என்றால், இன் னொரு சின்ன நகாசு வேலையும் செய்தாக வேண்டும்'' என்ற சிதம்பரம், மகளுடைய காதலனை நேராகப் பார்த்தார் ''பார் செல்வம், உன்னிடம், நான் இதைச் சொல்லவே கூடாது! இப்படி ஒன்று இருப்பதாக உனக்குத் தெரியவே கூடாதுதான்! ஆனால், நேரில் பார்க்கையில், இந்தத் திலோவின் துன்பம் என்னால் சகிக்க முடிய வில்லை! அதனால் சொல்கிறேன்'' என்று தொடங்கிச் சொன்னார்.

''உன் சிகிச்சையின்போது, உனக்குத் தினமும் ஒரு மருந்து தந்திருப்பார்கள். அதன் விளைவுகள் பற்றி, உனக்குச் சொல்லியும் இருப்பார்கள். அந்த மருந்துச் சத்து, உன் உடலில் இருக்கும் வரை மது அருந்தினால், உனக்கு கிட்டதட்ட 'ஹார்ட் அட்டாக்' மாதிரி வரும்! அந்த வலி, வேதனைக்கு பயந்தே, குடிக்கமாட்டார்கள் என்பது இதன் அடிப்படைக் கருத்து. ஆனால் கெட்ட சக்திகளுக்கு வலிமை அதிகம். கெட்டிக்காரத்தனமும் அதிகம். இந்தக் குடிக்கான மருந்தின் தன்மையை



மட்டுப்படுத்துவதற்கான எதிர் மருந்தை, அவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதன் பெயரை எழுதித் தருகிறேன். உன் நண்பர்களிடம்...''

''அவர்களை என் நண்பர்கள் என்று சொல்லாதீர்கள் அங்கிள்!'' என்று ஆத்திரத்துடன் குறுக்கிட்டான் செல்வம்!

லேசாக முறுவலித்து, ''இல்லையப்பா சொல்ல வில்லை! நண்பர்களாக நடித்த உன் விரோதிகளிடம் அந்த மருந்தை வாங்கி வரச்சொல்லு. அதை விழுங்கி விட்டு, அப்புறமாக, அவர்களோடு சேர்ந்து குடிக்கப் போவதாகச் சொன்னால், உன் விரோதிகள், உன்னை முழுதாக நம்புவார்கள். அது என்ன மருந்து என்று அவர்களுக்கு முதலில் புரியாவிட்டாலும், பலான மருந்துக் கடைகளில் கேட்டால், அது பற்றிய விவரம் சொல்லுவார்கள். அந்த விவரம் தெரிந்துவிட்டால், அப்புறம் உன்னை முழுதாக நம்பி விடுவார்கள்! ஆனால் ஒன்று உன்னை நம்பி நான் எழுதித் தரும் இந்த மருந்தை, இப்போதும் சரி, பின்னர் உன் வாழ்வில் எப்போதுமே பயன்படுத்தமாட்டாய் என்று எனக்குச் சத்தியம் செய்துதர வேண்டும்'' என்றார் மருத்துவர்.

''என்னப்பா நீங்கள்?'' என்றாள் நளினி ஆத்திரமாக.

''பெற்ற பாசம் கோபப்படாதே நளின்!'' என்று அவளிடம் சொல்லிவிட்டு, சிதம்பரத்திடம் திரும்பி, ''இந்தச் சத்தியத்துக்கு அவசியம் கிடையாது. அங்கிள், இந்த மருந்தை நான் ஒரு போதும் உட்கொள்ள மாட்டேன், இது எனக்குப் பிரியமான அத்தனை பேர் மீதும் சத்தியம்'' என்றான் செல்வம் உறுதியான குரலில்.

அண்ணன் செல்வமேதானா என்றிருந்தது. திலோத்த மாவுக்கு எவ்வளவு தெளிவாகப் பேசுகிறான்!

காதல் செய்யும் விந்தை! காதலுக்கு சக்தி அதிகம்தான்! ஆனால் அதைக் கூடச் சாகடித்து...

கடவுளே! வேண்டாம் இப்போது இந்த நினைவு வேண்டாம்! எண்ணித் தவிப்பதற்கு, பெரிய விஷயம் இருக்கிறது...

மறுபடியும் ஓர் ஆறுதல் பெருமூச்சுடன், சிதம்பரம் பேசினார். ''நீங்கள் செய்யப் போவது எல்லாம் சரிதான். ஆனால், இன்னொரு தரம், அவர்கள் இதுபோல முயற்சி செய்யாமலும் தடுத்தாக வேண்டும். இந்தப் பக்கம் திரும்பிப் பார்க்கும் துணிவே, அவர்களுக்கு வரக்கூடாது! என்னிடம் சிகிச்சை பெற்றுப் பிழைத்த காவல் துறை பெரிய அதிகாரி ஒருவர் இருக்கிறார். ஜீவாவை மீட்ட பிறகு, அவரைக் கொண்டு, அந்தப் பயல்களைக் கொஞ்சம் மிரட்டி வைப்போம்'' என்றார் அவர்.

''கொஞ்சமில்லை அங்கிள், நிறைய! நிறைய மிரட்ட வேண்டும்!'' என்றாள் திலோத்தமா.

என்னதான் இலகுவாகப் பேசியபோதும், எல்லோருக் குமே அடி மனதில் ஓர் அச்சம் இருக்கத்தான் செய்தது.

குழந்தை கைக்குக் கிடைக்கும் வரை, நிம்மதி வராது தானே?

அவன் இப்போது என்ன நிலையில் இருக்கிறானோ? உண்டானோ? உறங்கினானோ?

அம்மாவைக் காணாமல், அழுது தவித்தானோ? அடி உதை வாங்கினானோ?



கற்பனை எங்கெங்கோ ஓடக்கூடும்?

அத்தனையும் மருட்ட, சமாளிக்க முடியாமல், கண வனின் அருகிலேயே உட்கார்ந்துவிட்டாள் திலோத்தமா.

நாளையக் கதை எப்படி வேண்டுமானாலும் முடியட் டும். இன்று அவன் துணையின்றி, அவளால் சமாளிக்க முடியாது!

'தொலையாப் பகலே, முடியா இரவே' என்று வேறெ தற்கோ சொல்லுவார்கள்.

ஆனால், அன்றிரவு முடியாமல் நீண்டுகொண்டே போவது போலத்தான், அங்கிருந்த அனைவருக்கும் தோன்றியது.

நல்லவேளையாகத் தாயாரை மருத்துவமனையிலே வைத்திருக்க, குணசேகரன் ஏற்பாடு செய்தான் என்று, ஒரு தரம் எண்ணிக் கொண்டாள், திலோத்தமா. தாயார் மட்டும் இங்கே இருந்திருந்தால், ஆஊ என்று ஆர்ப் பாட்டம் பண்ணியிருப்பாள்! அவளைச் சமாதானப்படுத் துவதே எல்லோருக்கும் பெரும்பாடாகிப் போயிருக்கும்!

பெறறவள் பக்கத்தில் இல்லாதிருப்பதே ஆறுதலாக இருக்கிறதே என்று எண்ணிப் பெருமூச்செறிந்தாள் மகள்.

செல்வம் கிளம்புகிற நேரம் ஒருவழியாக வந்தது!

ஆனால் அதற்குள் கடத்தல்காரர்கள் போன் செய்து, பணத்தைக் கேட்டார்கள்.

கொடுத்து வைத்த மாதிரிக் கேட்பதைப் பார் என்று ஆத்திரம் வந்தபோதும், அதைப் பின்னுக்குத் தள்ளிக் கொண்டு, மகனுடைய கவலை பூதாகாரமாக எழுந்தது!

மகன் சாப்பிட்டானா, என்ன உண்டான், உறங்கினானா என்று அவள் கேட்கக் கேட்க, கடத்தினவர்களுக்கு ஆத்திரம் வந்தது.

இதுவே 'பரம்பரை ஆண்டி' என்பார்களே, அதுபோலக் கடத்தலையே தொழிலாகக் கொண்டவர்கள் என்றால், இந்தக் கவலையும், பயத்தையும் வெற்றிக்குறியாக எண்ணி மகிழ்ந்திருப்பார்கள்.

ஆனால், இந்தப் 'பஞ்சத்து ஆண்டி'களுக்கு இவள் பணத்தை பற்றிச் சொல்லாமல், நேரத்தை வீணாக்கு கிறாளே என்று, எரிச்சல்தான் வந்தது!

''பணம் ரெடியா? முதலிலே, அதைச் சொல்லு'' என்று எரிந்து விழுந்தான் ஒருவன்.

குணசேகரன் சொன்னது போலப் பணம் தயார் பண்ண ஒரு நாள் அவகாசம் கேட்டாள் அவள்.

மகனின் நலம் பற்றி, அவள் பேசியதை இடைவெட்டி ''என்னது? இன்னும் ஒரு நாளா? அதுவரை, இந்தக் குட்டிப் பிசாசுக்குச் சாக்கலேட்டும், ஐஸ்கிரீமுமாக எவ் வளவு செலவு பண்ணுவது?'' என்று ஆத்திரப்பட்டான் அவன்...!

''ஐயையோ, சாக்கலேட்டும் ஐஸ்கிரீமுமா? அதெல் லாம் நிறைய சாப்பிட்டால் ஜீவாவுக்கு உடம்புக்கு ஆகாதே! அதைவிட, நல்ல பிஸ்கட் ஏதாவது...''

''ஆமாம்மா! உன் வீட்டில் போல, பாதாம், முந்திரியும் கிரீமுமாகப் பிஸ்கட் வாங்கி, அவனுக்குக் கொட்டு கிறோம்! இங்கே பணம் மரத்தில் விளைகிறது பார்! பொறு...'' என்று ரிசீவரின் வாயைப் பொத்திக் கொண் டான் பேசியவன்.



அவனுடைய கூட்டாளி ஏதோ சொல்லியிருக்க வேண்டும்!

சற்றுப் பொறுத்து மறுபடியும் பேசினான் ''சரி சரி. வெட்டிப் பேச்சு வேண்டாம். உன் புருஷனைச் சீக்கிர மாகப் பணத்தைத் தயார் பண்ணச் சொல்லு! என்ன பெரிய பணக்காரனாகிக் கிழித்தான், அவன்? இன்னும் ஒரே ஒரு நாள்தான் அவனுக்கு அவகாசம். பணத்துக்கு ஏற்பாடு செய்யாவிட்டால், அப்புறம் மகனைப் பிண மாகத்தான் பார்க்க வேண்டும் என்று சொல்லு!'' என்ற மிரட்டலோடு, ''அப்படிச் சொல்லதே'' என்று திலோத் தமா கதறிக் கொண்டிருக்கும்போதே வைத்து விட்டான்.

என்ன, என்ன என்று கேட்ட மற்றவர்களுக்குப் பதில் சொல்லுமுன், சில பெரிய மூச்சுக்கள் எடுக்க வேண்டி யிருந்தது அவளுக்கு.

''ஜீவாவை என்னமாவது செய்வேன் என்று பூச்சி காட்டி மிரட்டினானாக்கும்?'' என்று சற்று அலட்சியமாகக் கூறிய குணசேகரனைப் பார்க்கவும் அவள் மனம் மேலும் திடப்பட்டது.

''ஆ...மாம்'' என்றவள். லேசாகச் செருமி, தொண்டைக் கமறலை நீக்கிக் கொண்டு, தெளிவாகப் பேசினாள். ''என்னை மிரட்டிச் சீக்கிரம் பணத்துக்கு ஏற்பாடு செய்யத்தான் சொல்கிறான் என்று தெரியத்தான் செய்தது. ஆனாலும் அந்த வார்த்தைகளைக் கேட்கும்போது மனம் பதறிவிட்டது'' என்று சிறு குன்றலுடன் கூறியவள் தொடர்ந்து ''ஜீவனைக் கடத்தியவர்கள் அந்த மணியும் சாமியும் என்றுதான் கிட்டத்தட்ட நிச்சயமாகவே தோன்றுகிறது. நம் வீட்டு பிஸ்கட் பற்றித் தெளிவாகச்

சொன்னான். நீங்கள் சொன்ன மாதிரி ஏற்கனவே அறிமுகமான அவர்களிடம் ஜீவா அழாமல் இருந்தாலும், அவன் அடையாளம் காட்ட முடியும் என்ற பிரச்சினை... பயமாகத்தான் இருக்கிறது!'' என்று முயன்று தெளிவாகவே பேசினாள்.

கை முஷ்டி இறுக, உதட்டைக் கடித்துக் கொண்டு ஒரு கணம் பேசாமல் நின்ற குணசேகரன், உடனே நிமிர்ந்து செல்வத்தைப் பார்த்தான்.

''நீ சீக்கிரமாகக் கிளம்ப வேண்டும்ப்பா. முதலில் ஏதாவது சாப்பிட்டு விடு... வேண்டாம் என்று சொல்லாதே. காலி வயிற்றுடன் எதையும் செய்ய முடியாது. திலோ, காலை உணவுக்கு வீட்டில் என்ன இருக்கிறது என்று பார். முதலில் உன் அண்ணனுக்கு ஏதாவது வேண்டும்'' என்று அவன் கூறவும், ''இலகுவாகச் சாப்பிடும்படி, இட்டிலி செய்யச் சொன்னேன்'' என்று திலோத்தமா சமையலறைப் பக்கம் சென்றாள்.

ஆண்கள் பக்கம் ஒரு பார்வை பார்த்துவிட்டு, நளினியும் எழுந்து திலோத்தமாவுடன் சென்றாள்.

''நாம் ரொம்பவும் விழிப்புடன் வேலை செய்ய வேண்டிய நேரம் இது. செல்வம்! உனக்குப் பழக்கமான எந்த இடத்திலும் இப்போது ஜீவாவை வைத்திருக்க மாட்டார்களோ என்று எனக்கு ஒரு சந்தேகம் இப்போது தோன்றுகிறது! ஒருவேளை, அவர்கள் மீது சந்தேகம் வந்துவிட்டால் அங்கேதானே, தேடுவோம் என்று யோசித்தால்? தங்கை மகன் என்று உனக்கும் தோன்றக் கூடும் என்றும்...''

''அப்படி இருந்தால், என்னை சந்திக்க எப்படி முன் வருவார்கள், அத்தான்? ஒரேடியாக ஒன்றும் தெரியாத



நிலையல்லவா ஆகிவிடும்?'' என்று கவலையோடு கேட்டான் செல்வம்.

இறுக மூடிய கைகளைப் பார்த்தபடி, ''அப்படி இருந்தால், பணத்தைக் கொடுத்துவிட்டு, எங்கள் ஜீவனை நல்லபடியாக கொடுக்கச் செய் கடவுளே என்று வேண்டிக்கொள்ள வேண்டியதுதான்!'' என்று தானும் தடுமாறினான் குணசேகரன்.

# 13



அவ்வளவு நேரமும் வெளியே சற்று உறுதியோடு இருப்பது போல காட்டிக் கொண்டாலும், அடி மனதில் இருந்து கலங்கிக் கொண்டே இருந்த பயம், இந்த இரு இளைஞர்களின் முகத்திலும் இப்போது தெரிந்தது!

அடுத்த அடி எடுத்து வைக்கத் தெரியாத அச்சமும் திகைப்புமாக ஜீவானந்தனுடைய தந்தையும் தாய் மாமனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு கலங்கி நின்றனர்.

அவ்வளவு நேரமும் ஓய்வாக ஒரு சோபாவில் படுத்திருந்த சிதம்பரம் இப்போது எழுந்து அமர்ந்து, இருவரையும் பார்த்துப் பேசினார்.

''இரண்டு பேரும் அனாவசியமாகக் குழம்பாதீர்கள். இவர்கள் ஒன்றும், ஆள் கடத்தலைத் தொழிலாகச்

செய்கிறவர்கள் அல்ல, சின்னச் சின்ன ஓட்டைகள் கூட விடாமல் யோசித்து இதைச் செய்வதற்கு! அவ்வப்போது வார்த்தைகளை விடுவதைப் பார்த்தால், அப்படி ஒன்றும் மகாபுத்திசாலிகளாகவும் தெரியவில்லை! முதலில் இவர்கள் மீது சந்தேகம் வரக்கூடும் என்று எண்ணியிருந் தால் அல்லவா, நீங்கள் நினைப்பது போலெல்லாம், அவர்கள் செய்வதற்கு? அவர்களைப் பொறுத்தவரை யில், ரொம்பக் கெட்டிக்காரத்தனமாகப் போவது போலப் பாவலா காட்டிவிட்டு, உள்ளேயே ஒளிந்திருந்து யார் கண்ணிலும் படாமல் பிள்ளையைக் கடத்திப் பெரும் பணம் பறித்துக் கொண்டு ஓடி விடுவதாகத்தான் ஐடியா. இந்தப் பணத்தைக் கொண்டு வேறே தொழில் செய்து பிழைக்கப் போவதாகத்தானே அவனும் சொன்னான்? நினைவில்லை?'' என்று அவர் கேட்கவும், இருவருமே சற்று அமைதியடைந்தனர்.

அப்போதும் கவலையாகவே, ''ஆனால், எல்லாமே ஊகங்கள்தானே டாக்டர்?'' என்று கேட்டான் குண சேகரன்.

''ஆமாம். ஊகங்கள்தான். ஆனால், இப்படி இருந்தால் இப்படி இருக்கும் என்ற ஊகத்தில்தான் எல்லாம் நடக்கிறது! இதனால்தான் இப்படி இருக்கக்கூடும் என்ற ஊகத்தில்தான் மருந்து கொடுத்து வைத்தியம் செய் கிறோம். ஏன், நீங்கள் ஊகத்தில்தானே தொழில் செய்து சம்பாதிக்கிறீர்கள்? ஊகம் சரியாக இருக்கும் போது வெற்றி கிடைக்கிறது. அதிலும் உங்கள் வெற்றிகளைப் பார்க்கும் போது உங்கள் கணிப்புகள் எப்போதும் சரியாக இருப்ப தாகத்தான் தெரிகிறது! இப்போதும், முதலில் சரியாகவே ஊகித்துவிட்டு, மகன் . பாசத்தில் தடுமாறாதீர்கள்,



குணசேகரன். குழந்தைக்கு எந்தவிதச் சேதமும் இல் லாமல் திரும்பிப் பெறுவதற்காக மட்டுமே, அதற்கான ஒரு திட்டத்தோடு, நீங்கள் செல்வத்தை வரவழைத் திருக்கிறீர்கள். அந்தத் திட்டத்தையே, கவனத்துடன் செயல்படுத்துங்கள் எல்லாம் நல்லபடியாகவே நடக்கும்!'' என்று மூத்த தலைமுறையாக, அழுத்தத்துடன் அவர் கூறியது, இளைய தலைமுறையினர் இருவருக்குமே பெரும் தென்பூட்டியது.

கூடவே, மருத்துவர் பயன்படுத்திய 'குழந்தை' என்ற சொல், அவர் முதல் தடவையாக அந்த வார்த்தை சொன்னதைக் குணசேகரனுக்கு நினைவுபடுத்தியது.

அந்த புரியாத பார்வை!

அப்போதே, விஷயத்தைத் தெளிவுபடுத்திக் கொண் டிருந்தால், இன்று இந்தத் துன்பம் நேர்ந்திராதோ என்று மனம் மறுகியதை ஒதுக்கி, அடுத்து செய்ய வேண்டியதில் கவனத்தைச் செலுத்தினான் அவன்.

செல்வமும் அவனுமாக மறுபடியும், ஒரு தடவை பேசி, திட்டத்தை நன்கு தெளிவுப்படுத்திக் கொண்டனர்.

அதன்படி, அவனது பழைய இயல்பு போலத் தோன்றக் கூடிய நேரமாகப் பத்து மணிக்குமேல், இன்னுமொரு பத்து நிமிஷங்கள் ஆன பிறகு, ஓர் ஆழ்ந்த மூச்சை எடுத்து விட்டுவிட்டு, செல்வம் தன் செல்லை எடுத்தான்.

அவனுடைய குடிப் பழக்க நண்பர்கள் இருவரும் ஒன்றாகத்தான் இருந்தனர்.

செல்வத்தின் எண்ணைப் பார்த்துவிட்டு, இருவருக் குமே ஆச்சரியம்தான். பல நாட்களாக அவன் செல்லில் கூடத் தொடர்பே கொள்ளவில்லையே!

''என் செல்லைக் கூடப் பிடுங்கி வைத்துக் கொண் டார்களப்பா. அங்கே என்னால் இருக்கவே முடிய வில்லை! பைத்தியம் பிடிக்காத குறை! நல்லவேளையாக நேற்று வேலை நேரம் மாறுகிற போது, புதிதாக ஒருவன் வந்தான். அவனும் அங்கே வேலை பார்க்கிறவன்தான். ஆனால், கொஞ்சம் பணத் தேவை அதிகம் உள்ளவன். அது பற்றிப் புலம்பினானா, சரியான ஆள் கிடைத்தான் என்று, கையில் இருந்த பணத்தை லஞ்சம் கொடுத்து, இங்கே வந்ததும், இன்னும் நிறையத் தருவதாகச் சொன்னதும் வாயைப் பிளந்துவிட்டான். அவன் மூலமாக என் சாமான்களை எடுத்துக் கொண்டு, ஒரு டாக்சியைப் பிடித்து, இங்கேயே வந்துவிட்டேன்ப்பா. எப்போதடா, உங்களோடு பழைய மாதிரி இருப்போம் என்று இருக்கிறது. இப்போதே வரட்டுமா, மணி?'' என்று, அவனது பழைய இயல்பு போலவே பேசினான் செல்வம்.

மற்ற இருவரும், ஒருவரை ஒருவர் எச்சரிக்கையோடு பார்த்துவிட்டு, ''வீட்டில் பிரச்சினை ஒன்றும் இல்லையே? அ... அதாவது, உன்னை, உன் தங்கச்சி திரும்பிப் போகச் சொல்லலியா என்று, அதைக் கேட்டேன்'' என்று ஆழம் பார்த்தான் மணி.

இந்தக் கேள்வியை எதிர்பார்த்திருந்ததால், ''என்னை, என் வீட்டில் இருந்து யார் போகச் சொல்லுவது?'' என்று எடுப்பாகக் கேட்டான் செல்வம்.

உடனேயே, பிறர் கேளாமல் சொல்வது போலக் குரலைத் தணித்து ''அப்படிச் சொல்வதற்கு, என் தங்கைக்கு என் நினைவே வந்தால்தானே? அண்ணன் ஒருத்தன் இருப்பதே மறந்துவிட்டது! அய்யோ, அவ



ளுக்கு இங்கே, பெரிய பிரச்சினையப்பா! அவளுடைய மகனைக் காணோமாம். திலோ, ஞைஞை என்று அழுதுக் கொண்டே இருக்கிறாளா, வீடு இன்னும் வெறுப்பாக இருக்கிறது. நல்ல பாரின் சரக்காகத் தண்ணி அடித்தால் தான் சரியாகும் என்று பார்க்கிறேன்!

''பாரேன்பா, எவனோ பிள்ளையைக் கடத்திக்கிட்டுப் போய், இருபதோ, இருபத்தைந்தோ லட்சம் பணம் கேட்கிறானாம். என் மச்சான் பறந்து பறந்து பணத்தை ஏற்பாடு பண்ணிட்டு இருக்கிறான். வேணும். என்னைக் கடத்திட்டுப் போய் சிகிச்சை என்ற பேரிலே அடைத்து வைத்தானில்லையா? அந்தப் பாவிக்கு நன்றாக வேண் டும். நான் எவ்வளவு கஷ்டப்பட்டேன் தெரியுமா? இப்போது அவன் முறை! படட்டும்! ரொம்ப நன்றாகவே படட்டும்!

''ஆனால், பாருப்பா. பணத்துக்கு எவ்வளவு கஷ்டப் பட்டோம்? இவ்வளவு இலகுவாக ஒரு வழி இருப்பது தெரிந்திருந்தால்; நாமே என் மருமகனைக் கடத்தி, இந்தப் பணத்தைத் தேற்றியிருக்கலாமே. விட்டுவிட்டோமே என்று இருக்கிறதுப்பா! ஆனால் நமக்கெல்லாம், அந்த அளவு புத்தி ஏது?

''சரிப்பா. ரொம்பவும் நமநம என்கிறது. நான் எங்கே வரட்டும்? உன் இடத்துக்கா? சாமி ரூமுக்கா?'' என்று இரண்டில் எது என்பது போலக் கேட்டான் செல்வம்.

''இங்கே வேண்டாம். சாமி இடத்துக்கே வாப்பா! எல்லாம் வாங்கி வைக்கிறேன்'' என்றான் மணி.

செல்லை அணைத்துவிட்டு, குணசேகரனைப் பார்த்து ''சாரி, அத்தான்!'' என்றான் செல்வம்.

''அவனை நம்ப வைப்பதற்காக, உங்களைக் கண்டபடி பேச வேண்டியதாயிற்று. இப்போது அவனோடு பேசிய தில் முக்கிய விஷயம். இரண்டு பேரும், மணி இடத்தில்தான் இருக்கிறார்கள். எனவே, அங்கேயேதான் நம் செல்லக்குட்டியும் இருப்பான் என்று நினைக்கிறேன். அதனால்தான், தன் இடத்துக்கு கூப்பிடாமல், சாமியின் இடத்துக்கு மணி என்னை வரச் சொல்லுகிறான். இரண்டு பேரின் முகவரியும், உங்களுக்குத் தந்திருக்கிறேன். இப்போதும் என்னை, முழுதாக நம்பிவிட்டானா என்று தெரியாது. அடுத்து, டாக்டர் மாமனாரின் யோசனையைப் பயன்படுத்த வேண்டும். பார்ப்போம். அத்தான், இனி நான் நேராகப் பேச மாட்டேன் 'மிஸ்டு கால்' மட்டும்தான். தயாராக இருங்கள்'' என்று ஓர் எட்டு எடுத்து வைத்தவன் சற்றுத் தயங்கி, ''அங்கிள் என் கூடவே வந்து காரில் ஏறுமுன், அந்த மருந்து பற்றி இன்னொரு தரம் சொல்கிறீர்களா?'' என்று அவரை அழைத்தான்

''எதற்கப்பா? எல்லாம் இங்கேயே சொல்லு. குழந் தைக்கு ஏதாவது என்றால், உடனடியாகச் சிகிச்சை கொடுப்பதற்காக நான் குணசேகரன் கூடவே போக வேண்டும். அதுதானே? இதையே, ஒருவர் அறியாமல் மற்றொருவராக அவர்கள் இருவருமே, ஏன் என் மகளுமே என்னிடம் சொல்லி விட்டார்கள்! நானும் தயாராக இருக்கிறேன். ஆனால், மகன் நல்லபடியாக இருக்கா விட்டால், அடியோடு பணம் கிடைக்காது என்று குண சேகரன் கண்டிப்பாக சொல்லியிருப்பதால், பெரிதாக ஒரு பிரச்சனையும் இருக்காது! அதனால் கவலைப்படாமல் போப்பா'' என்றார் அவர்.



அதன்பிறகு, எல்லாமே கிட்டத்தட்ட அவர்கள் திட்ட மிட்டபடியே தான் நடந்தது.

இதில் இன்னமும் வசதியாக, சிதம்பரம் சொன்ன மருந்தைப் பற்றி, மருந்துக் கடையில் அறிந்ததும், மணி ஒரேடியாகச் செல்வத்தை நம்பிவிட்டான்.

தங்கள் கெட்டிக்காரத்தனத்தைப் பற்றிப் பெருமை யடித்ததோடு, பிள்ளையை உடனே கொடுக்காமல் ஏமாற்றி, அவனை வைத்துக் குணசேகரனிடம் இன்னும் எவ்வளவு பணம் பிடுங்க முடியும் என்று, தங்கை கணவரின் பணநிலை பற்றி, செல்வத்திடமே ஆலோ சனை கேட்டான்.

சிதம்பரத்துக்குத் தெரிந்த போலீஸ் அதிகாரி தன் ஆட்களோடு வந்து, சாமி, மணி இருவரையும் சுற்றி வளைத்துப் பிடித்ததோடு, இன்னொரு தரம், இதுபோல ஏதாவது செய்வதாகச் சந்தேகம் வந்தாலே, 'என் கவுண்டர்' மூலம் இருவரையும் போட்டுத் தள்ளி விடப் போவ தாகவும் மிரட்டவும் இருவரும் நடுநடுங்கிப் போனார்கள்.

காலில் விழாத குறையாக மன்னிப்புக்கேட்டு, ஊரை விட்டே ஓடிப் போனார்கள்.

அவர்கள் இருவருமே பயங்கரக் குற்றவாளிகளும் அல்ல. அத்தோடு, திலோத்தமா மூலமாகப் பிள்ளையின் சுகம் பற்றிக் குணசேகரன் பலமாக எச்சரித்தும் இருந்த தால், ஜீவானந்தனின் நலத்துக்குப் பெரிதாக கேடு எதுவும் அவர்கள் செய்துவிடவில்லை!

நாள் முழுவதுமாக, சாக்கலேட்டும் ஐஸ்கிரீமுமாக அடைத்ததில் இரண்டு நாட்கள் லேசாக வயிற்று

வலியால் அவதிப்பட்டது தவிர, அவனுக்கு வேறு பாதிப்பு ஏதும் இருக்கவில்லை!

ஒரு பயங்கரக் கனவு நல்லபடியாக முடிவுக்கு வந்தது.

சின்னய்யா, ராசா, தங்கம் என்று சிறுவனைத் தொட்டுப் பார்த்து மகிழ்ந்துவிட்டு, வேலையாட்கள் அவரவர்கள் பணிகளைச் செய்யப் போனார்கள்.

வரப்போகும் திருமணம் பற்றிப் பேச என்று சாக்கு சொல்லி, சிதம்பரம் மகளையும், வருங்கால மருமகனை யும் தன்னோடு அழைத்துக் கொண்டு கிளம்பிப் போனார்.

மகளைத் தூங்க வைத்துவிட்டு வந்த திலோத்த மாவுடன் பேசுவதற்காக, வெளியே குணசேகரன் காத் திருந்தான்.

பெரிய சோபா ஒன்றில் அமர்ந்து ''உன்னுடன் பேச வேண்டும் திலோ'' என்றான்.

எதிர்பாராதது அல்ல! பேசித்தான் ஆக வேண்டும். என்ன சொல்வது என்று கூடத் திலோத்தமா, முடிவு செய்துவிட்டாள். ஆனால், அதை எப்படிச் சொல்வது என்றுதான், அவளுக்குச் சற்று தடுமாற்றமாக இருந்தது!

மனதை வெளிக்காட்டாத பாவனையுடன் சாதாரண மாகச் சென்று, அவன் எதிரே இருந்த சோபாவில் அமர்ந் தாள் அவள்.

குறிப்பாக உணர்த்துகிறாளாக்கும் என்று உள்ளூர கடுத்தபோதும், நாள் முழுவதும், கையைப் பிடித்துக் கொண்டே இருந்துவிட்டு இதென்ன என்று அவனுக்கு வேடிக்கையாகவும் இருந்தது!



மனதைக் காட்டிக் கொள்ளாமல், ''இதற்கு மேல், உன்னையும் ஜீவனையும் இங்கே விட்டுவிட்டு போக முடியாது, திலோ. அதனால், நாளை மதியத்துக்குள் உன் னால் கிளம்பிவிட முடியும் அல்லவா?'' என்று சாதாரணம் போலவே வினவினான்.

''எனக்கு இங்கே பொறுப்புகள் இருக்கின்றன, குணா. அம்மாவைப் பார்க்க வேண்டும். அவர்களைக் காலம் முழுவதும், மருத்துவமனையிலேயே இருக்கச் செய்ய முடியாது!'' என்றாள் அவள் தொடக்கமாக.

''அதற்குத் தேவையும் இல்லை. அவர்களைப் பற்றி, நானும் செல்வமும் பேசினோம். உன் அம்மாவே, இந்த ஒரு மாத மருத்துவமனைத் தனி வாசத்துக்குப் பிறகு, நிறைய மாறியிருக்கிறார்கள் என்று, தலைமை மருத்துவர் சொன்னார். இந்த மாதிரி உணவு அவர்களுக்குப் பிடித்து தான் இருக்கிறதாம். அவர்களுக்கு ஏற்றவாறு, அங்கே சில சினேகிதங்களும் கிடைத்திருக்கிறார்களாம். எல்லோரும் சேர்ந்து 'இல்லம்' ஒன்று நடத்தப் போகிறார்களாம். இவர்களும் அங்கேயே இருந்து விடுவதாக, எண்ணமாம். செல்வம் கேசைத் திரும்பப் பெற்று, அவர்களுக்குத் தேவையானதைப் பிரித்துக் கொடுத்து, ஒரு வருமானத் தையும் ஏற்படுத்திக் கொடுக்கப் போவதாக சொல்லு கிறான். அதனால் அவர்களைப் பற்றிய கவலை உனக்கு வேண்டாம்'' என்றான் குணசேகரன்.

''அம்மா மட்டுமல்ல. இந்தப் பள்ளி வேறு இருக்கிறது! மொத்தம் இருபத்தைந்து சிறுவர், சிறுமிகள் வருகிறார்கள். அவர்களை எக்கேடும் கெட்டுப் போகட்டும் என்று பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட்டுப் போய்விட, என்னால் முடியாது!''

''அதென்ன, பொறுப்பை தட்டிக் கழிப்பது? ஆனால் நீயேதான். நீ மட்டுமேதான் பொறுப்பைச் சுமக்க வேண்டும் என்றும் ஒரு கட்டாயமும் இல்லை! உனக்குப் பதிலாகப் பள்ளி பொறுப்பை நளினி பார்ப்பாள். இதற்கான நடைமுறைப் பயிற்சி எடுப்பதற்காக அவள் இங்கே வந்தபோதுதானே செல்வத்தையும் அவளையும் காதல் காந்தம் கப்பென்று ஒட்ட வைத்துவிட்டதாம்!''

கண்ணை உருட்டிக் கணவன் சொன்ன தினுசில் சிரிப்பு வந்தபோதும், சொன்ன விஷயம் அவளைச் சிக்க வைப்பது ஆயிற்றே!

சிரிப்பை மாற்றச் சீற்றத்தை வரவழைத்துக் கொண்டாள் திலோத்தமா.

''அப்புறம், அந்தப் பெண் சாதனாவிடம் என்னவென்று விளக்குவீர்கள்?'' என்றாள் அவனை வெட்டுவது போலப் பார்த்து.

மனைவியை நேராகப் பார்த்தான் குணசேகரன். ''சாதனாவிடம் நான் எதற்காக விளக்கம் தர வேண்டும்?''

''இந்தக் கேள்வியை, அந்த சாதனாவிடமே கேட்டால் சரியான பதில் கிடைக்கக் கூடும் என்று நினைக்கிறேன்?''

ஒரு நீண்ட வினாடியோ நிமிஷமோ, மனைவியைப் பார்த்தபடி பேசாமல் அமர்ந்திருந்தான் அவன்.

பிறகு, இங்கே வா'' என்று அவளை அருகில் அழைத்தான்.

''வேண்டாம்'' என்று ஒற்றை வார்த்தையில் மறுத்தாள் அவள்.



''அந்த சின்ன சோபாவில் என் மேல் இடித்துக் கொண்டு அமர்ந்து கேட்பதுதான் உனக்கு விருப்பம் என்றால், சொல்லு. நான் அங்கே வருகிறேன்'' என்று எழுவது போலக் குணசேகரன் அசைவு காட்டவும், திலோ சட்டென எழுந்துவிட்டாள்.

அவன் இருந்த சோபாவிலேயே சற்றுத்தள்ளி அமர்ந்தவளைப் பார்த்து, லேசாக முறுவலித்தான் அவன்.

''இங்கே வந்தால் எதையோ கேட்கலாம் என்றீர்கள்?''

''சொல்கிறேன், ஆனால், பொறுமையாகக் கேட்க வேண்டும்'' என்றான் அவன் ''இங்கிருந்து சென்றபின், முதலாம் ஆண்டு ரொம்பவே சிரமப்பட்டேன். திலோ, ஆனால் அயராத உழைப்பு, விடாமுயற்சி, சிதம்பரம் அங்கிள் சொன்னது போலச் சரியான ஊகங்கள், எல்லாமாக, அடுத்த ஆண்டே என்னை ஏற்றி விடலாயின. மூன்றாம் ஆண்டு, ஓரளவு உயரத்துக்கே போய்விட்டேன். ஏற்றம் தொடங்கிய சமயத்தில் தொழில் மூலமாக எனக்கு அறிமுகம் ஆனவன்தான். முகுந்தன். அப்படியே நண்பனாகவும் ஆகிப்போனான். அவனது சிபாரிசின் மூலமாகத்தான் சாதனா அவனுடைய தங்கை என்னிடம் பணியில் அமர்ந்தாள். மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக.

''இந்த மூன்று ஆண்டுகளில், என் செயலாளர் பதவிக்கு உயர்ந்தாள்.

''இரண்டு மாதங்களுக்கு முன்னதாக, அவளுடைய தந்தை தண்டபாணி என்னிடம் வந்து, என்னைத் தன் மருமகனாக்கிக் கொள்ள விரும்புவதாக சொன்னார். நம்

திருமணத்தையும் பிரிவையும், அப்போது அவரிடம் சொல்ல நேர்ந்தது.

''விவாகரத்து என்கிற வார்த்தை அவரிடம் இருந்து வந்ததுதான். ஆனால்... திலோ... இதை உணர்ச்சி வசப்படாமல், நீ கேட்க வேண்டும். ஐந்தாண்டுப் பிரிவு, அதற்கு முன் அனுபவித்த வேதனைகள்... ஏன் கூடாது என்றுதான் அப்போது, எனக்குத் தோன்றியது. திலோ, இது பழங்காலம் அல்ல! திருமணத்தை, மாற்ற முடியாத பிணைப்பாக இப்போது கருதுவது இல்லை! இந்த விடுதலை, உனக்கும் நல்லதாகவே அமையக் கூடும் என்று எண்ணினேன்.

''ஆனால், இங்கே வந்து பார்த்தபோது... ஷ், திலோ என்னடா?'' என்று மனைவியின் முகம் கன்றியது கண்டு, காரணம் கேட்டான் குணசேகரன்.

''நீங்கள் வந்த அன்றே என்னால் சமாளிக்க முடியாத நிலை! ஆனால், பரிதாபப்பட்டோ, பிள்ளைக்காகவோ என்னை நீங்கள் சகிக்க வேண்டாம்'' என்றாள் அவள் விறைப்பாக நிமிர்ந்து.

''சகிப்பதா? பைத்தியம்!'' என்றவன் சட்டென அவளை அணுகி இறுக அணைத்து, அழுந்த முத்தமிட்டான்.

''இது சகிப்பது போலவா இருக்கிறது'' என்ற கேள்வியில் கண்களில் நீர் வடியலாயிற்று அவளுக்கு.

பைக்குள் இருந்த கைக்குட்டையை எடுத்து, மென்மையாக அவளது கண்களைத் துடைத்துவிட்டு, அவன் சொன்னான் ''ஒன்று தெரியுமா? தெரியுமே ஒன்று என்று அறுவை ஜோக் சொல்லிவிடாதே. ஒரு விஷயம் தெரியுமா என்றேன்!



''அன்று உன் அம்மாவை ஐசியுவில் சேர்த்த அன்று, உனக்கு உணவு வாங்கி வரப் போனவன், ஜூஸ் பற்றி ஏதோ கேட்பதற்காகத் திரும்பி வந்தேன். நான் வருவது தெரியாமல் நீ சோர்வுடன் உட்கார்ந்திருந்தாய். ஆனால், அந்த சோர்ந்த நிலையிலும் உன்னைப் பார்க்கையில் எனக்கு ஒரு சந்தோஷம் தோன்றியது. வருத்தத்தைப் பார்த்து சந்தோஷமா, என்னடா இது என்று ஆராய்ந்த போதுதான், காரணம் புரிந்தது. உன் கையில் என் பரிசான 'பிரேஸ்லெட்' நீ அணிந்திருந்தாய்! கண்ணால் பார்க்கும் போது அவ்வளவு இதம்! அதுபற்றி ஆழ்ந்து யோசித்த போதுதான், உன் அன்புக்காக எப்படி ஏங்கியிருக்கிறேன் என்று எனக்குப் புரிந்தது! பிறகு ஒவ்வொன்றாக புரிய வைத்தன.

''இந்த முறை கிளம்பும்போதே, முகுந்தனிடம் சொல்லி விட்டுத்தான் வந்தேன். அனேகமாக, சென்னைக்கு போனதும், அவன் பார்த்து வைத்திருந்த துபாய் மாப்பிள்ளைக்கும் சாதனாவுக்கும் திருமணம் என்று, அழைப்புக் கொடுக்க அவன் வருவான் என்பது என் எதிர்பார்ப்பு'' என்று முடித்தான்.

சற்று நேரம், அவள் தோளில் சாய்ந்தவாறு அப்படியே இருந்துவிட்டு, திலோத்தமா பேசினாள். ''நீங்கள் என்னை விட்டுப் போனபோது, முதலில் எனக்கு எப்படி இருந்தது தெரியுமா? உலகமே இருட்டாகிவிட்ட மாதிரி! கூடவே ஆத்திரம்! எதற்கு ஆத்திரம் என்று தெரிந்தால், உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும்! நான் என்ன தப்பு செய்தேன் என்று என்னை விட்டு நீங்கள் பிரிந்து போகலாம் என்ற ஆத்திரம்!

''குணா, எங்கள் குடும்பம் எல்லாக் குடும்பங்களையும் போன்றது அல்ல! அன்று வரை, எனக்கு அடுத்தவர்கள் எல்லாம் செய்துதான் பழக்கம். நான் யாருக்காகவும், எதையும் செய்தது இல்லை! செய்வதற்குத்தான் வீடு நிறைய வேலையாட்கள் இருந்தார்களே! என் அம்மா... அப்பாவுக்கு அவர்கள் எது செய்தும் நான் பார்த்தது இல்லை! சும்மா 'லவ்யூ' என்பார்கள். கட்டிப் பிடித்துக் கொள்வார்கள். அதற்கு மேல் ஒருவருக்கொருவரான வாழ்க்கை ஒன்று இருப்பதே எனக்குத் தெரியாது.

''நீங்கள் சொன்னீர்களே பிரேஸ்லெட் அதுகூட அப் போது அப்பா கொடுத்தது, விலை உயர்ந்தது! அணி வதற்கு எனக்கு அழகாகவும், பெருமையாகவும் இருந்தது என்று அணிந்தேனே தவிர, உங்கள் பரிசு அன்பில் பெரியது என்று, நான் நினைத்தது இல்லை! ரொம்பக் காலம் அப்படித்தான்!

''ஜீவா உருவானதால், அந்த முதல் மாதங்களின் வேதனை வேறு!''

''விட்டுவிட்டு ஓடிப்போனவனுடைய பிள்ளை எதற்கு? என்று அம்மா அழிக்கச் சொன்னார்கள். அதைக் கேட்கும்போதே எனக்கு அழுகையாக வந்தது. அப்பா தான் என் அழுகை புரிந்து, எனக்கு ஆதரவாக இருந்தார். பிள்ளை பிறக்கட்டும் என்றார்.

''பிறகுதான், இந்தப் பள்ளி தொடங்கியப் பிறகு தான், பள்ளிப் பிள்ளைகளுடைய தாய்மார்களுடன் பேசிப் பழகப் பழகத்தான் நம் வாழ்வில் என்ன தப்பாகிப் போயிற்று என்று எனக்குப் புரிந்தது!



''கண்கெட்டப் பிறகு சூரிய நமஸ்காரம் மாதிரி, அந்த பிரேஸ்லெட் தான் நான் எப்போதும் அணிந்திருப்பது தெரியுமா?

''மீண்டும் வந்தீர்களே, அன்று உங்களைப் பார்த்ததும் எப்படி இருந்தது தெரியுமா?''

''சொல்லு!'' என்று அவள் முதுகை வருடிக் கொடுத்தான் அவன்.

''நெஞ்சில் வலித்தது! வலிதான் தெரிந்தது. இந்த வீட்டில் உங்களுக்கு நடந்த அநியாயங்கள்தான் எனக்கு நினைவு வந்தது எல்லாம்! அந்த அநியாயங்களால் நீங்கள் மனம் வெறுத்துப் போனதும்! அப்படி வெறுத்துப் போன வரை, பிள்ளையை வைத்து பிடிக்க மனம் இல்லாமல் தான்...''

''என் கண்ணில் படும்படி வெளியே விட்டு விடக் கூடாது என்று சொல்லத்தான் அவசரமாக உள்ளே போனாய் என்று ஜீவாக்குட்டியைப் பற்றித் தெரிந்ததும் ஊகித்துக் கொண்டேன்!'' என்றான் குணசேகரன்.

விழி விரித்துப் பார்த்துவிட்டு, ''அங்கிள் சொன்ன மாதிரி உங்கள் ஊகங்கள் சரியானவைகளாகத்தான் இருக்கும் போல. அப்படியானால், நீங்கள் பொய் சொல்லி சம்பாதிக்கவில்லை! புத்திசாலித்தனத்தினால்தான் சம்பாதித்திருக்கிறீர்கள். ஒத்துக்கொள்கிறேன்'' என்று முறுவலித்தாள் மனைவி.

''அதாவது, இன்னோரன்ன வார்த்தைகளால் சென் னைக்கு என்னோடு கிளம்பத் தயார் என்கிறாய்?'' என்று கண்ணில் சிரிப்போடு கேட்டான் குணசேகரன்.

பதில் சிரிப்பில் கண்கள் பளபளக்க, ''விட்டுவிட்டுப் போய்த்தான் பாருங்களேன்'' என்று தேன் சிட்டாய் தலை சரித்து திலோத்தமா சவால் விட,

''மாட்டேனே! தாயே மாட்டேன்! இனி உன்னை விட்டுப் பிரிய என்னால் முடியவே முடியாதே'' என்று நகைத்தவாறு மனைவியை ஆசையுடன் அணைத்தான் அந்த அன்புக் கணவன்.

# நேச முகம் மறக்கலாமோ



ரமணிசந்திரன்

TA02 718 AX1 Rs. 60.00